இரண்டாம் பதிப்பு

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை - 20
பக்கங்கள்: 32 | சுடர் 32 | கதிர் 151 | வள்ளுவர் ஆண்டு 2048 | சித்திரை 13 புதன்கிழமை 26.04.2017

## நாளைய கடையடைப்புக்கு ஆதரவளிக்கும் தரப்புக்கள்

**அரசியல் கட்சிகள்**

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு
சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ்
அகில இலங்கை முஸ்லிம் காங்கிரஸ்
புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சி
தமிழர் விடுதலைக் கூட்டணி

**பொது அமைப்புக்கள்**

யாழ்ப்பாணப் பல்கலைக் கழக ஆசிரியர் சங்கம்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழக அனைத்துப் பீட மாணவர் ஒன்றியம்
யாழ்ப்பாணப் பல்கலைக் கழக ஊழியர் சங்கம்
வடக்கு மாகாண தனியார் பேருந்து உரிமையாளர் சங்கம்

>> 29

### தமிழர் தாயகத்தில் நாளை கடையடைப்பு:

## பெருகி வருகிறது பேராதரவு

யாழ்ப்பாணம், ஏப். 26
தமிழர் தாயகமான வடக்கு-கிழக்கில் நாளை வியாழக்கிழமை நடத்தப்படவுள்ள கடையடைப்புப் போராட்டத்துக்குத் தொடர்ந்தும் பல்வேறு அமைப்புக்களும், அரசியல் கட்சிகளும் தங்கள் ஆதரவைத் தெரிவித்து வருகின்றன. நாளைய கடையடைப்புப் போராட்டம் வெற்றி பெறுவதற்கு அனைத்துத் தரப்பினரும் >> 27

## முல்லைத்தீவில் நாளை மாபெரும் கவனவீர்ப்பு

*காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் மாவட்டச் செயலகம் முன்பாக நடத்துவர்*

யாழ்ப்பாணம், ஏப். 26
நாளை வியா ழக்கிழமை நடைபெறும் கடையடைப்புப் போராட்டத்துக்குச் சகல தரப்புக்களையும் ஒத்துழைக்குமாறு கோரியுள்ள முல்லைத்தீவு மாவட்டக் காணாமல் ஆக் >> 28

## முடங்கியது தமிழகம்

சென்னை, ஏப். 26
தமிழக விவசாயிகளுக்கு ஆதரவாக தமிழகத்தில் நேற்று நடத்தப்பட்ட கடையடைப்பால் ஒட்டுமொத்தத் தமிழகத்தின் இயல்பு வாழ்க்கை முழுமையாகப் பாதிக்கப்பட்டது என்று இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.
ரயில் மறியல் போராட்டங்களிலும், சாலை மறியல் போராட்டங்களிலும் ஈடுபட்ட மூவாயிரம் பேர் கைது செய்யப்பட்டனர். திருவாரூரில் வீதி மறியல் போராட்டத்தில் ஈடுபட்ட தி.மு. கழகத்தினரும் அந்தக் கட்சியின் செயல் தலைவரும், தமிழக சட்டசபையின் எதிர்க்கட்சித் தலைவருமான ஸ்டாலினும் கைது செய்யப்பட்டனர். (விரிவு பக்கம்-14)

# போராட்டங்களை சமாளிப்பதற்காக இராணுவ உதவி

### தீவிரமாக ஆராய்கிறது அரசு

யாழ்ப்பாணம், ஏப்ரல் 26
அரசுக்கு எதிராகத் தொழிற் சங்கங்கள், தொழிற்சங்க நடவடிக்கையில் இறங்கும்போது மக்களுக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படாத வகையில் அந்தத் துறைகளில் சேவைகளை முன்னெடுப்பதற்காகச் சிறப்பு இராணுவச் செயலணியொன்றை உருவாக்குவது தொடர்பில் அரசு தீவிரமாக ஆராய்ந்து வருவதாக அரச தரப்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.
இதற்குரிய பொறுப்பு முன்னாள் இராணுவத் தளபதி பீல்ட் மார்சல் அமைச்சர் சரத் பொன்சேகாவிடம் ஒப்படைக்கப்படவுள்ளது. இந்தத் திட்டத்துக்கு அமைச்சரவையிலும் ஆதரவு தெரிவிக்கப்பட்டுள்ளது.
திருகோணமலை எண்ணெய்க் களஞ்சியத் தொகுதி தொடர்பாக இந்தியாவுடன் உடன்பாடு செய்து கொள்வதற்கு எதிர்ப்புத் தெரிவித்து, பெற்றோலியக் கூட்டுத்தாபன ஊழியர் தொழிற்சங்கங்கள் நேற்று முன்தினம் வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டன. இதனால் மக்களுக்குப் >> 29

## கடையடைப்புக்கு கிழக்கிலும் ஆதரவு

*அங்குள்ள காணாமற்போனோரின் உறவினர் சங்கங்கள் பகிரங்க அறிவிப்பு*

மட்டக்களப்பு, ஏப். 26
அரசினதும், பன்னாட்டுச் சமூகத்தினதும் கரிசனையை ஈர்ப்பதற்காக வடக்கு -கிழக்கில் நாளை வியாழக்கிழமை நடைபெறும் கடையடைப்புப் போராட்டத்துக்குக் கிழக்கு மாகாணத்தில், காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களின் சங்கங்களும் தங்களின் ஆதரவைத் தெரிவித்துள்ளன.
அம்பாறை மாவட்ட, காணாமல் ஆக்கப்பட்டவர்களது உறவினர்களின் சங்கத்தின் தலைவி தம்பிராசா >> 28

## மக்கள் போராட்டத்துக்கு சகலரும் ஆதரவளியுங்கள்

*மாவை எம்.பி. அழைப்பு*

யாழ்ப்பாணம், ஏப். 26
காணாமற்போனோருக்காகவும், காணி விடுவிப்புக்காகவும் போராடும் மக்கள் நாளை வியாழக்கிழமை அழைப்பு விடுத்துள்ள பொது வேலை நிறுத்தப் போராட்டத்துக்கு ஆதரவு வழங்குவதாக, இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை. சேனாதிராசா தெரி >> 28

## அம்பனில் மணல் அகழ நிபந்தனையுடன் இணக்கம்

யாழ்ப்பாணம், ஏப். 26
"யாழ்ப்பாண மாவட்டத்தில் இடம்பெறும் வீட்டுத் திட்டங்கள் மற்றும் அபிவிருத்திப் பணிகளுக்கான மணலை அம்பனில் அகழ்வதற்கு மரு >> 29

## வவுனியாவில் முழு அடைப்பு

வவுனியா, ஏப். 26
வடக்கு கிழக்கில் நாளை இடம்பெறவுள்ள கடையடைப்புப் போராட்டத்துக்கு வவுனியா வர்த்தக சங்கம் முழுமையான ஆதரவை வழங்குவது என நேற்றிரவு இடம்பெற்ற உறுப்பினர்க >> 29

## குற்றப் புலனாய்வுப் பிரிவின் கிடுக்கிப் பிடியில் பளை வாசி

*சிறுமிகளைத் திட்டமிட்டு வன்புணர்ந்தாரா?*

கிளிநொச்சி, ஏப். 26
பாடசாலை மாணவிகள் உட்பட சிறுமிகளை வன்புணர்ந்தார் என்று சந்தேகிக்கப்படும் புலம்பெயர் தமிழரான பளை வாசி தொடர்பான விசார >> 28

## தனியார் போக்குவரத்து வடக்கில் நாளை இல்லை

*கடையடைப்புக்கு ஆதரவு வழங்கும் வகையில்*

யாழ்ப்பாணம், ஏப். 26
மக்களின் கடையடைப்புப் போராட்டத்துக்கு முழுமையான ஆதரவை வழங் >> 28

## இந்தியாவுடன் பொருளாதார உடன்பாடு

*அமைச்சரவை அனுமதி*

யாழ்ப்பாணம், ஏப். 26
இலங்கைக்கும், இந்தியாவுக்குமிடையில் பொருளாதாரம்சார் புரிந்துணர்வு உடன்படிக்கையை கைச்சாத்திடுவதற்கு >> 27

## முதலில் பொதுவாக்கெடுப்பு பின்னரே ஏனைய தேர்தல்கள்

*கூறுகிறார் அமைச்சர் ராஜித*

கொழும்பு, ஏப். 26
இந்த ஆண்டு பொதுவாக்கெடுப்புத்தான் முதலில் நடத்தப்படும். அதன் பின்னரே ஏனைய தேர்தல்கள் நடைபெறும்.
இவ்வாறு சுகாதார அமைச்சரும், அமைச்சரவை இணைப் பேச்சாளருமான ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.
சுகாதார அமைச்சில் நேற்று நடைபெற்ற கூட்டத்தில் கருத்துத் >> 28

## நாடாளுமன்றத்துக்கே நிதி முகாமை உரிமை

*தலைமை அமைச்சர் ரணில் தெரிவிப்பு*



கொழும்பு, ஏப். 26
பொது மக்களின் பணத்தைநிர்வகிக்கும் உரிமம் நாடாளுமன்றத்துக்கே உரியது. கடந்த காலத் >> 28

## அக்ஷய திருதியை காரணமாக

## கடையடைப்புக்கு ஆதரவளிக்க யாழ்.வணிகர்கள் பின்னடிப்பு

யாழ்ப்பாணம், ஏப். 26
அக் ஷய திருதியையை முன்னிட்டு, நாளை நடைபெறும் கடையடைப்புப் போராட்டத்துக்குச் சில வர்த்தகர்கள் ஆதரவு வழங்கப் பின்னடிப்பதாகத் தெரிய வருகின்றது. இதனால் யாழ்ப்பாணம் வணிகர் கழகம் கடையடைப்புப் போராட்டத்துக்கு >> 29




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீதொட்டமுல்ல மக்கள் தற்காலிக வீடுகள் பெற ஒன்றரை இலட்சம் ரூபா

## அரச தலைவர் மைத்திரி உத்தரவு

கொழும்பு, ஏப். 26

மீதொட்டமுல்ல குப்பைமேட்டினால் வீடுகளை இழந்தவர்களுக்குத் தற்காலிக வீடுகளைப் பெற்றுக்கொள்வதற்கு ஒரே தடவையில் ஒன்றரை லட்சம் ரூபாவை உடனடியாக விடுவிக்குமாறு அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன அறிவித்துள்ளார்.

குப்பைமேட்டுப் பிரச்சினை தொடர்பில் கடந்த இரு வாரங்களுக்குள் ஐந்தாவது தடவையாக அரச தலைவர் தலைமையில் கூட்டம் நடத்தப்பட்டுள்ளது. அரச தலைவர் செயலகத்தில் நேற்று நடைபெற்ற கூட்டம் தொடர்பில், அரச தலைவரது ஊடகப் பிரிவினால் அனுப்பிவைக்கப்பட்டுள்ள பத்திரிகை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

குப்பைமேடு சரிந்ததன் காரணமாக இடருக்குள்ளான குடும்பங்களுக்கு தற்காலிக வீடுகளைப் பெற்றுக் கொள்வதற்காக மாதாந்தம் வழங்கப்படவுள்ள 50 ஆயிரம் ரூபாவை மூன்று மாதங்களுக்கும் ஒரேயடியாக அந்தக் குடும்பங்களுக்குப் பெற்றுக் கொடுக்குமாறு அதிகாரிகளுக்கு அரச தலைவர் பணிப்புரை விடுத்தார். தற்காலிக வீடுகளைப் பெற்றுக் கொள்வதற்குச் செலுத்தப்படவேண்டிய முற்பணப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு இதன் மூலம் எதிர்பார்க்கப்படுகிறது.

கழிவு முகாமைத்துவம் தொடர்பாக உள்ளூராட்சி நிறுவனங்கள் தயாரித்துள்ள திட்டங்களை முன்வைக்குமாறு இதன்போது அதிகாரிகளிடம் தெரிவித்த அரச தலைவர், அனைத்து மாகாண உதவி ஆணையாளர்களையும் தம்முடன் சந்திப்புக்கு ஏற்பாடு செய்யுமாறும் அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கினார்.

கழிவு முகாமைத்துவம் தொடர்பாகப் பயிற்சி மற்றும் கண்காணிப்புநடவடிக்கைகளுக்காகக் கடந்த ஐந்து வருட காலப் பகுதியில் வெளிநாடுகளுக்குச் சென்ற அதிகாரிகள் தொடர்பாக அறிக்கையைத் தமக்குச் சமர்ப்பிக்குமாறும் அரச தலைவர் சுற்றாடல் அதிகார சபைக்கு பணிப்புரை விடுத்தார்.

மீதொட்டமுல்ல குப்பைமேட்டின் நிலமை தற்போது கட்டுப்பாட்டின்கீழ் கொண்டு வரப்பட்டுள்ளதாகவும் எதிர்வரும் இரண்டு மாத காலப் பகுதியில் அது தொடர்பான இறுதி முடிவுக்கு வரமுடியும் என்றும் இங்கு கருத்துத் தெரிவித்த நகர அபிவிருத்தி அதிகாரசபை அதிகாரிகள் குறிப்பிட்டனர் - என்றுள்ளது. (த-5)

# விஞ்ஞானபாட உபகரணங்களை உருவாக்கி வழங்கியமைக்காக

## ஆய்வுகூட உதவியாளருக்கு தென்மராட்சியில் கௌரவம்



தென்மராட்சி, ஏப். 26

தனது சேவைக்காலத்தில் பெற்ற அனுபவங்களைக் கொண்டு மாணவர்களுக்குப் பயன்படக்கூடிய உபகரணங்களை உருவாக்கி வழங்கிய விஞ்ஞான பாட ஆய்வுகூட உதவியாளரைத் தென்மராட்சி கல்வி வலயம் பாராட்டிக் கௌரவித்துள்ளது.

தென்மராட்சி கல்வி வலயத்தைச் சேர்ந்த நாவற்குளி மகா வித்தியாலயத்தில் விஞ்ஞான பாட ஆய்வுகூட உதவியாளராகக் கடமையாற்றிய சின்னத்தம்பி இராசேந்திரன் என்பவர்தனது சேவைக் காலத்தில் பெற்ற அனுபவங்களைக் கொண்டு வித்தியாலயத்தில் விஞ்ஞானபாடம்கற்கும் மாணவர்களுக்கென உபகரணங்களை வழங்கி மாணவர்களின் திறனை வெளிக்கொணர வைத்துள்ளார்.

இவர் நேற்று ஓய்வு பெற்றுச் செல்வதை முன்னிட்டு தனது அனுபவத்தைக் கொண்டு உருவாக்கிய விஞ்ஞான பாட உபகரணங்களை வலயப் பாடசாலைகளின் மாணவர்களும் பெற வேண்டும் என்பதற்காக நேற்றுமுன்தினம் வலயக் கல்வி அபிவிருத்தி பிரதிக் கல்விப் பணிப்பாளர்திருமதி சி.சிவநாதனிடம் கையளித்துள்ளார்.

இந்த நிகழ்வையடுத்து விஞ்ஞான பாட மாணவர்களை ஊக்குவிக்கும் செயற்றிட்டத்தில் உபகரணங்களை வழங்கிய ஆய்வுகூட உதவியாளரை வலயம் பொன்னாடை போர்த்திக் கௌரவித்தது. தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர்சு.கிருஷ்ணகுமார் ஓய்வுபெற்ற ஆய்வுகூட உதவியாளரைப் பொன்னாடை போர்த்திக் கௌரவித்தார். (த-9)

# சைட்டத்துக்கு எதிராக காலவரையறையற்ற வேலைநிறுத்தப் போர்

## 8 தொழிற்சங்கங்கள் திட்டம்

கொழும்பு, ஏப். 26

மாலபே தனியார் மருத்துவக் கல்லூரிக்கு எதிராக அரச மருந்துகள் அதிகாரிகள் சங்கம் தலைமையில் துறைசார் எட்டு தொழிற் சங்கங்கள் மே மாதம் முதல் வாரம் தொடக்கம் காலவரையறையற்ற வேலை நிறுத்தப் போராட்டத்தில் குதிக்கவுள்ளதாக அறிய முடிகிறது.

மாலபே தனியார் மருத்துவக் கல்லூரியில் மருத்துவக் கல்வி பயிலும் மாணவர்கள் மருத்துவப் பட்டத்தை உள்நாட்டிலேயே பெறுவதற்கு எதிராக அரச மருந்துகள் அதிகாரிகள் சங்கம், அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம், அனைத்துப் பல்கலைகழக மாணவர் ஒன்றியம் என்று நாட்டின் துறைசார் பல்வேறு அமைப்புகளும், தொழிற்சங்கங்களும் போர்க்கொடி உயர்த்தியமை மாத்திரமின்றி நாடளாவிய ரீதியில் வேலை நிறுத்தப் போராட்டங்களை முன்னெடுத்த வண்ணம் உள்ளன.

இந்த நிலையில், மாலபே தனியார் மருத்துவக் கல்லூரியை நிராகரிக்க முடியாது. நாட்டுக்குத் தனியார் கல்வி அவசியம் என்று அரசு வலியுறுத்தியதுடன், அரச மருத்துவமனைகளில் மாலபே தனியார் மருத்துவக் கல்லூரியில் பயிலும் மாணவர்களுக்குப் பயிற்சியளிக்கவும், அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தால் நடத்தப்படும் போட்டிப் பரீட்சையில் தோற்ற நடவடிக்கை எடுப்பதாக அறிவித்ததுடன், அதற்கு மாலபே தனியார் மருத்துவக் கல்லூரியின் உயர்பீடமும் இணங்கியுள்ளதாகக் கூறியது.

மாலபே தனியார் மருத்துவக் கல்லூரியில் மருத்துவக் கல்வியை பெற்றுவிட்டு உள்நாட்டிலேயே பட்டம் பெறுவது பொருத்தமற்றது என்பதுடன், நாட்டின் எதிர்கால சுகாதார நிலைக்கு கேடு விளைவிக்கும் என்று வலியுறுத்திப் போராட்டங்கள் தொடர்கின்றன.

மே மாதம் முதலாம் திகதி தொடக்கம் அரச மருந்துகள் அதிகாரிகள் சங்கத்துடன் துறைசார் எட்டு தொழிற்சங்கங்கள் போராட்டத்தில் குதிக்கவுள்ளன. அண்மைய காலமாக அரச மருத்துவ அதிகாரிகள் சங்கமும் தொடர்ச்சியான வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபடுகின்றமையும் குறிப்பிடத்தக்கது. (த-5)

# மே தினக் கூட்டங்களுக்கு பஸ்கள் கோரும் கட்சிகள்

கொழும்பு, ஏப். 26

மே தினக் கூட்டங்களுக்கு அனைத்து அரசியல் கட்சிகளும் இலங்கைப் போக்குவரத்துச் சபையிடம் பேருந்துகளைக் கோரியுள்ளதாக போக்குவரத்து மற்றும் சிவில் வானூர்திச் சேவைகள் பிரதி அமைச்சர் அசோக அபேசிங்க தெரிவித்துள்ளார்.

பேருந்துகளுக்கான கட்டணம் செலுத்தப்பட்ட பின்னர் அனைத்துக் கட்சிகளுக்கும் பேருந்துகள் வழங்கப்படும் என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, மேதினக் கூட்டங்களுக்காகச் சுமார் 5 ஆயிரம் பேருந்துகளை அரசியல் கட்சிகள் கோரியுள்ளதாக இலங்கை போக்குவரத்துச் சபைத் தலைவர் ரமல் சிறிவர்தன குறிப்பிட்டார்.

எனினும் 4 ஆயிரம் பேருந்துகளையே இந்தத் தேவைகளுக்காக ஒதுக்க முடியும் என்று அவர் மேலும் கூறினார். (த-5)



# உள்ளூர் உற்பத்திகளுக்கு சங்கிலியன் வளாகத்தில் சந்தை வாய்ப்பு விரைவில்

## யாழ்ப்பாண மாவட்டச் செயலகம் நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஏப். 26

யாழ்ப்பாண மாவட்டச் சுயதொழில் உற்பத்திகளுக்கான சந்தைப்படுத்தல் வசதிகளைச் சங்கிலியன் பூங்கா வளாகத்தில் ஏற்படுத்துவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளன என்று யாழ்ப்பாண மாவட்டக் கலாசார உத்தியோகத்தர் இ.கிருஸ்ணகுமார் தெரிவித்தார்.

யாழ்ப்பாண பிரதேச கலாசார அதிகார சபை மற்றும் யாழ்ப்பாண , மாதர் கிராம அபிவிருத்திச் சங்கங்களின் சமாசம் ஆகியவற்றின் ஏற்பாட்டில் சுதேசிய உணவு மற்றும் உள்ளூர் உற்பத்திப் பொருள்களுக்கான சந்தை மற்றும் பாரம்பரிய விளையாட்டு விழா என்பன யாழ்ப்பாணம் அடைக்கல அன்னை ஆலய வளாகத்தில்நேற்றுமு.ப. 9மணியளவில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில்சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும்போதேஅவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

தமிழர்களின் பாரம்பரியம் மற்றும் கலைகளை வளர்ப்பதில் எமது மாவட்டம் முன்னிலையில் உள்ளது. ஆனால் எம்மவர்கள் அந்த கலைகளுக்கு முக்கியத்துவம் கொடுப்பதில்லை. ஒரு இனத்தை அழிக்க வேண்டுமானால் அவர்களின் கலாசாரத்தில் கை வைத்தால் போதுமானது. படிப்படியாக அந்த இனம் அழிந்து விடும். ஆகவே எங்கள் பாரம்பரியத்தைப் பாதுகாக்க நாம் முன்வர வேண்டும்.

சுயதொழில் முயற்சியாளர்கள் எமது மாவட்டத்தில் அதிகம் உள்ளார்கள். அவர்களுக்கான அனைத்து ஊக்குவிப்புக்களையும் நாம் வழங்கி வருகின்றோம். அவர்களுக்கான சந்தை வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்கும் முயற்சியில் மாவட்டச் செயலகம் ஈடுபட்டு வருகின்றது. நல்லூர் சங்கிலியன் பூங்கா வளாகத்தில் இதனை அமைக்க முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன என்றார்.

இந்த நிகழ்வில் கலை நிகழ்வுகளை வழங்கிய யாழ்ப்பாணம் தொன்மம் கலைக் குழுவின் கலைஞன் அ.றிரோசன் தெரிவித்ததாவது:

எமக்குரிய பாரம்பரியக் கலைகளை நாம் மறந்து விட்டோம். நாம் எமது தமிழர்களுக்குரிய பாரம்பரிய கலைகளை நாம் மேடையிலே நிகழ்த்தும் போது மக்கள் ஆச்சரியமாகப் பார்க்கின்றனர். இந்தக் கலைகள் எமக்குரியவை என்பதை அவர்கள் மறந்துவிட்டார்கள். பறை, தம்பட்டம் இவை இரண்டும் எமக்கான கலையின் அடையாளங்கள். ஆனால் இந்தப் பறை அடித்தலை ஒரு சாதியின் தொழிலாகவே மக்கள் கருதுகின்றனர். பறை அடித்தல் சாவு வீட்டுக்கு மட்டுமே உரியது என்ற ஒரு கருத்து எமது சமூகத்தில் உள்ளது. ஆனால் பறை, தம்பட்டம் இரண்டும் அன்றைய காலத்தில் எமது முன்னோர்கள் மக்களுக்குச் செய்தியை வழங்க ஒன்றுகூடவும், ஆலயத் திருவிழாக் காலங்களிலும், குழந்தையின் பிரசவத்துக்காகவும் பயன்படுத்தினார்கள்.

ஆனால் அது காலப்போக்கில் எல்லாம் மருவிவிட்டது. யாழ்ப்பாணம் குருநகர்ப் பகுதியில் அன்று குழந்தையின் சுகப் பிரசவத்திற்காக பறைஇசையைப் பயன்படுத்தினார் என்ற வரலாறு உண்டு. தொலைக்காட்சியில் வரும் அயல் நாட்டு நாடகங்களை நாம் கண் வெட்டாமல் பார்க்கின்றோம். ஆனால் எமக்கான அடையாளத்தை வெளிப்படுத்தி நிற்கும் கலைகளை மறந்துவிட்டோம்-என்றார்.

நிகழ்வில் தமிழர் பாரம்பரிய விளையாட்டுக்கள், காலை நிகழ்வுகள் நடத்தப்பட்டுப் பரிசில்கள் வழங்கப்பட்டன. (த-ரி)

# குடாநாட்டில் பெற்றோல் விநியோகம் வழமைக்கு

யாழ்ப்பாணம்,ஏப்.26

யாழ்ப்பாணக் குடாநாட்டில் எரிபொருள் விநியோகம் நேற்று வழமைக்குத் திரும்பியது.

பெரும்பாலான எரிபொருள் விற்பனை நிலையங்களில் நேற்று தேவையான அளவு பெற்றோல், டீசல், மண்ணெண்ணெய் என்பன விநியோகிக்கப்பட்டன

பெற்றோலியக் கூட்டுத்தாபனத் தொழிற்சங்கப் போராட்டம் நேற்றுமுன்தினம் கைவிடப்பட்டதை அடுத்து எரிபொருள் விற்பனை நிலையங்களுக்கான விநியோகம் நேற்றுமுதல் வழமைக்குத் திரும்பியது.

பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் காங்கேசன்துறையில் உள்ள எரிபொருள் விநியோகக் களஞ்சியத்தில் இருந்து நேற்றுக் காலை முதல் விநியோகம் ஆரம்பிக்கப்பட்டது. சகல எரிபொருள் விற்பனை நிலையங்களுக்கும் பவுசர் மூலம் விநியோகம் சீராக மேற்கொள்ளப்பட்டது.

இலங்கைப் போக்குவரத்துச் சபை யாழ். நகர டிப்போவுக்கும் நேற்றுக் காலையில் டீசல் விநியோகிக்கப்பட்டது.

இதனை அடுத்து எரிபொருள் விற்பனை நிலையங்களில் பெற்றோல், டீசல், மண்ணெண்ணெய்க்கு ஏற்பட்ட நெருக்கடி நிலை நீங்கியது.

(த-17)

# சிறப்பு நாடாளுமன்ற அமர்வு வெள்ளியன்று

யாழ்ப்பாணம், ஏப். 26

சிறப்பு நாடாளுமன்ற அமர்வு நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை சபாநாயகர் கரு ஜயசூரிய தலைமையில் நடைபெறவுள்ளது.

இதன்போது விவாதிக்கப்பட வேண்டிய விடயங்கள் சம்பந்தமாக இன்று காலை நடைபெறும் கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் முடிவெடுக்கப்படவுள்ளன.

மீதொட்டமுல்ல இடர், குப்பைப் பிரச்சினை உள்ளிட்ட விடயங்கள் சம்பந்தமாகவே நாளைமறுதினம் முற்பகல்9.30மணிமுதல் மாலை வரை சபையில் விவாதம் நடத்தப்படவுள்ளது என்று அறியமுடிகின்றது.

ஏப்ரல் மாதத்துக்குரிய நாடாளுமன்ற அமர்வு கடந்த 4ஆம் திகதியிலிருந்து 7 ஆம் திகதிவரை நடைபெற்றது. தமிழ், சிங்களப் புத்தாண்டு காரணமாக மாத இறுதி அமர்வை நடத்தாமல் மே மாதம் 2ஆம் திகதிக்குச் சபை நடவடிக்கைகள் ஒத்திவைக்கப்பட்டன. நெருக்கடி நிலைமையைக் கருத்திற்கொண்டே 28ஆம் திகதி சிறப்பு அமர்வு நடைபெறவுள்ளது. (த-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### நாங்கள் முழு ஆதரவு

# கிழக்கு மாகாண சபை உறுப்பினர் கலையரசன்

எருவில், ஏப்.26

வடக்கில் காணாமல் ஆக்கப்பட்டோரது உறவினர்களால் நாளை முன்னெடுக்கப்படவுள்ள கடையடைப்புப் போராட்டத்துக்குத் நாம் முழுமையான ஆதரவை வழங்குகிறோம். அதேநேரம் அம்பாறை மாவட்டத்தில் சகலரும் முழுமையான ஆதரவை வழங்கவேண்டும் எனக் கிழக்கு மாகாண சபை உறுப்பினர் தவராசா கலையரசன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்:

காணாமல் ஆக்கப்பட்டோரது உறவுகளின் போராட்டம் எவ்வித தீர்வுமின்றித் தொடர்ந்து கொண்டு செல்கின்றது. இந்த விடயம் பன்னாட்டு ரீதியா கவும் பேசப்பட்டு வந்தது. ஆனால் அதற்கான சரியான, உறுதியான எந்தத் தீர்வினையும் இந்த நல்லாட்சி அரசு முன்வைக்கவில்லை. இதனால் மக்கள் வீதிகளில் உட்காரவேண்டிய ஒரு துர்ப்பாக்கிய நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கின்றார்கள்.

எனவே, வடக்கு, கிழக்கில் நாளை நடைபெறவிருக்கம் கடையடைப்புப் போராட்டத்துக்கு நாம் முழுமையான ஒத்துழைப்பை வழங்குகிறோம் என்றார். (த-ய)

# கல்முனை மாணவர் பேரவை கதவடைப்புக்கு முழு ஆதரவு

எருவில், ஏப்.26

வடக்கில் காணாமல் ஆக்கப்பட்டோரது உறவின்ர்களால் நாளை முன்னெடுக்கப்படவுள்ள கடையடைப்புப் போராட்டத்துக்கு முழு ஆதரவை வழங்குவதாகக் கல்முனை மாணவர் மீட்புப் பேரவை அறிவித்துள்ளது.

இது தொடர்பாக அந்த அமைப்பின் தலைவரும் பொறியியலாளருமான கணேஸ் தெரிவிக்கையில்,

தமிழர் தாயகத்தில் கடத்தப்பட்டுக் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் தொடர்ச்சியாகப் போராட்டங்களை நடத்தி வருகின்றனர்.

எனினும், எமது உறவுகளின் போராட்டத்துக்குத் தீர்வு எதுவும் கிட்டியதாகத் தெரியவில்லை. இந்த நிலையில் நாளை நடைபெறவுள்ள கடையடைப்புப் போராட்டத்துக்கு அம்பாறை மாவட்டத்திலுள்ள ஏனைய பல அமைப்புகளையும் இணைத்துக் கொண்டு முழுமையான ஆதரவை வழங்குவோம் என்றார். (த-ய)

# கிளிநொச்சி பொது அமைப்புக்கள் கடையடைப்புக்குப் பேராதரவு

கிளிநொச்சி, ஏப். 26

வடக்குகிழக்கில் நாளை நடக்கும் கடையடைப்புக்குக் கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த பல்வேறு அமைப்புக்களும் தமது முழு ஆதரவை வழங்கியுள்ளன.

கிளிநொச்சி இரணைமடு கமக்கார அமைப்பினரும் தமது முழு ஆதரவைத் தெரிவித்துள்ளனர்.

அன்றைய தினம் மக்களின் போராட்ட இடத்துக்குச் சென்று இணைந்து கொள்வதுடன் மேலதிகமாக ஏதாவது உதவி கோரினால் அதனையும் வழங்கத் தயாராக இருப்பதாக அவர்கள் கூறினர்.

இதேபோன்று வடமராட்சி கிறிஸ்தவ ஒன்றியம், தருமபுரம் மனிதம் சர்வமத அமையம், பச்சிலைப்பள்ளி மாதர் கிராம அபிவிருத்தி சங்கம், கிளிநொச்சியைச் சேர்ந்த விளையாட்டுக் கழகங்கள் என்பன தமது ஆதரவைத் தெரிவித்துள்ளன. (த-6)

# புதிய ஜனநாயகக் கட்சி முழுமையான ஆதரவு

யாழ்ப்பாணம், ஏப். 26

கடையடைப்புப் போராட்டத்துக்கு முழு ஆதரவை வழங்குவதாக புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சி அறிவித்துள்ளது.

இது தொடர்பாக அந்தக் கட்சி அனுப்பி வைத்துள்ள அறிக்கையில்,

போரின்போது காணாமல் ஆக்கப்படவர்க்ளுக்கு உரிய பதில் வேண்டியும் சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகளை விடுவிக்கக் கோரியும் படைகளால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள தமது காணிகளை விடுவிக்க வலியுறுத்தியும் மக்கள் இரவு பகலாகப் பல இடங்களில் போராட்டங்களை நடத்தி வருகின்றனர். போராட்டத்தில் ஈடுபட்டவர்களின் அழைப்பின் பேரில் நடைபெறவுள்ள கடையடைப்புப் போராட்டத்துக்கு முழுமையான ஆதரவை வழங்குகிறோம் என்றுள்ளது. (த-8)

### நாளைய கதவடைப்புக்கு

# போக்குவரத்து துறையினரும் வர்த்தகர்களும் ஆதரவு தருக

### அமைச்சர் டெனீஸ்வரன் கோரிக்கை



யாழ்ப்பாணம், ஏப். 26

காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளாலும் காணி மீட்புப் போராட்டக்காரர்களாலும் நாளை வியாழக்கிழமை முன்னெடுக் கப்படவுள்ள கடையடைப்புப் போராட்டத்துக்குச் சகல பொது மக்களும், போக்குவரத்துத் தரப்பினரும், வர்த்தகர் சங்கங்களும், பொது அமைப்பினரும் தமது முழுமையான ஆதரவை வழங்கி போராட்டத்துக்கு வலுச்சேர்க்கவேண்டும்.

இவ்வாறு வடக்கு மாகாண போக்குவரத்து அமைச்சர் பா.டெனீஸ்வரன் கோரியுள்ளார்.

இது தொடர்பில் அவர் விடுத்துள்ள பத்திரிகை அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

எமது இனத்தின் விடிவுக்காகக் கடந்த காலங்களில் கொடுக்கப்பட்ட இழப்புக்கள் அளவுக்கதிகம். இழக்கப்பட்ட விலை மதிப்பற்ற உயிர்களுக்கு அர்த்தம் தேட வேண்டும். நாம் எல்லோரும் ஒன்று சேர்ந்து ஒற்றுமையாக ஜனநாயக ரீதியில் போராட வேண்டியது காலத்தின் தேவையாகவுள்ளது.

கூட்டு அரசு நிலைத்திருக்க வேண்டுமெனில் தமிழ் மக்களின் முக்கிய பிரச்சினைகளாகக் காணப்படுகின்ற, வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பான விவகாரம் மற்றும் தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை, படையினர் கையகப்படுத்திய காணிகள் விடுவிப்பு ஆகிய முக்கிய மூன்று பிரச்சினைகளும் உடனடியாகத் தீர்த்து வைக்கப்படவேண்டும். அவ்வாறு தீர்த்து வைத்தால் மட்டுமே தமிழ் மக்களுடைய மனங்களையும் இந்த அரசு வெல்லமுடியும்.

வலி வேதனைகளோடு நாளாந்தம் வீதிகளில் உறங்கிக் கொண்டிருக்கும் எமது மக்களின் துயர் தீர்க்க அரச தலைவரும், தலைமை அமைச்சரும் உடனடியாக முன்வரவேண்டுமென்று அமைச்சர் கோரிக்கை விடுத்துள்ளார். அபிவிருத்திகள் இன்று இல்லாவிட்டாலும் நாளை நாம் அடைந்துகொள்ளமுடியும். ஆனால் நமது உரிமைகள் நமக்கு இன்று அத்தியாவசியமானதாக இருக்கிறது. நாள்தோறும் பற்பல துன்பங்களோடு எமது தமிழ் உறவுகளது வாழ்க்கை நகர்ந்து கொண்டிருக்கிறது. இந்த முடிவற்ற அனைத்து அகிம்சைப் போராட்டங்களுக்கும் இந்த அரசு ஓர் நல்ல முடிவைக் கொடுப்பதற்கு அனைத்து மக்களதும் முழு ஆதரவும் ஒத்துழைப்பும் முக்கியமானதொன்றாகும்.

நாளை வியாழக்கிழமை நடைபெறும் கடையடைப்புப் போர்ாட்டத்துக்கு வர்த்தகர்கள், போக்குவரத்துத் துறையினர் உள்ளிட்ட சகல தரப்பினரும் ஒத்துழைக்க வேண்டும்.

இந்தத் தினத்தில் நோயாளர்கள், மாணவர்கள், அத்தியாவசிய தேவைகளை உடையவர்களுக்கு ஏற்படும் அசௌகரியங்களுக்காக வருந்துகின்றேன்.

அதேவேளை, இவ்வாறானவர்கள் சற்றுப்பொறுத்துக் கொண்டு எமது மக்களது உரிமைப் போராட்டம் வெற்றி அடைவதற்குத் தோள்கொடுக்குமாறும் மிகவும் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கின்றேன் என்றுள்ளது. (த-5)

# அரச ஊழியரும் மாணவர்களும் கடையடைப்புக்கு ஆதரவு தருக

### கிளிநொச்சிப் பிரசைகள் குழு கோரிக்கை

கிளிநொச்சி, ஏப். 26

காணாமற்போன உறவுகளுக்காக நாளை முழுநாளும் வர்த்தக நிலையங்கள்,வங்கிகளை மூடிக் கடையடைப்புப் போராட்டத்துக்கு சகலரும் ஆதரவு வழங்கவேண்டும்.

இவ்வாறு கிளிநொச்சி மாவட்ட பிரசைகள் குழு கேட்டுள்ளது.

இது தொடர்பாக அந்த அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில், கிளிநொச்சி மாவட்டத்தில் வலிந்து [illegible] களாகக் கந்தசுவாமி ஆலய முன்றிலில் கவனவீர்ப்பில் ஈடுபட்டுள்ளனர். ஆயினும் அரசு அதனைக் கண்டுகொள்ளவில்லை.

எனவே நாளை நடக்கும் கடையடைப்புக்கு அனைவரும் தமது உணர்வுபூர்வமான ஆதரவை வழங்கவேண்டியது காலத்தின் கட்டாயமாகும். நாளை முழு நாளும் வர்த்தக நிலையங்களை மூடுவதுடன் அரச, தனியார் உத்தியோகத்தர்கள் ஒருநாள் பணியைப் புறக்கணிக்கவேண்டும். [illegible]ளும் பாடசாலை செல்[illegible] ஆதரவளிக்கவேண்டும்என்றுள்ளது. (த-6)

# வடக்கு, கிழக்கு கதவடைப்புக்கு ஒத்துழையுங்கள்

### துரைரட்ணசிங்கம் எம்.பி கோரிக்கை

திருமலை, ஏப்.26

வடக்கு, கிழக்கில் நாளை 27ஆம் திகதி முன்னெடுக்கப்படவுள்ள முழு கதவடைப்புப் போராட்டத்துக்கு சகல தரப்பினரும் ஒத்துழைப்பு வழங்கவேண்டும் என்று தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைரட்ணம் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

வடக்கு, கிழக்கு தமிழர் தாயகத்தில் கடத்தப்பட்டுக் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் தொடர்ந்து 50 நாள்களுக்கு மேலாக போராடி வருகின்றனர். எனினும் இந்தப் போராட்டத்தை அரசு கண்டுகொள்வதாக இல்லை.

எனவே, அரசின் அலட்சியப்போக்கைக் கண்டித்தும், எமது உறவுகளின் போராட்டத்துக்கு வலுச்சேர்க்கும் வகையிலும் நாளை வடக்கு, கிழக்கில் மேற்கொள்ளப்படவுள்ள கடையடைப்புக்குச் சகல பொது அமைப்புக்களும், வர்த்தகர்களும் மற்றும் ஏனைய தரப்பினரும் தமது முழுமையான ஆதரவை வழங்க வேண்டும் - என்றார். (த-ய)

# அந்தணர்களும் வலுச் சேர்ப்பு

கிளிநொச்சி, ஏப். 26

வடக்கில் காணாமல் ஆக்கப்பட்டோரது உறவினர்களால் நாளை முன்னெடுக்கப்படவுள்ள கடையடைப்புப் போராட்டத்துக்கு முழு ஆதரவை வழங்குவதாகக் கிளிநொச்சி மாவட்ட அந்தணர் ஒன்றியம் தெரிவித்துள்ளது.

இது குறித்து அந்த அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில்,

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளால் முன்னெடுக்கப்படும் கடையடைப்புப் போராட்டத்துக்கு முழு ஆதரவு வழங்குவதோடு முருகனின் வாசலில் நம்பிக்கையுடன் காத்திருக்கும் உறவுகளுக்கு நற்செய்தி விரைவில் கிடைக்க இறைவனை பிரார்த்திக்கிறோம்என்றுள்ளது. (த-6)

# ஒட்டுசுட்டான் வர்த்தகர்கள் ஒத்துழைப்பு

முல்லைத்தீவு, ஏப். 26

நாளை வடக்கு, கிழக்கில் நடக்கும் கதவடைப்புக்குத் தங்கள் ஆதரவைத் தெரிவிப்பதாக ஒட்டுசுட்டான் வர்த்தகர் சங்கத்தலைவர் தெரிவித்துள்ளார்.

வடக்குகிழக்கு மாகாணங்களில் கடந்த பல நாள்களாக முன்னெடுக்கப்பட்டுவரும் மக்கள் போராட்டங்களுக்கு விரைவாகத் தீர்வுகள் வழங்கப்படவேண்டும். இதற்காக நாளை நடக்கும் கதவடைப்புக்கு ஒட்டுசுட்டான் பிரதேச வர்த்தகர்களும் முழுமையான ஆதரவை வழங்குவோம் என அவர் கூறினார். (த-7)

# அரச நிறுவனங்களும் ஆதரவு தரவேண்டும்

### கரைச்சி மாதர் அபிவிருத்திச் சமாசம் கோரிக்கை

கிளிநொச்சி, ஏப். 26

நாளை வடக்கு,கிழக்கில் நடக்கும் கடையடைப்புப் போராட்டத்துக்கு கரைச்சி கிராம மாதர் அபிவிருத்திச் சமாசம் தமது ஆதரவை வழங்குவதாகத் தெரிவித்துள்ளது.

இந்தப் போராட்டத்துக்கு அரச, அரச சார்பற்ற நிறுவனங்கள், வர்த்தக நிலையங்கள், பொது அமைப்புக்கள் என அனைவரும் முழு ஆதரவு வழங்கேவண்டும். பாடசாலைகளை மூடி ஒத்துழைக்கவேண்டும் என அவர் மேலும் கூறினார். (த-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாளை கடையடைப்புக்கு தார்மீக ஆதரவு தாருங்கள்

## ரவிகரன் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஏப். 26

கடையடைப்புப் போராட்டத்துக்குத் தார்மீக ஆதரவை அனைத்துத் தரப்பினரும் வழங்கவேண்டும். வடக்கு கிழக்கு வாழ் மக்கள் ஓரணியில் திரண்டிருக்கின்றனர் என்பதை அரசுக்கும், பன்னாட்டுச் சமூகத் திற்கும் உணர்த்தும், அவர்கள் உணரும் வகையில் நாளைய போராட்டத்துக்கு ஒவ்வொருவரும் பேராதரவை வழங்க வேண்டும். இவ்வாறு முல்லைத்தீவு மாவட்ட கிராம மற்றும் மாதர் அபிவிருத்திச் சங்கங்களின் சம்மேளனத் தலைவரும், வடக்கு மாகாணசபை உறுப்பினருமான து.ரவிகரன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித் துள்ளதாவது:

காணாமற் போனோரின் உறவுகளின் கண்ணீருக்கு விடிவு கிடைக்கவில்லை. காணி விடுவிப்பு ஆமை வேகத்தை விட மந்தமாக உள்ளது. இதற்காக மக்கள் தங் களை வருத்தி தொடர் போராட்டத்தில் ஈடு பட்டிருக்கின்றனர். ஆனால் தீர்வு என்பது எட்டாக் கனியாக அவர்களுக்கு உள்ளது. அரசுக்கும், பன்னாட்டுச் சமூகத்துக்கும் அவர்களது செவிகளுக்குள் புகுந்து சொல் லுவதைப் போல, அழுத்தமாக எடுத்து ரைப்புக்கு இந்தக் கடையடைப்புப் போராட் டம் உதவும். இந்தப் போராட்டத்துக்கான ஆதரவை ஒவ்வொருவரும் தாமாக உணர்ந்து வழங்க வேண்டும். உங்கள் வீட்டில் ஒருவர் காணாமற் போயிருந்தால், உங்கள் காணிகளை இராணுவம் பிடித்து வைத்திருந்தால் ஒவ்வொருவரும் பேசா மல் இருப்பீர்களா ? போராடுகின்ற மக் களை, உங்களில் ஒருவராக நினைத்து எல்லோரும் ஆதரவு வழங்க வேண்டும் என்றார்.

வடக்கு மாகாண சுகாதார அமைச்சரும், வவுனியா மாவட்ட இலங்கைத் தமிழ் அர சுக் கட்சியின் தலைவருமான ப.சத்திய லிங்கம், வடக்கு மாகாண சபை உறுப்பி னர் திருமதி அனந்தி சசிதரன் ஆகியோரும் கடையடைப்புப் போராட்டத்துக்கு ஆதரவு வழங்கியுள்ளனர். (த-5)

# கடையடைப்புக்கு கூட்டணியும் ஆதரவு

யாழ்ப்பாணம், ஏப். 26

காணாமற்போனோர் தொடர்பாகவும், தனிப்பட்டவர்களின் காணிகளை திருப்பி கொடுப்பதில் தாமதம் ஏற்படுவதையும் ஆட் சேபித்து வடக்கு கிழக்கு மாகாணத்தில் நாளை நடத்தப்படவிருக்கின்ற கடையடைப் புப் போராட்டத்துக்கு, தமிழர் விடுதலைக் கூட்டணி தனது முழு ஆதரவையும் வழங் கும்.

இவ்வாறு அந்தக் கட்சியின் செயலாளர் நாயகம் வீ.ஆனந்தசங்கரி அனுப்பி வைத் துள்ள பத்திரிகை அறிக்கையில் தெரிவித் துள்ளார். இந்த இரு விடயங்கள் சம்பந்த மாக உடனடி நடவடிக்கை எடுக்குமாறு தமிழர் விடுதலைக் கூட்டணி அரசை தொடர்ந்தும் வலியுறுத்தி வருகின்றது என் றுள்ளது. (த-5)

# வலி. வடக்கு மீள்குடியேற்ற சங்கமும் முழு ஒத்துழைப்பு

யாழ்ப்பாணம், ஏப். 26

வடக்கு,கிழக்கில் நாளை நடக்கும் கடையடைப் புக்கு முழுமையான ஆதரவை வழங்குவதாக வலி வடக்கு மீள்குடியேற்றப் புனர்வாழ்வு சங் கத்தின் தலைவர் அ.குணபாலசிங்கம் தெரிவித் துள்ளார். இது குறித்து அவர் தெரிவிக்கையில், பல இடங்களில் காணாமல் ஆக்கப்பட்டவர்க ளின் உறவினர்கள் இரவு பகலாக நீண்ட நாள் களாகப் போராடி வருகின்றனர். ஜனநாயக ரீதி யாகப் போராடி வரும் அவர்களின் போராட்டங் களை மதிப்பதுடன் அவர்களால் அழைப்பு விடுக்கப்பட்டுள்ள கடையடைப்பு போராட்டத் துக்கு எமது முழுமையான ஆதரவை வழங்கு கிறோம். காணாமல் ஆக்கப்பட்டவர்களின் பிரச்சினைக்கு ஒரு தீர்க்கமான முடிவு எட்டப்ப டவேண்டும்என்றார். (த-8)

# புதுக்குயிருடிப்பு வணிகர் கழகமும் ஆதரவளிப்பு

முல்லைத்தீவு, ஏப். 26

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் நாளை நடக்கும் கடையடைப்புக்கு புதுக்கு யிருடிப்பு வணிகர் கழகம் முழுமை யான ஆதரவைவழங்கும்எனப்புதுக்குடியிருப்பு வணிகர் கழகத் தலைவர் செ.செல்வச் சந்திரன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

போர் நடைபெற்ற காலத்தில் தங்கள் பிள்ளைகளைத் தொலைத்த உறவுகள் இரண்டு மாதங்களுக்கு மேலாக வடக்கு கிழக்கின் பல இடங்களில் அமைதி வழியில் தங்கள் கவனவீர்ப்புப் போராட் டத்தை முன்னெடுத்து வருகின் னர். அவர்களுக்கு உரிய பதிலை இந்த அரசு விரைந்து வழங்கவேண்டும். இதனை வலியுறுத்தி நடக்கும் கடையடைப்புப் போராட்டத்துக்கு முழு ஆதரவு வழங்குகி றோம் - என்றார். (த-7)

# ஏமாற்றும் அரசுக்கு எதிராக ஒன்றித்துப் போராடுவோம்

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் அழைப்பு

யாழ்ப்பாணம் ஏப்.26

வடக்குகிழக்கில் நாளை நடக்கும் கடைய டைப்புப் போராட்டத்துக்கு முழு ஆதரவை வழங்குவதாக யாழ்ப்பாணப் பல்கலைக்க ழக ஆசிரியர் சங்கம் அறிவித்துள்ளது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் அறிக்கையில்,

காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பில் இது வரை காலமும் காத்திருந்த உறவுகளுக்குத் தற்போதைய அரசும் ஏமாற்றத்தையே கொடுத்துள்ளது.

எனவே அரசுக்கு நெருக்குதல் கொடுக்கும் வகையில் நாளை நடக்கும் கடையடைப்புப் போராட்டத்துக்கு முழுமையான ஆதரவை வழங்குகின்றோம் எனத் தெரிவிக்கப்பட் டுள்ளது. (த-8)

# யாழ். பல்கலை. அனைத்துப் பீட மாணவர் ஒன்றியமும் ஆதரவு

யாழ்ப்பாணம், ஏப். 26

வடக்கு கிழக்கில் நாளை இடம்பெறவுள்ள கடையடைப்புக்கு முழுமையான ஆதரவை வழங்குவதாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக அனைத்துப் பீட மாணவ ஒன்றியம் நேற்று அறிவித்தது.

"கடந்த காலங்களில் காணாமல் ஆக்கப்பட்ட வர்களின் நிலை தொடர்பாக இன்றுவரை எந்தவித உரிய நடவடிக்கைகளோ அல்லது அவர்களது உறவுகளுக்கு உரிய பதில்களோ வழங்கப்பட்டிருக்கவில்லை. அவர்களது உற வுகள் சுமார் 2 மாதங்களுக்கு மேலாக முன் னெடுத்துள்ள போராட்டத்துக்கு இன்றுவரை எந்தவித பதிலும் உரிய தரப்பிலிருந்து கிடைக் கவில்லை. இந்த நிலையில் நாளை கடைய டைப்புக்கு அந்த உறவுகள் கோரியுள்ளன. அவர்களது கோரிக்கையை நாங்களும் ஏற் றுக் கொள்கிறோம்" என்று ஒன்றியம் அனுப் பியுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள் ளது. (வ-4)

# அனைத்து அமைப்புக்களும் பேராதரவு வழங்கவேண்டும்

## தமிழ் மக்கள் பேரவை வேண்டுகோள்

யாழ்ப்பாணம், ஏப். 26

வாழ்வின் அடிப்படை உரிமைகளுக்காகப் போராடிவரும் மக்களின் கோரிக்கைகளுக் கும் போராட்டங்களுக்கும் தமிழ் மக்கள் பேரவை தனது முழு ஆதரவை வழங்குகி றது. இந்த மக்களின் தன்னெழுச்சியான போராட்டங்களுக்கு அனைத்து மக்கள் அமைப்புக்களும் ஆதரவு தெரிவிக்கவேண் டும் எனவும் தமிழ் மக்கள் பேரவை கோரிக்கை விடுக்கிறது.

இது தொடர்பில் தமிழ் மக்கள் பேரவையி னால் நேற்று மாலை அனுப்பி வைக்கப்பட்ட செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருப்பதா வது,

தொடர்ச்சியாகப் பல தரப்புகளாலும் ஏமாற்றத் தைச் சந்தித்து வந்த மக்கள், தமக்கான குர லைத் தாமே எழுப்ப முன்வந்திருப்பதும், தமது கோரிக்கைளில் மிகத் தெளிவாகவும் உறுதியாகவும் இருந்து போராடுவதும், எம் அனைவருக்கும் ஒரு முன்னுதாரணமான தாகும்.

இந்த மக்களின் தொடர்ச்சியான போராட்டமா னது, தனியே இந்த மக்களுக்கானது மட்டு மல்ல. மாறாக அரச அடக்குமுறைகளால் அநீதிக்கு உட்படுத்தப்பட்ட எங்கள் அனைவ ரினதும் ஒட்டுமொத்த குறியீட்டுக் குரலாகவே நாம் இதனைக் கருதவேண்டும். மக்களின் போராட்டத்துக்கு அனைத்து மக்களும் தம்மா லான பங்களிப்பை வழங்கி, எம் மக்களின் நீதிக்கான குரல் மேலும் உறுதிப்படவும் பன் னாட்டுச்சமூகத்தின் காதுகளை எட்டவும் நாம் செயற்படவேண்டும்.

இந்த நாட்டின் அனைத்து நிர்வாகங்களுக்கும் பொறுப்பான அரச உயர்பீடமானது, ஆக்கிர மிக்கப்பட்ட மக்கள் காணிகளை விடுவிப் பதற்கான பொறுப்பைத் தட்டிக்கழித்து, அதனை இராணுவத்தின் பொறுப்பாகக் காட்ட முயற்சித்திருப்பதும், பாதிக்கப்பட்ட மக்களை, இராணுவத்தினருடன் பேச்சு நடத்த நிர்ப்பந் திப்பதும், எமது பிரச்சினையின் பரிமா ணத்தை மேலும் தரமிறக்கியிருக்கிறது.

இராணுவத்தைத் தமிழர் தாயகத்தின் பொதுக் காணிகளில் நிரந்தரமாக குடியமர்த்தும் செயலுக்குச் சம்மதித்தாலே, வன்முறைமூலம் ஆக்கிரமிக்கப்பட்ட தமது சொந்த காணிகளை மீளப்பெறமுடியும் எனும் மிக கேவலமான பேரத்துக்கு தமிழ் மக்களை அரசு தள்ளியுள்ளது. காணி தொடர்பான மக் களின் உணர்வுகளை பேரத்துக்குள்ளாக்கி, தமிழர் தாயகத்தின் இராணுவத்தின் நிரந்தர இருப்பை உறுதி செய்ய, அதுவும் எமது மக் களின் மீள்குடியேற்றத்துக்கென ஒதுக்கப்பட்ட பணத்திலேயே, ஆக்கிரமிப்பு இராணுவத்தை குடியமர்த்துவதற்கான அடிப்படை வசதிகளை செய்வது என்பது அர்த்தமுள்ள இராணுவம யநீக்கல் எனும் கோரிக்கையை அர்த்தமற்ற தாக்குகிறது.

காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளுக்காகவும் ஆக்கிரமிக்கப்பட்ட தம் நிலங்களுக்காகவும் போராட்டத்தில் ஈடுபட்டிருக்கும் மக்கள் கோரிக்கைகள் நிறைவேறும்வரை, அந்த மக்களுக்கு இடைக்கால நிவாரணமாக வாழ் வாதார உதவிகள் வழங்கப்படவேண்டும் எனும் கோரிக்கையையும் நாம் அரசிடமும் பன்னாட்டுச் சமூகத்திடமும், புலம்பெயர்ந்த எம் மக்களிடமும் முன்வைக்கிறோம்.

இந்தப் போராடங்கள் அனைத்தும் தனித்த னிப் பிரச்சினைகளுக்கான பிரத்தியேக குரல் களாக கருதப்பட முடியாதவை.எம்மீதான அடக்குமுறைகளின் விளைவுகளுக்கெதிரான ஒட்டுமொத்த குரலாகவே இவற்றை நாம் கரு தவேண்டும்.

தமிழர் தாயகமெங்கும் இந்தப் போராட்டங் கள் அனைத்தும் ஒருங்கிணைக்கப்பட்டு, ஒருமித்த குரலாக ஒலிப்பதுவே எம் கோரிக் கைகளின் வலுவை அதிகரித்து எமக்கு சாத கமான விளைவுகளையும் விரைவுபடுத்தும். இனிவரும் காலங்களில் இந்த மக்களின் போராட்டக் குரல்கள் வடக்கு கிழக்கு தழுவி யதாக ஒருங்கிணைக்கப்பட்டுப் பலம்மிக்க ஒரு குரலாக பரிணமிக்க வேண்டும் என்றுள் ளது. (த-5)

# கம்பர்மலையில் 6 பேர் மீது அடிதடிக் கும்பல் தாக்குதல்

யாழ்ப்பாணம், ஏப். 26

வல்வெட்டித்துறை கம்பர்மலையில் நேற்றிரவு கும்பல் ஒன்று 3 பெண்கள் உட்பட 6 பேர் மீது தாக்குதல் நடத்திவிட்டுத் தப்பிச் சென் றுள்ளது. காயமடைந்த 6 பேரும் ஊறணி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

"குறித்த பகுதியில் உள்ள சனசமூக நிலையம் ஒன்றில் சிரமதானப் பணி முன்னெடுக்கப்படவிருந்தது. இந்த நிலையில் நேற்றிரவு மோட்டார் சைக்கிள்களில் இரும்புக் கம்பிகள், கொட்டன்களுடன் சென்ற 4 பேர் கொண்ட கும்பல் 6 பேர் மீது தாக்குதல் நடத்தியது. அதனால் அங்கு பதற்றம் நிலவியது. இது தொடர்பில் பொலிஸா ருக்கு அறிவிக்கப்பட்டது. விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள் ளன" என்று பொலிஸார் தெரிவித்தனர். (வ-4-28)

# புலம்பெயர் புலிகளிடம் நாட்டின் பொருளாதாரம்

## நிதி அமைச்சரைச் சாடுகிறது மகிந்த தரப்பு

கொழும்பு, ஏப். 26

நாட்டின் பொருளாதாரத்தைப் புலம் பெயர் விடுதலைப் புலிக ளின் ஆதரவா ளர்களுக்குக் காட்டிக் கொடுத்து. அவர்க ளின் கட்டுப்பாட்டில் இலங்கையின் பொருளாதாரத்தைத் தள்ளும் முயற்சியி லேயே நிதி அமைச்சர் ரவி

# யாழ். பல்கலைக்கழக ஊழியர் சங்கம் முழுமையான ஆதரவு

யாழ்ப்பாணம், ஏப். 26

வடக்கு கிழக்கில் நாளை முன்னெடுக்கப்படவுள்ள கடையடைப்புக்கு ஆதரவு வழங்குவதாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஊழியர் சங்கம் அறிவித்தது.

"வடக்கு கிழக்கில் கடந்த சில மாதங்களாக காணாமற்போனோரின் உற வினர்களால் பல கோரிக்கைகளை முன்வைத்து போராட்டங்கள் நடத் தப்படுகின்றன. அந்தப் போராட்டங்களை அரசு கவனத்தில் கொள்ள வில்லை. அரசின் கவனத்தையும் பன்னாடுகளின் கவனத்தையும் ஈர்க்கும் முகமாக நாளை கடையடைப்பை முன்னெடுக்குமாறு போராட் டத்தில் ஈடுபட்டுள்ள மக்கள் அழைப்பு விடுத்துள்ளனர். அவர்களுக்கு எமது முழு ஆதரவையும் வழங்குகிறோம்" என்று யாழ்ப்பாணப் பல்கலைக் கழக ஊழியர் சங்கம் அனுப்பிவைத்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட் டுள்ளது. (வ-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தந்தை செல்வாவின் நினைவு நிகழ்வு

யாழ்ப்பாணம், ஏப். 26

தந்தை செல்வாவின் 40ஆவது நினைவு தினத்தை முன்னிட்டு தமிழர் விடுதலைக் கூட்டணி அலுவலகத்தில் இன்று புதன்கிழமை மாலை 5 மணிக்கு தந்தை செல்வா அவர்களின் உருவச்சிலைக்கு மலர்மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தப்படும். தந்தை செல்வாவின் அபிமானிகள் ஆதரவாளர்கள் அனைவரையும் அன்புடன் இந்த அஞ்சலி நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு வேண்டுகின்றோம் என்று கேட்கப்பட்டுள்ளது. (வ)

## கொடிகாமம் மத்திய கல்லூரியில் நேரப் பதிவு இயந்திரம்

தென்மராட்சி, ஏப். 26

கொடிகாமம் திருநாவுக்கரசு மத்திய கல்லூரியில் நேரப் பதிவு இயந்திரம் பொருத்தப்பட்டுள்ளது என்று கல்லூரி அதிபர் ரவீந்திரன் தெரிவித்தார்.

வடக்கு மாகாண கல்வி அமைச்சால் அனைத்துப் பாடசாலைகளிலும் நேரப் பதிவு இயந்திரம் பொருத்தப்பட்டு பாடசாலைகளில் கடமையாற்றுவோரின் கடமை நேரம் தொடர்பான பதிவுகளை மேற்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டது.

"தென்மராட்சிக் கல்வி வலயத்தின் வகை 1 ஏபி தரத்தைச் சேர்ந்த கொடிகாமம் திருநாவுக்கரசு மத்திய கல்லூரியில் நேரப் பதிவு இயந்திரம் நேற்றுமுன்தினம் பொருத்தப்பட்டு பரீட்சித்துப் பார்க்கப்பட்டது. அது தொடர்பில் அனைவருக்கும் பயிற்சிகள் வழங்கப்பட்டன. கல்லூரி இரண்டாம் தவணைக்காக இன்று ஆரம்பிக்கப்படுகிறது. இன்று முதல் நேரப் பதிவு இயந்திரத்தின் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்படும்" என்று அதிபர் மேலும் தெரிவித்தார். (வ-9)

## குற்றத்துக்கு மேல் குற்றம் செய்தவர் சிறை சென்றார்

தென்மராட்சி, ஏப். 26

ஒத்திவைக்கப்பட்ட சிறைத்தண்டனை காலம் முடிவடைவதற்கு முன்னர் மீண்டும் ஒரு குற்றச்செயலில் குற்றவாளியாக இனங்காணப்பட்டவரை இரு தண்டனைகளையும் அனுவிக்க வேண்டும் என்று சாவகச்சேரி நீதிவான் மன்று நேற்று உத்தரவிட்டது.

சாவகச்சேரி சந்தியில் உள்ள வர்த்தக நிலையமொன்றின் முகப்பில் விற்பனைக்காக வைக்கப்பட்டிருந்த 2 நைலோன் கயிற்றுப் பந்துகள் கடந்த பெப்ரவரி 24ஆம் திகதி பட்டப்பகலில் திருடப்பட்டன. திருட்டுத் தொடர்பாக வர்த்தகர் சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்தார். பொலிஸார் சம்பவ இடத்தைப் பார்வையிட்டனர். அங்குள்ள வர்த்தக நிலையம் ஒன்றில் பொருத்தப்பட்டிருந்த கண்காணிப்பு கமராவில் திருட்டுத் தொடர்பில் காணொலிப் பதிவு காணப்பட்டது.

வர்த்தக நிலையத்துக்கு வந்த நபர் நைலோன் கயிற்றுப் பந்துகள் மீது தலைக்கவசத்தை வைத்துள்ளார். வர்த்தக நிலையத்தில் உரிமையாளர் வியாபாரத்தில் ஈடுபட்ட வேளையில் கயிற்றுப் பந்துகளையும் தலைக்கவசத்தையும் அவர் எடுத்துச் செல்வதைக் காணொலியில் பொலிஸார் கண்டனர். 2 தினங்களின் பின்னர் சந்தேகநபர் சாவகச்சேரி பொதுச் சந்தையில் நடமாடியதைக் கண்ணுற்ற பொலிஸார், அவரைக் கைது செய்து மறுநாள் சாவகச்சேரி நீதிமன்றில் முற்படுத்தினர்.

வழக்கை விசாரித்த நீதிவான், சந்தேகநபரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். தொடர்ந்து நேற்று வரை அவர் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தார்.

திருட்டுக் குற்றச்சாட்டு வழக்கு சாவகச்சேரி நீதிவான் மன்றில் நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

புத்தளத்தைச் சேர்ந்த முகமட் சுல்தான் நசீம் என்ற குறித்த சந்தேகநபருக்கு ஏற்கனவே திருகோணமலை நீதிவான் மன்றால் பத்து வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட ஒரு வருட சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது என்று சாவகச்சேரிப் பொலிஸார் மன்றில் நேற்று அறிக்கை தாக்கல் செய்தனர்.

நைலோன் கயிற்று வளையங்கள் திருடிய வழக்கில் குற்றவாளியாக இனங்காணப்பட்டு அவருக்கு ஒரு வருட சிறைத்தண்டனை விதித்த நீதிவான், ஏற்கனவே திருகோணமலை நீதிமன்றால் விதிக்கப்பட்ட ஒரு வருட சிறைத் தண்டனையையும் தனித் தனியே அனுபவிக்குமாறு உத்தரவிட்டார்.

இதனால் இந்த நபர் இரண்டு வருட சிறைத்தண்டனை அனுபவிப்பார் என்று தெரிவிக்கப்பட்டது. (வ-9)

## யாழ். விவசாய நுகர்ச்சி கூட்டுறவு சங்கத்துக்கு புதிய இயக்குநர் சபை

யாழ்ப்பாணம், ஏப். 26


யாழ்.மாவட்ட விவசாய நுகர்ச்சிக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தின் இயக்குநர் சபையின் தலைவராக யாழ்ப்பாணப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் தலைவர் மு.ஜெ.சுஜிந்திரன் தெரிவானார் என்று தெரிவிக்கப்பட்டது.

யாழ்ப்பாண மாவட்டக் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் பொ.மோகன் தலைமையில் சமாசத்தின் இயக்குநர் சபை தெரிவுக் கூட்டம் கடந்த ஞாயிற்றுக்கிழமை சமாச மண்டபத்தில் இடம்பெற்றது.

போட்டிகள் எதுவும் இன்றி இயக்குநர் சபை உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டனர்.

சங்கானை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் தலைவர் ப.கேசவதாசன் சமாசத்தின் உபதலைவராகத் தெரிவு செய்யப்பட்டார். மா.செல்வராசா, சி.குமரவேல், க.இராஜசந்திரன், செ.மகேஸ்வரன், சி.இராகுலன், சி.மகேந்திரன் ஆகியோர் சமாச இயக்குநர்களாகவும் தெரிவானார்கள் என்று தெரிவிக்கப்பட்டது. (வ-17)

## ஷஷ்டியப்த பூர்த்தி



அகவை அறுபதில் - ஷஷ்டியப்த பூர்த்தி - மணிவிழா காணும் எமது கோயில் குருக்கள் **பிரம்மஸ்ரீ இராசேந்திர சுவாமிநாதக் குருக்கள்** பல்லாண்டு காலம் உடல்.உள.ஆரோக்கியத்துடன் வாழ்ந்து தனது இறைபணியைத் தொடர எல்லாம் வல்ல நீர்வைக் கந்தவேள்ப் பெருமான் பாதகமலங்களை வணங்கி அமைகின்றோம்.

**கந்தசுவாமி கோயில்,**
**நீர்வேலி.**
**26.04.2017**

**பரிபாலனசபை,**
**திருப்பணிச்சபை,**
**பொதுச்சபை.**

## நாய்களுக்கு விலங்கு விசர் நோய்த் தடுப்பூசி ஏற்றும் பணிகள் தென்மராட்சியில் ஆரம்பம்

தென்மராட்சி, ஏப். 26

சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவினரால் தென்மராட்சிப் பிரதேசத்தில் உள்ளகுடியிருப்பாளர்களின் வளர்ப்பு நாய்களுக்கு விலங்கு விசர் நோய்த் தடுப்பூசி மருந்து ஏற்றும் பணிகள் முன்னெடுக்கப்படு கின்றது என்று அறிவிக்கப்பட்டது.

"நாய்களுக்கு தடுப்பூசி ஏற்றும் நிலையங்கள் தொடர்பான அறிவித்தல் முதல் நாள் ஒலிபெருக்கி மூலம் அந்தந்தக் கிராமங்களில் அறிவிக்கப்பட்டு மறுநாள் சுகாதாரத் திணைக்கள அலுவலர்கள் அவ்விடத்தில் வளர்ப்பு நாய்களுக்கு தடுப்பூசி மருந்து ஏற்றுவர்.

கைதடிப் பிரதேசத்தில் விலங்கு விசர் நோய்த் தடுப்பூசி மருந்து ஏற்றும் பணி நேற்று ஆரம்பமானது. அங்கு தடுப்பூசி மருந்து ஏற்றல் முடிந்ததும் நாவற்குளி பிரதேசத்தில் உள்ள வளர்ப்பு நாய்களுக்கு தடுப்பூசி ஏற்றப்படும். தொடர்ந்து ஏனைய பொது சுகாதார பரிசோதகர் பிரிவுகளில் வளர்ப்பு நாய்களுக்கு விலங்கு விசர் நோய்த் தடுப்பூசி மருந்து ஏற்றப்படும்" என்று சுகாதார மருத்துவ அதிகாரி அலுவலகத்தால் தெரிவிக்கப்பட்டது.

யாழ்ப்பாண மாவட்டத்தில் நிலவும் அதிக வெப்பம் காரணமாக வளர்ப்பு நாய்களுக்கு விலங்கு விசர் நோய் ஏற்படாமல் தடுப்பதற்காக சுகாதாரத் திணைக்களத்தினர் துரித கதியில் தடுப்பூசிகள் ஏற்றி வருகின்றனர். பொதுமக்கள் அறிவிக்கப்படும் நிலையங்களுக்கு தமது வளர்ப்பு நாய்களை அழைத்துச் சென்று தடுப்பூசி மருந்து ஏற்றிக் கொள்ளுமாறும் கேட்கப்பட்டுள்ளது. (வ-9)

**கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சு ஸ்ரீலங்கா சிமெந்துக் கூட்டுத்தாபனம் கொங்கிறீற் தூண்கள் விற்பனைக்கான கேள்வி அழைப்பாணை - உரும்பிராய், யாழ்ப்பாணம்.**

**கேள்வி இல: என் எல்சிசி/ கொங்/ யாழ்/01/2017**

யாழ்ப்பாணம் உரும்பிராயில் உள்ள பின்வரும் கொங்கிறீற் தூண்கள் விற்பனைக்கு கொள்வனவாளர்களிடம் இருந்து மூடிய கேள்வி கோரப்படுகிறது.

1) 8.3 மீற்றர் ஆர்.சி.தூண்கள் (மின்னியல்) - 100 எண்ணிக்கை
2) 6.7 மீற்றர் ஆர்.சி.தூண்கள் (தொலைபேசி) - 254 எண்ணிக்கை

ஸ்ரீலங்கா சிமெந்துக் கூட்டுத்தாபனத்தின் வேம்பன் வீதி உரும்பிராய் கிளைக் காரியாலயத்தில் ரூபா 1000/= மீளப்பெற முடியாத கட்டணத்தை 26.04.2017 இல் இருந்து 05.05.2017 வரை காலை 9.30 க்கும் பி.ப 3.00 வரை செலுத்தி கேள்விப் பத்திரத்தை பெற்றுக் கொள்ளலாம்.கேள்விப்பத்திரம் முழு அளவிலோ அல்லது பகுதியாகவோ கேள்வியில் பங்குகொண்டு சமர்ப்பிக்கும் இறுதித்திகதி 05.05.2017 மாலை 3.00 மணி வரை மூடிய கேள்வியை விசேட கேள்வி பெட்டியில் வேம்பன் வீதி உரும்பிராய், யாழ்ப்பாணத்தில் நேரடியாக இடலாம் அல்லது தலைவர் ஸ்ரீலங்கா சிமெந்துக்கூட்டுத்தாபனம், வேம்பன் வீதி, உரும்பிராய், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பலாம். 05.05.2017 ஆம் திகதி பிற்பகல் 3.15 இற்கு கேள்விப்பெட்டி திறக்கப்படும்.

மேலதிக விபரங்களுக்கு தயவு செய்து கணக்காளர் ஸ்ரீலங்கா சிமெந்துக் கூட்டுத்தாபனம் தொலைபேசி 011 244 0205 அல்லது பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர் வேம்பன் வீதி, உரும்பிராய் , யாழ்ப்பாணம். தொ.பே.இல 021 321 5341 தொடர்பு கொள்ளவும்.

இறுதித் தீர்மானம் தலைவர், கேள்விச்சபை ஸ்ரீலங்கா சிமெந்துக் கூட்டுத்தாபனத்துக்கே உரியது.

**தலைவர்**
**ஸ்ரீலங்கா சிமெந்துக் கூட்டுத்தாபனம்**
**இல.27, வெர்க்சோல் மந்திரய**
**வெர்க்சோல் வீதி, கொழும்பு - 02**

(C 29581) (14)

**NORTH LANKA IIT**
இலங்கையின் தலைசிறந்த தனியார் உயர்கல்வி நிறுவனம்

UGC அங்கீகாரம் பெற்று பல ஆண்டு காலம் தொடர்ந்து வெற்றிகரமாக பல உயர்கல்வி கற்கைநெறிப் பட்டதாரிகளை உருவாக்கிக்கொண்டிருக்கும் பெருமைக்குரிய கல்வி நிறுவனம்

**Master of Education (M.Ed.)**
✓ கல்வியமைச்சின் அங்கீகாரம்
✓ பல்கலைகழக மானியங்கள் ஆணைக்குழு அங்கீகாரம்
✓ வடமாகாணக் கல்வியமைச்சின் அங்கீகாரம்
Duration: 1 Year Entry Qualification: B.Ed. / P.G.D in Edu

**B.Sc. in Physical Education And Sports**
✓ பல்கலைகழக மானியங்கள் ஆணைக்குழு அங்கீகாரம்
Duration: 1 Year
Entry Qualification: 2 Year Diploma in Physical Education from any University/ Training College/ College of Education

**Master of Business Administration (MBA)**
✓ பல்கலைகழக மானியங்கள் ஆணைக்குழு அங்கீகாரம்
Duration: 18 Months Entry Qualification: Any Degree

**Master of Public Administration (MPA)**
✓ பல்கலைகழக மானியங்கள் ஆணைக்குழு அங்கீகாரம்
Duration: 18 Months Entry Qualification: Any Degree

Contact Persons:
Mr.Kanthaiya Sivaraja, Program Co-ordinator, NLIIT, Ph: 0775532402
Dr.Sithambaram Mohan, Human Resource Head, NLIIT, Ph: 0776030507

**B.Sc. in Computer Science**
✓ UGC Approved ■ Duration: 3 Years ■ Entry Qualification: O/L or A/L

**B.Sc. in Computer Science (Top Up)**
✓ UGC Approved ■ Duration: 1 Year ■ Entry Qualification: 2 Years Diploma / HND

**M.Sc. in Computer Science**
✓ UGC Approved ■ Duration: 1 Year ■ Entry Qualification: Any Degree

விண்ணப்பக்கட்டணம்: Rs. 1000/-
விண்ணப்பக்கட்டணத்தை செலுத்தி விண்ணப்பப்படிவத்துடன் நேர்முகத்தேர்வுக்கு கீழ்கண்ட முகவரியில் சமூகமளிக்கவும்.
மேலும் விபரங்களை பெற கீழ்கண்ட முகவரியை தொடர்பு கொள்ளவும்.

North Lanka IIT, Top Floor, People's Bank Building, Stanley Road, Jaffna. Ph: 0767504535 / 0214927088

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஊடகவியலாளர் சி.செ.ரூபனின் 7ஆவது ஆண்டு நினைவு அஞ்சலி நிகழ்வு நேற்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 4.30 மணிக்கு பொன்னாலை கலாசார மண்டபத்தில் நடைபெற்றது. (வ-37)

## சாலை விபத்தில் காயமடைந்தவர் சிகிச்சை பயனளிக்காது உயிரிழப்பு

சாலை விபத்தில் படுகாயமடைந்தவர் சிகிச்சை பயனளிக்காது உயிரிழந்தார் என்று விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

இணுவிலில் கடந்த 18ஆம் திகதி இடம்பெற்ற விபத்தில் உடுவில் சுன்னாக்த்தைச் சேர்ந்த முடியப்பு ஜெயதாசன் (வயது - 50) என்ற குடும்பத்தலைவர் படுகாயமடைந்தார். அவர் ஒரு வாரத்தின் பின்னர் சிகிச்சை பயனளிக்காது நேற்று உயிரிழந்தார்.

யாழ்ப்பாணத்திலிருந்து இணுவில் நோக்கி மோட்டார் சைக்கிளில் பயணித்து சாலையின் மறுபுறம் செல்வதற்காக சாலையைக் கடந்திருந்தபோது அவரின் பின்புறமாகச் சென்ற மோட்டார் சைக்கிள் ஒன்றுடன் ஒன்று மோதியதாக விசாரணையில் தெரிவிக்கப்பட்டது. வீதியைக் கடந்தவர் அந்த இடத்திலேயே மயங்கிவிட்டார். பின்னர் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அவர் சேர்க்கப்பட்டிருந்தார். சிகிச்சை பயனளிக்காது நேற்றுக்காலை அவர் உயிரிழந்தார். பொலிஸார் மற்றும் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேமகுமார் விசாரணை மேற்கொண்டனர். உடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (வ-4)

## சமுர்த்தித் திணைக்கள மாற்றம் உத்தியோகபூர்வமாக அறிவிப்பு

தென்மராட்சி, ஏப். 26

வாழ்வின் எழுச்சி அபிவிருத்தித் திணைக்களம் மீண்டும் சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களம் எனப் பெயர் மாற்றப்பட்டுள்ளது என்று பிரதேச சமுர்த்தி அபிவிருத்தி முகாமையாளர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

பொருளாதார நிலையில் பின்தங்கிய நிலையில் காணும் மக்களுக்கு அரசால் நிவாரண கூப்பன்கள் வழங்கப்பட்டன. அவ்வாறான குடும்பங்களில் திறமையிருந்தும் மேம்பட முடியாத நிலையில் காணப்பட்ட குடும்பங்களின் பொருளாதாரத்தை மேம்படுத்தும் நோக்குடன் சமுர்த்தி அதிகார சபை ஆரம்பிக்கப்பட்டது. அந்தக் குடும்பங்களுக்கு மாதாந்தம் நிவாரணப் பொருள்கள் வழங்கப்பட்டு பின்னர் மாதாந்த உதவித் தொகை வழங்கப்பட்டு வருகிறது. இந்தக் குடும்பங்களின் பொருளாதாரத்தை மேம்படுத்த பல்வேறு கடன் திட்டங்களையும் மானிய அடிப்படையிலான உதவிகளையும் சமுர்த்தித் திட்டம் வழங்கி வந்தது. சமுர்த்தி அதிகார சபை 2014ஆம் ஆண்டு வாழ்வின் எழுச்சி அபிவிருத்தித் திணைக்களம் எனப் பெயர் மாற்றம் செயற்பட்டது.

கடந்த மார்ச் மாதம் வெளியிடப்பட்ட சிறப்பு வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் வாழ்வின் எழுச்சி அபிவிருத்தித் திணைக்களம் சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களம் என்னும் பெயர் மாற்றப்பட்டுள்ளது என்று திணைக்களப் பணிப்பாளர் அனைத்து பிரதேச சமுர்த்தி அபிவிருத்தி முகாமையாளர்களுக்கும் அறிவித்துள்ளார். (வ-9)

## மரண அறிவித்தல்கள்

### சிவநேசன் (சின்னக்கிளி) சபாநாயகம்



மலர்வு 31.01.1955 உதிர்வு 20.04.2017

யாழ்ப்பாணம் தெல்லிப்பழை மகாதனையைப் பிறப்பிடமாகவும் ஜேர்மனி முன்சனை வசிப்பிடமாகவும் கொண்ட சபாநாயகம் சிவநேசன் (சின்னக்கிளி) 20.04.2017 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சபாநாயகம் பொன்னம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற கனகசபாபதி - சரஸ்வதி தம்பதியரின் அன்பு மருமகனும் காந்தரூபி (ஜேர்மனி) அன்புக் கணவரும் தர்சன், தர்சிகா, துசான் ஆகியோரின் பாசமிகு தந்தையும் மல்லிகாதேவி (வவுனியா), போல்ராஜ் (பழனி மாஸ்ரர் - கொழும்பு), சந்திராதேவி (லண்டன்) ஆகியோரின் பாசமிகு சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.04.2017) புதன்கிழமை ஜேர்மனியில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: சகோதரி
(மல்லிகாதேவி சிவலிங்கநாதன்)
வங்களாலேன், மல்லாகம்.
077 875 9202

பூந்தோட்டம்,
வவுனியா.
024 222 0634



### திருமதி தனலட்சுமி ஸ்ரீபதிகந்தராசா

வேலணை மேற்கைப்- பிறப்பிடமாகவும், கொழும்பு, வெள்ளவத்தையை வசிப்பிடமாகவும் கொண்டிருந்த திருமதி தனலட்சுமி ஸ்ரீபதிகந்தராசா அவர்கள் 24.04.2017 திங்கட்கிழமை அன்று காலமானார்.

அன்னார் திரு. ஸ்ரீபதிகந்தராசாவின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற கந்தையா காமாட்சி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற செல்லத்துரை நாகரட்ணம் தம்பதியரின் மருமகளும், ஸ்ரீறஞ்ஜினி (France ), ஸ்ரீறமனன் (Canada), ஸ்ரீறஞ்சுதன் (France), ஸ்ரீதரன் (Canada) ஸ்ரீபிரபாகரன் (Ram Communication, Wellawatte), ஸ்ரீலோகினி ஆகியோரின் பாசமிகு தாயாரும், ஜீவன், துசிதா, சர்மிலா, சுகனியா, ஸ்ரீவிஜிதா ஆகியோரின் அன்பு மாமியாரும், சஜன், ஜோஷனா கிருத்திக், கிஷான், ஸ்ரீகன், டிவ்யாஸ், டிலான், ஆஜேஸ், ஏரகன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், காலஞ்சென்ற பத்மாவதி, காலஞ்சென்ற குலசிங்கம், ராசலிங்கம், உலகநாயகி, காலஞ்சென்ற கௌசல்யாதேவி, பேபிராணி, யோகலிங்கம், மகேந்திரலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற செல்வராசா, காலஞ்சென்ற பத்மநாதன், செல்வலட்சுமி, தெட்சணாமூர்த்தி, சிவாநந்தன், யோகலட்சுமி ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (26.04.2017) புதன்கிழமை கல்கிசை மகிந்த மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, இறுதிக்கிரியைகள் 27.04.2017 வியாழக்கிழமையன்று காலை 9.00 மணியளவில் நடைபெற்று, முற்பகல் 11.30 மணியளவில் தகனக் கிரியைகள் கல்கிசை மயானத்தில் இடம்பெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: ஸ்ரீபிரபாகரன் ( Ram ) மகன்
T.P: 0773 446201
இல.33, 33ஆவது ஒழுங்கை, வெள்ளவத்தை,
கொழும்பு-06

(C/28580)(10)

## வெளிநாடு சென்ற முல்லை நபர்கள் ஈரானில் சாவு

முல்லைத்தீவு, ஏப். 26

முல்லைத்தீவு மாவட்டத்தில் இருந்த வெளிநாடு செல்வதற்காகச் சென்ற இருவர், இடைவெளியில் உயிரிழந்தனர். இந்தச் சம்பவம் முல்லைத்தீவு மக்களை அதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளது.

இது குறித்து தெரியவருவதாவது,

முல்லைத்தீவு செம்மலை, உடுப்புக்குளம் கிராமங்களைச் சேர்ந்த இருவர் கடந்த வருடம் டிசெம்பர் மாதம் வெளிநாடுகளுக்கு ஆள்களைக் கடத்தும் முகவர்களூடாக ஐரோப்பிய நாட்டுக்குச் செல்வதற்காக தங்களது பயணத்தை ஆரம்பித்தனர். வெளிநாட்டுக்குச் சென்றவர்கள் கடந்த வருடம் டிசெம்பர் மாதம் 19 திகதி ஈரான் நாட்டில் இருப்பதாகவும் , சில தினங்களில் வேறு நாட்டுக்குச் சென்று விடுவோம் என்றும் முல்லைத்தீவில் உள்ள தங்களது உறவினர்களுடன் தொலைபேசியில் கதைத்துள்ளனர். அதன் பின்னர் அவர்களிடம் இருந்து எந்தத் தொடர்பும் குடும்பத்தாருக்கு கிடைக்கவில்லை. வெளிநாடு சென்ற தங்களது உறவுகளின் நிலை தொடர்பாக கடந்த 23 ஆம் திகதி கொழும்பில் உள்ள வெளிநாட்டுத் தூதரகத்தை தொடர்பு கொண்டு உறவினர்கள் கேட்ட போது, ஈரான் நாட்டின் எல்லையைக் கடக்க முயற்ற இருவர் சுடப்பட்டுள்ளனர் என்று அவர்கள் புகைப்படங்களைக் காண்பித்துள்ளனர்.

புகைப்படங்கள் சரியான முறையில் அடையாளம் காணமுடியாத போதிலும்,

அவர்களது ஏனைய புகைப்படங்களை வைத்து இருவரையும் குடும்பத்தினர் அடையாளம் காட்டி உறுதிப்படுத்தினர்.

முல்லைத்தீவு உடுப்புக்குளத்தைச் சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தந்தையான பேரம்பலம் மைதிலிபாலன் (வயது 39), முல்லைத்தீவு செம்மலையைச் சேர்ந்த விஜயகுமார் பிரசாந்த் (வயது 23) ஆகிய இருவருமே உயிரிழந்தவர்கள் ஆவார். (ஐ-7)

## மரண அறிவித்தல்



அன்னை மடியில 20 . 08 . 1938

ஆண்டவன் அடியில் 24 . 04 . 2017

### திருமதி மகேஸ்வரி சிறீஸ்கந்தராஜா

யாழ்ப்பாண்ணம் வண்ணார்பண்ணை ஐயனார் கோயிலடியைப் பிறப்பிடமாகவும் ஆனைக்கோட்டை மற்றும் மடிப்பாக்கம் இந்தியாவை வதிவிடமாகவும் கொண்ட திருமதி மகேஸ்வரி சிறீஸ்கந்தராஜா 24.04.2017 திங்கட்கிழமை பி.ப 1.30 மணி அளவில் சென்னை மடிப்பாக்கத்தில் இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற துரையப்பா (பிஸ்கால்) கனகம்மா தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்ற பசுபதிப்பிள்ளை - செல்லம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற சிறீஸ்கந்தராஜா அவர்களின் அன்பு மனைவியும் ரவிசந்திரன் காலஞ்சென்றவர்களான சிறிரஞ்சனி, தவசந்திரன் மற்றும் சிறிரஜனி ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ்சென்ற சுபாஸ்கரன்(மட்டக்களப்பு) மற்றும் கோபி(இந்தியா) ஆகியோரின் அன்பு மாமியாரும் காலஞ்சென்றவர்களான நாகேஸ்வரி, இராஜேஸ்வரன் மற்றும் விக்கினேஸ்வரி, நகுலேஸ்வரி(லண்டன்), சிறிதரன்(லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற பொன்னம்பலம், இராமச்சந்திரன் மற்றும் சரோஜினி, வள்ளி(லண்டன்) ஆகியோரின் மைத்துனியும் லஜன், நிலுக்சன், டிலுக்சன், சாயிசந்தியா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (25.04.2017) செவ்வாய்க்கிழமை காலை 10.00 மணியளவில் நடைபெற்று மடிப்பாக்கம் (சென்னை) இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

சிறிரஜனி கோபி
மடிப்பாக்கம், சென்னை.

தொடர்புகளுக்கு:
0091 988 457 3440/0091 996 265 4418

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வினோ

உரிமையாளர்:
சடாச்சரம் புவிச்சந்திரன்

தங்கத்திருநாளாம் அக்ஷய திருதியை தினமான 28,29/04/2017 ஆம் திகதிகளில் எம்மிடம் நகைகள் வாங்கும் அனைவருக்கும் என்றுமே குறையாத இன்பத்தைப் பெற்றிட அன்போடு அழைக்கின்றோம்.

## நகைப் பூங்கா

[தங்க வைர நகை வியாபாரம்]

அசல் 22 கரட் தங்க நகைகள் உத்தரவாதத்துடன் குறித்த தவணையில் செய்து கொடுக்கப்படும்.

அக்ஷய திருதியை திருநாளிலே
தங்க நகைகளை வாங்கி
ஐஸ்வரியத்தைப் பெற்றுக்கொள்ளுங்கள்

முன்கூட்டியே ஓடர் செய்து முற்பணம் செலுத்திப் பற்றுச்சீட்டைப் பெறுவதன் மூலம் அன்றைய கால தாமதத்தைத் தவிர்த்துக் கொள்ளலாம்.

எம்மிடம் தங்க நகைகளை மிகவும் துள்ளியமாக தரம் பார்த்து சான்றிதழைப் பெற்றுக்கொள்ளலாம்



*Vino Nakai Poonka*

**Gold & Jewel Merchant**

வேறு கிளைகள் இல்லை

185, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். Tel: 021 222 5394 / 021 222 9494. Fax : 021 222 2824 185, Kasthuriyar Road, Jaffna.

---



நிகழும் மங்கலகரமான ஏ விளம்பி வருடம்
சித்திரைத்திங்கள் 15.16 ஆம் நாள்களில் (28.29.04.2017)
வெள்ளிகிழமை. சனிக்கிழமை அன்றைய நாள்களில்
அள்ள அள்ளக் குறையாத ஐஸ்வரியத்தை அள்ளித்தரும்
அக்ஷயதிருதியை எனும் திருநாளிலே
தரம். நம்பிக்கை. கைராசி அனைத்திற்கும் உரித்தான
உங்கள்

# மயூரன்ஸ்

## நகை மாளிகை



ஸ்தாபனத்தில் தங்க நகைகளைப் பெற்று
என்றுமே குறையாத இன்பத்தைப் பெற்றிட
அன்போடு அழைக்கின்றோம்.

அக்ஷய திருதியை அன்று நகை கொள்வனவு செய்பவர்களுக்கு
பெறுமதி வாய்ந்த அன்புப் பரிசுகள் வழங்கப்படும்.

இல. 95, கஸ்தூரியார் வீதி,யாழ்ப்பாணம். T.P : 077 651 0251

---

அக்ஷய திருதியை அழைப்பு 28-04-2017
29-04-2017

# ஸ்ரீ சுசிலா

## ஆபரண மாளிகை



**Sri Susila Gold House**

(916 KDM) தங்க நகைகள்
மொத்தமாகக் கிடைக்கும்.
அக்ஷய திருதியையை முன்னிட்டு எங்களிடம்
28.04.2017, 29.04.2017 ஆம் திகதிகளில்
கொள்வனவு செய்யப்படும் நகைகளுக்கு
நிகரான வெள்ளி வழங்கப்படும்.

239, பிரதான வீதி, பருத்தித்துறை.

239, Main Street,
Point Pedro. (c.28936)

T.P: 077 721 0206,
021 226 1003, 021 320 7437

---

# சிறிநதியா

## நகை மாளிகை

36 வருடங்களுக்கு
மேல் நம்பிக்கைமிக்க
கைராசியான
நிறுவனம்



ஐஸ்வர்யத் திருவிழா அக்ஷய திருதியை

**28.04.2017, 29.04.2017**

வெள்ளிக்கிழமை மற்றும் சனிக்கிழமை
காலை 7.00 - இரவு 9.00 மணிவரை



சித்திரை மாதம் சுக்ல பட்ச திருதியை அக்ஷய திருதியை நாளாகக் கொண்டாடுவது யாவரும் அறிந்த ஒன்று. அக்ஷய திருதியை அன்று நாம் செய்யும் எந்த காரியமும் வளர்ந்து கொண்டேயிருக்கும், பெருகிக்கொண்டேயிருக்கும் என்பது திண்ணம். இத்தகைய சிறப்புமிக்க அக்ஷய திருதியை தினத்தன்று எமது வாழ்வின் தேவைகளின் ஒன்றாக விளங்கும் தங்கத்தை தங்களின் வசதிக்கேற்ப பெரியதோ, சிறியதோ வாங்கி என்றும் வற்றாத செல்வத்துடன் வளமுடன் வாழ தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.



முன்கூட்டியே ஓடர் செய்து முற்பணம் செலுத்திப்
பற்றுச்சீட்டைப் பெறுவதன்மூலம் அன்றைய
காலதாமதத்தைத் தவிர்த்துக் கொள்ளலாம்.

மேலதிக விபரங்களுக்கு:
➡ https://www.facebook.com/SREENATHIYAJEWELERYSHOP
➡ சிறிநதியா நகை மாளிகை

அன்றையதினம் தங்கம் வாங்கும் அனைவருக்கும்
பெறுமதிமிக்க அன்பளிப்பு பொருள்கள் வழங்கப்படும்

**குறிப்பு:** இரண்டு பவுணுக்கு மேல் தங்க நகைகளை கொள்வனவு செய்யும் வாடிக்கையாளர்களுக்கு மகாலக்ஷ்மி திருவுருவம் பொறிக்கப்பட்ட தங்க நாணயம் அல்லது தங்க மோதிரம் அன்பளிப்பாக வழங்கப்படும்.

வாடிக்கையாளர்களின்
நலன்கருதி 2012 ஆம்
ஆண்டிலிருந்து
**கரட்மெசினை**
அறிமுகப்படுத்தி
**தரச்சான்றிதழ்**
வழங்கி வருகின்றோம்



சிறிநதியா நகைமாளிகை
இல.01, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே. 021 222 2709

சிறிநதியா நகைமாளிகை
இல.56, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே. 021 222 6744

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பண்டத்தரிப்பு பத்திமா அன்னை வருடாந்தத் திருவிழா

கரணவாய், ஏப். 26
யரழ்ப்பாண மறை மாவட்டத்தில் உள்ள பண்டத்தரிப்பு பத்திமா அன்னை ஆலயத்தின் வருடாந்தத் திருவிழா எதிர்வரும் 4ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும் என்று அறிவிக்கப்பட்டது.

நவநாள் வழிபாடுகள் மாலையில் நடைபெற்று 12ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை நற்கருனை ஆராதனை இடம்பெறும். மறுநாள் 13ஆம் திகதி சனிக்கிழமை யாழ்ப்பாண ஆயர் பேரருட்திரு பேர்ணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை தலைமையில் திருநாள்கூட்டுத்திருப்பலியும் திருச்சொருப பவனியும் இடம்பெறும். மரியன்னை போர்த்துகல் நாட்டின் பத்திமாநகரின் 1917ஆம் ஆண்டு மே 13ஆம் திகதி அன்று மூன்று சிறார்களுக்கு காட்சி அளித்த 100ஆவது ஆண்டு நிறைவு தினத்தை கத்தோலிக்கர்கள் இந்த ஆண்டு கொண்டாடுகிறார்கள். (வ-173)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

திருமதி
**பாறுவதிப்பிள்ளை தம்பிப்பிள்ளை**



தோற்றம்
26.07.1926

மறைவு
06.05.2016

ஓராண்டு சென்றாலும் ஓயாது எம் கவலை
எம் குலதெய்வத்தின் ஆத்ம சாந்திக்காக எல்லாம் வல்ல
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்
ஓம் சாந்தி ! சாந்தி !! சாந்தி !!!

84/2 அரசடி வீதி,
யாழ்ப்பாணம்.

என்றும் நினைவுகளுடன்
பேரப்பிள்ளைகள்.

## பதினான்காம் ஆண்டு நினைவுக் காணிக்கை

அமரர் **கனகசபை அரசரத்தினம்** (ரிப்போட்டர்)

மலர்வு
26.04.1938

உதிர்வு
26.04.2003



அன்பு என்பதன் அர்த்தம் புரிந்து
பிற உயிர்களை துன்புறுத்தாமல்
அடுத்தவர்களின் மனதை நோகடிக்காமல்
ஆசைகளை அறுத்து நின்று
தியாகத்தின் உச்சியைத் தொட்டு
மற்றவர்களுக்காக அனைத்தையும்
- விட்டுக்கொடுத்து
அடுத்தவன் உயர்வில் சிரித்து நின்று
ஈகையை இலக்காய்க் கொண்டு
பாசம் என்ற இலக்கியத்தை புரிந்து
பண்பு என்பதன் இலக்கணம் காத்து
என்றும் உங்கள் புகழ் நிலையாய்
-இப் புவியில் நிலைத்திருக்கும்

பிரிவால் துயருறும்
மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்

Mrs.J.Arasaratnam,
56,Thorndon Gardens,
EPSOM, SURREY, KT 19 O Q W, LONDON,U.K.

## முதலாம் ஆண்டு நினைவலைகள்



**சிவபாக்கியன் சிவநாதன்**

(சுகாதார மேற்பார்வையாளர்
யாழ். மாநகரசபை)
(26.04.2017)

மண்ணில்
1951.11.14

விண்ணில்
2016.04.26

கண்ணும் கருத்துமாய் என்னைக் காத்த - அப்பா எங்கே நீங்கள்
" றோஸ் " என்று அழைத்தால் இதயம் இனிக்கும்
ஏங்குகிறேன் எங்கே நீங்கள்
எத்தனை பிள்ளைகள் எனக்கிருந்தாலும் என் ஆசைமகன்
நீதான் எங்கே என் செல்வம் நீ
அண்ணா ஆறுதல் அற்று தவிக்கின்றோம் - எங்களிடம்
வந்துவிடு கண்ணீரைத் துடைத்துவிடு.

30, பற்றிக்வீதி,
யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.

# சதாவதானி கதிரவேற்பிள்ளையின் 110ஆவது ஆண்டு நினைவு நிகழ்வு

நெல்லியடி, ஏப். 26
சதாவதானி நா.கதிரவேற்பிள்ளையின் 110ஆவது நினைவு தினவிழா எதிர்வரும் 30ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணிக்கு சதாவதானி சனசமுக நிலைய அரங்கில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது.

நிலையத்தலைவர் மு. தர்மலிங்கம் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக தகைசார் பேராசிரியர் சி.க. சிற்றம்பலம் கலந்துகொள்கிறார். சிறப்பு விருந்தினராக வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் புஸ்பலிங்கமும் கௌரவ விருந்தினராக சதாவதானி கதிரவேற்பிள்ளை சிக்கன கடனுதவி கூட்டுறவுச் சங்க உபதலைவர் சோ.கங்காதரனும் கலந்து கொள்வர்.

சைவத் தமிழ்ப் பாரம்பரியத்தில் சதாவதானியின் வகிபாகம் எனும் தலைப்பில் கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலை ஓய்வுநிலை நிலைப்பபிரதி அதிபர் செ.திருநாவுக்கரசின் சிறப்புச் சொற்பொழிவும்முன்பள்ளி ஆசிரியைகள், சாதனை படைத்த மாணவர்கள்கௌரவிப்பும், குரு வழிபாட்டுத் தினப் போட்டிகளில் முதலிடம் பெற்ற மாணவர்களின் உரைகள், மாணவர்களின் இசை நடன நிகழ்வுகள், யாழ்ப்பாண செயல்திறன் அரங்க இயக்குநர் தே.தேவானந்தின் சிந்தனைக்கும்சிரிப்புக்குமான நவீனத்துவ நாடகங்களான ஏகாந்தம் வேடமுக நாடகமும், பாட்டி பொம்மலாட்ட நாடகமும் நிகழ்வில் சிறப்பு நிகழ்வுகளாக இடம்பெறும் என்று தெரிவிக்கப்பட்டது. (வ-173)

## 31ஆம் நாள் நினைவுப் பூக்கள்

"நானே உயிர்த்தெழுதலும் ஜீவனுமாயிருக்கிறேன். என்னை
விசுவாசிக்கிறவன் மரித்தாலும் பிழைப்பான்" (யோவான் 11:25)

அமரர் முதுகலைஞர் கலாபூஷணம்
நவாலியூர்
**நா. செல்லத்துரை**
(நவாலியூரான்)



அன்னை மடியில்:
06.01.1929

ஆண்டவன் அடியில்:
26.03.2017

திங்களொன்று தீபத்தில் தீயாகித் தீர்ந்தபோதும்
ஆறவில்லை எங்கள் ஆழ்மனக்காயம்
ஒளி விளக்காய் எமக்காய் ஒளிர்ந்த உங்கள்
நிழல்காணத் துடிக்கின்றோம் நிஜமாக
கண்டியில் கல்வியோடு நற்கலை வளர்த்தும்
உறவுதிரக் கூடாதென்று ஊரோடி வந்து எங்கள்
உயர்வுக்காய் உழைத்தவரே உத்தமரே
உண்மையான உங்கள் அன்பில் அன்றுமின்றும்
இனியென்றும் எங்களுள்ளம் உமக்காய் காத்திருக்கும்
நம் கைபிடித்து கதைசொன்ன காலவெண்ணம்
கண்ணீராய்க் கரைந்து மெல்லக்கன்னம் நனைகிறது
அருகிருந்து அன்புடனே அமைதியாய் அறிவூட்டி
அன்னைபோல் எமையணைத்து நல் வாழ்வுதந்தவுங்கள்
நினைவுகள் இனி வழிகாட்டும் மீதிப் பயணத்தில்
மீளாத்துயில் கொண்ட உங்கள் மீதுள்ள மாறாதமாண்பு
மனதிலென்றும் மங்காமல் நிலைத்திருக்கும்
மனமதை நீண்டகாலம் நீங்காமல் நினைந்திருக்கும்
குறையேதுமில்லாத இறையன்பின் இருப்பிடமாய்
உறவாடி வந்தவுங்கள் உயிர்நீத்த நாளென்றும்
சுமையாகிக் கனக்குமெங்கள் இருண்ட இதயத்தில்
என்றும் உங்கள் மாசற்றவன் பின்பால் காலடியில்
பேறுபெற்ற பேர்த்தியாய் பேரனாய் பூட்டியாய் உறவுகள்
நாம் காத்திருப்போம் கர்த்தரை வேண்டி நிற்போம்

பேரப்பிள்ளைகள் - பிறின்ஸ் ஏஞ்ஜெலா, ஜஸ்ப்பின்
பூட்டப்பிள்ளை - டன்சிகா

077 550 6829

(CS.3488) (13.17)

## ஈராண்டு நினைவஞ்சலி



**யோசப் அருள்மணி**
(நேசமணி)

தாயின் மடியில்
26.06.1946

தேவன் அழைப்பில்
26.04.2015

என் அம்மா ஈராண்டு காலம் இமைப்பொழுதில் போனதம்மா!
ஆயிரம் சொந்தங்கள் இருந்தாலும் என்னை
அணைத்திட யாரும் இல்லையே அம்மா!
அம்மா உங்கள் பேரன் அதிஷயன்
என் அப்பம்மா எங்கே இருக்கிறார்
என்று தினம் தினம் கேட்டும் ஓர் செய்தி
அம்மா உங்களுக்கு கட்டி எழுப்ப கல்லறையே
கட்டுகின்றேன்! மறு பிறவி ஒன்று இருந்தால்
மீண்டும் உங்கள் கருவறையில்
உருவெடுத்து உங்கள் மடியில் தவழ
வேண்டும் அம்மா அம்மா..... எங்கள் இதயத்தில்
என்றென்றும் வாழும் உங்களுக்கு எங்களது
நினைவஞ்சலிகள் அம்மா!

உங்கள் பிரிவால் துயரும்
மகன் - எட்மன் யேசுதாஸ் (கொலன்ட்),
மருமகள் - சசிகலா,
பேரன் - அதிஷயன்

தொடர்புகளுக்கு: SS.செல்வநாயகம் -077 844 9365
I.பொன்னுத்துரை -077 404 7910
M.ஸ்ரீதரன் -077 799 4284

(சி.எஸ். 3503) (13.17)

## வண்ணை நாச்சிமாருக்கு கொடியேற்றம் இன்று

யாழ்ப்பாணம், ஏப்.26
வண்ணை ஸ்ரீ காமாட்சி அம்பாள் ஆலய (நாச்சிமார் கோயில்) திருவிழா இன்று புதன் கிழமை மு.ப.10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும் என்று அறிவிக்கப்பட்டது.

எதிர்வரும் மே மாதம் 9ஆம் திகதி செவ்வாய்க்கிழமை தேர்த்திருவிழாவும், மறுநாள் 10ஆம் திகதி புதன் கிழமை தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும் என்று தெரிவிக்கப்பட்டது. (வ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு — கிழக்கு கடையடைப்புக்கு தமிழ் மக்கள் பேரவையும் ஆதரவு

யாழ்ப்பாணம், ஏப். 26
வடக்கு, கிழக்கு மாகாணங்களில் நாளை வியாழக்கிழமை நடைபெறும் கடையடைப்பின்போது தனியார் நிறுவனங்கள், வர்த்தக நிலையங்களை மூடி போராட்டத்துக்கு ஆதரவு வழங்க வேண்டும் என்று தமிழ் மக்கள் பேரவையின் இணைத் தலைவர் ரி.வசந்தராசா வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அவர் அனுப்பி வைத்துள்ள பத்திரிகைச் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

காணாமல் ஆக்கப்பட்டோரைக் கண்டறிவதற்கான போராட்டம், சொந்த நிலத்தை மீட்பதற்கான போராட்டம், அரசியல் கைதிகளின் விடுதலை கோரிய போராட்டம், வேலையற்ற பட்டதாரிகளின் போராட்டம் முதலான போராட்டங்கள் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களிலே நீண்ட நாள்களாக நடைபெற்று வருகின்றன.

இந்தப் போராட்டங்கள் அரசினால் இதுவரையில் கவனத்தில் கொள்ளப்படவில்லை. அரசினதும் பன்னாட்டுச் சமூகத்தினதும் கவனத்தை ஈர்க்கும்முகமாக நாளை வியாழக்கி ழமை, கிளிநொச்சி மாவட்ட மக்கள் கதவடைப்புப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளனர்.

அன்று வடக்கு கிழக்கு மாகாணங்கள் முழுவதிலும் தனியார் நிறுவனங்கள், வர்த்தக நிலையங்கள் மூடி எமது மக்களது போராட்டத்துக்கு ஆதரவு தெரிவிக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம் என்றுள்ளது. (ய-5)



காணாமல் ஆக்கப்பட்டவர்களை வெளிப்படுத்தவும், விடுவிக்கவும் வலியுறுத்தி நடத்தப்படும் தொடர் போராட்டம் நேற்று கிளிநொச்சியில் 65 நாளாக நடைபெற்றது. கிளிநொச்சி கந்தசுவாமி கோயில் முன்பாக போராட்டம் கடந்த பெப்ரவரி மாதம் 20 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டது. தகரக் கொட்டகையில் பகல், இரவு எனப் போராட்டம் தொடர்கின்றது. வடக்கின் 4 மாவட்டங்களிலும், கிழக்கிலும் தொடர் போராட்டங்கள் நடத்தப்பட்டு வருகின்றன. (ற-35)

# வீணாகான குருமார் பீடம் கடையடைப்புக்கு ஆதரவு

யாழ்ப்பாணம், ஏப். 26
தாயக உறவுகளின் கடையடைப்புப் போராட்டத்துக்கு அனைவரும் ஆதரவு வழங்க வேண்டும் என்று வீணாகான குருமார் பீடம் அழைப்பு விடுத்துள்ளது.

இது தொடர்பில் சிவசிறீ பா வாசுதேவக் குருக்கள் அனுப்பியுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களால் நாளை வியாழக்கிழமை நடத்த ஏற்பாடாகியுள்ள கடையடைப்புப் போராட்டத்துக்கு தமிழ் பேசும் வடக்கு, கிழக்கு தாயக மக்கள் அனைவரும் தமது மேலான ஆதரவை வழங்க வேண்டும் என்று குருமார் சந்நிதானம் வேண்டிக் கொள்கின்றது.

அரசினுடைய கவனிப்பு அற்று நீண்ட நாள்களாக போராடிக் கொண்டிருக்கின்ற காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு நீதி கிடைக்க நடத்தப்படுகின்ற இந்தப் போராட்டத்திற்கு வலுச்சேர்க்கும் வகையில் அனைத்துத் தரப்பினரும் கருத்து முரண்பாடுகள் அற்ற வகையில் ஒன்றுசேர்ந்து ஒத்துழைப்புக்களை வழங்க வேண்டும்.

இந்தச் சந்தர்ப்பத்தில் இந்துக் குரு மார்களும் ஆலய சமூகத்தினரும் ஆன்மிக வலுச்சேர்க்க தமது ஒத்துழைப்புக்களை வழங்கும் முகமாக அன்றையதினம் இறை சந்நிதானங்களில் பிரார்த்த னைகளில் ஈடுபடுமாறும் வேண்டுகின்றோம்- என்றுள்ளது. (ற-5)

# கடையடைப்புப் போராட்டம் வெற்றிபெற மூவின மக்களின் ஆதரவும் வேண்டும்

## இளைஞர் திறன் விருத்தி அமையம் வேண்டுகோள்

யாழ்ப்பாணம், ஏப். 26
தனியார் நிறுவனங்கள், வங்கிகள், பாடசாலைகள் மூடப்பட்டு நாளைய முழு அடைப்புப் போராட்டத்துக்கு சகல தரப்புக்களும் ஒத்துழைக்க வேண்டும். வடக்கு, கிழக்கில் வாழ்கின்ற மூவின சமூகங்களின் ஒத்துழைப்புடன் இந்த முழு அடைப்புப் போராட்டம் வெற்றி பெற வேண்டும்.

இவ்வாறு இளைஞர் திறன் விருத்தி அமையம் கேட்டுக் கொண்டுள்ளது.

அந்த அமைப்பின் தலைவர் எஸ்.சுரேன் அனுப்பி வைத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

தமிழ் பேசும் மக்களின் தாயகமான வடக்கு, கிழக்கு மாகாணங்களில் நாளை வியாழக்கிழமை நடைபெறவுள்ள முழு அடைப்புப் போராட்டத்துக்கு கிளிநொச்சி மாவட்ட இளைஞர் திறன் விருத்தி அமையம் தனது ஆதரவைத் தெரிவிப்பதோடு இலங்கையின் மூவின சமூகத்தினரையும் ஒத்துழைப்பு வழங்க அழைப்பு விடுக்கின்றது.

காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு நீதி கோரி நடைபெறும் கடையடைப்புப் போராட்டம் வெற்றி பெற அனைத்துத் தரப்பினரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும். இந்தப் போராட்டம் பன்னாட்டுச் சமூகத்தின் கவனத்தை ஈர்க்க வேண்டும். தாயகத்தில் மிகவும் உணர்வெழுச்சியுடனும் இடம்பெற வேண்டும்.

காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களின் உணர்வுகளை, நியாயமான கோரிக்கைகளை நாம் மதிக்கின்றோம். இவர்கள் வடக்கு கிழக்கில் தொடர்ந்து முன்னெடுத்து வரும் அறவழிப் போராட்டங்களுக்கு நீதி வழங்கப்பட வேண்டும். அதுவரை எம் உறவுகளால் முன்னெடுக்கப்படும் போராட்டத்துக்கு பூரண ஆதரவை வழங்குவோம்.

நாளைவியாழக்கிழமை நடைபெறும் முழு அடைப்புப் போராட்டத்திற்கு மூவின சமூகத்தினரும் தமது ஒத்துழைப்புக்களை வழங்க வேண்டும் என்று வேண்டிக் கொள்வதுடன் வர்த்தக நிலையங்கள், வங்கிகள், தனியார் நிறுவனங்கள், சமய நிறுவனங்கள், பாடசாலைகள் அனைத்தையும் மூடி தங்கள் பூரண ஆதரவை வழங்குமாறு வேண்டிக் கொள்கின்றோம் என்றுள்ளது. (ற-5)

# வடக்கு முஸ்லிம் சிவில் சமூகம் ஆதரவு

யாழ்ப்பாணம், ஏப். 26
காணாமல் ஆக்கப்பட்டோர் மற்றும் நிலவிடுவிப்புத் தொடர்பில் அரசின் நிலைப்பாடுகளுக்கு மக்கள் எதிர்ப்பை வெளிப்படுத்தும் கடையடைப்பு நடவடிக்கைக்கு வடக்கு முஸ்லிம் சிவில் சமூகம் ஆதரவு தெரிவித்துள்ளது.

அந்த அமைப்பின் தவிசாளர் எம்.எம்.எம். றமீஸ், செயலாளர் ஜனாபா ஜென்ஸிலா மஜீத் ஆகியோரின் ஒப்பத்துடன் அனுப்பி வைக்கப்பட்டுள்ள பத்திரிகை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

காணாமல் ஆக்கப்பட்டோர் மற்றும் நில அபகரிப்புத் தொடர்பில் கடந்த 8 வருடங்களுக்கும் அதிகமாகப் பாதிக்கப்பட்ட மக்களும், அரசியல் தலைவர்களும், சமூகத் தலைவர்களும், பன்னாட்டுச் சமூகமும் பல்வேறு அழுத்தங்களை இலங்கை அரசுக்கு வழங்குகின்றபோதும் இதுவரை மக்கள் திருப்திப்படும் வகையிலான எந்தவொரு நடவடிக்கையையும் இலங்கை அரசு மேற்கொள்ளவில்லை. இது ஒரு துரதிர்ஸ்டமான நிலைமையாகும்.

மக்கள் பொறுமையிழந்து வீதிகளுக்கு இறங்கி மக்களின் தொடர் போராட்டங்களே இதற்கான தீர்வைப் பெற்றுத்தரும் என்று நம்பி போராட்டங்களைத் தொடக்கியிருக்கின்றார்கள், மக்கள் என்ற ரீதியில் அவர்களால் முடியுமான மிகப்பெரிய ஆயுதம் இத்தகைய எதிர்ப்புப் போராட்டங்களேயாகும்.

காணாமல் ஆக்கப்பட்டோர் மற்றும் நில விடுவிப்பு தொடர்பில் அரசின் நிலைப்பாடுகளுக்கு மக்கள் எதிர்ப்பை வெளிப்படுத்தும் கடையடைப்பு நடவடிக்கைக்கு அழைப்பு விடுவிக்கப்பட்டிருக்கின்றது. இதற்கு வடக்கு முஸ்லிம் சிவில் சமூகம் தன்னுடைய முழுமையான ஆதரவை வெளிப்படுத்தி நிற்கின்றது.

கடையடைப்புப் போன்றன எமது மக்களின் அன்றாட வாழ்வையே அதிகம் பாதிக்கும். அதன் மூலம் அரசுக்கோ அல்லது அரச இயந்திரத்துக்கோ அதிக பாதிப்புகள் ஏற்படுவதில்லை. இருப்பினும் ஒட்டுமொத்த மக்களும் இதற்கு ஆதரவினை வழங்குகின்றபோது அது ஒரு மிகப்பெரிய செய்தியாக இலங்கை அரசுக்கும் பன்னாட்டுச் சமூகத்திற்கும் எடுத்துச் சொல்லும் என்று நாம் நம்புகின்றோம்.

அகிம்சை ரீதியான செயற்பாடின் மூலம் மக்களின் எதிர்ப்பை அரசுக்கு வெளிப்படுத்துவதை மாத்திரம் நோக்காகக் கொண்டு முன்னெடுக்கப்படும் செயற்பாட்டுக்கு வடக்கு முஸ்லிம் மக்கள் சார்பாக அனைத்து முஸ்லிம் வர்த்தகர்களும், முஸ்லிம் மக்களும், முஸ்லிம் சமூகத் தலைவர்களும், அரசியல் தலைவர்களும் ஆதரவு நல்குவது சிறப்பானது என்றும் நாம் தெரிவித்து நிற்கின்றோம் என்றுள்ளது. (ற-5)

# கல்விப் புலம் சார்ந்த அனைவரும் போராட்டத்துக்கு ஆதரவளியுங்கள்

## இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் அழைப்பு

யாழ்ப்பாணம், ஏப். 26
வடக்கு கிழக்கு மாகாணங்களில் நாளை வியாழக்கிழமை ஒழுங்கமைக்கப்பட்டுள்ள கடையடைப்புப் போராட்டத்துக்கு இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் தனது முழு ஆதரவைத் தெரிவித்துள்ளது.

அந்தச் சங்கம் அனுப்பியுள்ள பத்திரிகைக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

வடக்கு, கிழக்கு மாகாணங்கள் இன்னும் வழமைக்குத் திரும்பவில்லை. வடக்கு, கிழக்கில் வாழ்கின்ற மக்களில் இயல்பு நிலையில் மாற்றங்கள் எதுவும் ஏற்படவில்லை. மாற்றங்கள் ஏற்படுத்துவதற்காக பல்வேறு விட்டுக் கொடுப்புக்களையும், தியாகங்களையும் எமது இனம் சார்ந்த கட்சிகளும், மக்களும் செய்த பின்னரும் எதுவுமே நடைபெறவில்லை.

ஆயுதப் போராட்டம் அறவழிப் போராட்டமாக மாறி அனைத்துத் தரப்பினரும் வீதியில் நாள் கணக்காக, மாதக்கணக்காகப் போராடும் நிலை உருவாகியுள்ளது எதையும் எவரும் கண்டு கொள்வதாக இல்லை.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் உள்ள அனைத்துத் தரப்பினரும் ஒன்று சேர்ந்து முன்னெடுக்கும் அறவழிப் போராட்டம் வெற்றியளிக்க வேண்டும். வடக்கு,கிழக்கில் வாழுகின்ற அனைத்து மக்களும் சிறப்பாக கல்விப் புலம் சார்ந்த அனைவரும் சேர்ந்து வியாழக்கிழமை நடைபெறும் முழு அடைப்புக்கு முழு ஆதரவை வழங்குவதோடு இதுபோன்ற முனைப்புக்களைத் தொடர்ந்தும் எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றோம் என்றுள்ளது. (ற-5)

# மக்கள் புரட்சியில் பங்காளி ஆகுங்கள்

யாழ்ப்பாணம், ஏப். 26
மக்கள் புரட்சியின் வரலாற்று எழுச்சியில் பங்காளியாக வேண்டும் என்று வடக்கு, கிழக்கு மக்களுக்கு வவுனியா மாவட்டப் பிரசைகள் குழு அழைப்பு விடுத்துள்ளது. வவுனியா மாவட்ட உள்ளூர் விளைபொருள் விற்பனையாளர் சங்கமும் கடையடைப்புக்கு ஆதரவு வழங்கியுள்ளது.

"படையினரிடம் கையளிக்கப்பட்டு காணாமல் ஆக்கப்பட்டவர்களின் வெளிப்படுத்தலை வலியுறுத்தி வடக்கு, கிழக்கில் இடம்பெறவுள்ள முழு கடையடைப்புக்குக் கட்சி பேதமின்றி ஒத்துழைப்பு வழங்க வேண்டும்" என்று அவை அழைப்பு விடுத்துள்ளன.

வவுனியா மாவட்ட உள்ளூர் விளைபொருள் விற்பனையாளர் சங்கம், நாளைய கடையடைப்புப் போராட்டத்துக்கு பேராதரவு வழங்குகின்றோம் என்று தெரிவித்தது. (ற-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய அரசமைப்புச் சகலரையும் சம உரிமையுடன் வாழ வழி செய்யும்

## மக்கள் கருத்தறியும் குழுவின் பிரதிநிதிகள் தெரிவிப்பு



யாழ்ப்பாணம், ஏப்.26
இலங்கையில் உருவாக்கப்படவுள்ள அரசியல் சீர்திருத்தம் சில காரணிகளால் காலதாமம் அடைந்தாலும்நிச்சயமாகமுன்வைக்கப்பட்டு அனைவரும் சமஉரிமையுடன் வாழக்கூடிய வகையில் அமையும். இவ்வாறு புதிய அரசமைப்புச் சபையின் மக்கள் கருத்தறியும் குழுவின் பிரதிநிதிகள் தெரிவித்தனர்.
அரச அதிகாரிகளுக்குப் புதிய அரசமைப்புத்தொடர்பாகவிளக்கமளிக்கும் நிகழ்வு நேற்றுமுன்தினம் யாழ். மாவட்டச் செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. அதில் கலந்து கொண்ட அரச அதிகாரிகள் பல வினாக்களை முன்வைத்தனர்.
இலங்கையின் எதிர்க் கட்சித்தலைவர் இரா.சம்பந்தன் கடந்த 2016 ஆம் ஆண்டுக்குள் அரசியல் தீர்வு கிடைத்துவிடும் என கூறியிருந்தார். இன்றுவரை அரசியல் தீர்வு கிடைக்கவில்லையென எழுப்பப்பட்ட கேள்விக்கு விடையளிக்கும்போதே மேற்கண்டவாறு பதிலளிக்கப்பட்டது.
அங்கு மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:
ஒரு நாட்டின் அரசமைப்பில் சீர் திருத்தம் செய்வதென்பது ஒரு தனி நபரோ அல்லது தனி கட்சியோ தீர்மானிப்பது அல்ல. இந்தநாட்டில்உள்ளஅனைத்து கட்சிப் பிரதிநிதிகள், பொது அமைப்புக்கள் எனப்பலரும்இதில்இணைந்து தங்களின் கருத்துகளை முன்வைப்பார்கள். அனைவரது கருத்துக்களும் உள்வாங்கப்பட்டுஅவற்றில்இருக்கின்ற முரண்பாடுகள் தீர்க்கப்பட வேண்டும். இலங்கையின் எதிர்க் கட்சித்தலைவர் கடந்த 2016 ஆம் ஆண்டுக்குள் அரசியல் தீர்வு கிடைத்து விடும் என நம்பிக்கையுடன் கருத்துக்களை தெரிவித்திருந்தார். எனினும் அரசமைப்பு உருவாக்கத்தில் உள்ளவர்களின் சில முரண்பட்ட கருத்துக்களுக்கு இணக்கம் காண வேண்டிய நிலை உருவானது. ஒரு புதிய அரசமைப்பு முன்வைக்கப்படும் போது பெரும்பான்மையினராக இருந்தாலும் சரி சிறுபான்மையினராக இருந்தாலும் சரி அனைத்துத் தரப்பினருக்கும் பாதிப்பு ஏற்படாத வகையிலான அனைவரும் உரிமைகளுடன் வாழக்கூடிய சூழ்நிலை உருவாக்கப்பட வேண்டும் என்பதே அனைவரதும் விருப்பு ஆகும்.
இலங்கையில் உருவாக்கப்படவுள்ள அரசியல் யாப்புச் சீர்திருத்தம் எந்தத் தடைகள் வந்தாலும், காலதாமதம் ஏற்பட்டாலும் நிச்சயமாக அனைவருக்கும் சமமான உரிமைகளை வழங்கக் கூடிய வகையில் உருவாக்கப்படும் என்ற நம்பிக்கை இருக்கின்றது.
இலங்கையில் உள்ள அனைத்துக் கட்சிகளும், அனைத்து சமூகமும் தற்பொழுது ஒன்றிணைந்துள்ளன. நாட்டின் சூழ்நிலை புதிய அரசமைப்பை உருவாக்கக் கூடிய மிகச் சிறந்த காலமாக தற்போதைய காலம் காணப்படுகின்றது - என்றும் தெரிவிக்கப்பட்டது.
புதிய அரசமைப்பின் ஊடாக காணமல் ஆக்கப்பட்டவர்களின் பிரச்சினைக்கு தீர்வு காணப்படுமா? என கேள்வி எழுப்பப்பட்டது.
"புதிதாக அரசமைப்பை உருவாக்குவதன் மூலம் காணமல் ஆக்கப்படவர்களுக்கு நேரடியாகத் தீர்வைப் காணமுடியாது. இந்த நாட்டில் இடம்பெற்ற அசாதாரண சூழ்நிலை மீண்டும் நிகழக் கூடாது என எண்ணியே நாட்டில் உள்ள பெரும்பாலான தரப்பினரும் கருதுகின்றனர். அந்த வகையிலேயே புதிய அரசியல் திருத்தம் முன்வைக்கப்படவுள்ளது. உருவாக்கப்படவுள்ள அரசியல் திருத்தத்தில் இலங்கைக் குடிமகன் ஒருவர் காணமல் ஆக்கப்படாமல் இருப்பதற்கான உரிமையை அடிப்படை உரிமையாகப் பரிந்துரை செய்துள்ளோம்." என்று பதிலளிக்கப்பட்டது.
முன்வைக்கப்படவுள்ள அரசியல் திருத்தம்இனிவரும்காலங்களில்மாற்ற முடியாத அளவுக்கு ஏதாவது ஏற்பாடுகள் உண்டா? என வினவப்பட்டது.
"இலங்கையில் முன்வைக்கப்படுகின்ற அரசியல் திருத்தங்களை மாற்றி அமைக்க முடியாது என யாரும் ஏற்பாடுகள் செய்ய முடியாது. இலங்கையின் எந்த அரசியல் சீர்திருத்தமாக இருந்தாலும் சரி, முன்வைக்கப்படவுள்ள அரசியல் திருத்தமாக இருந்தாலும் சரி யாரும் எப்போதும் மாற்றி அமைக்கக்கூடிய வகையில்தான் அமையும்." என்று தெரிவிக்கப்பட்டது.
இந்தக்கலந்துரையாடலில்யாழ்ப்பான மாவட்டச் செயலக மாவட்ட மேலதிக செயலர் திருமதி சு.தெய்வேந்திரம், யாழ்ப்பாண மாவட்டச் செயலக அதிகாரிகள், பிரதேச செயலர்கள், கல்வித் திணைக்கள அதிகாரிகள் எனப் பலர் கலந்து கொண்டனர். (ற - 8)

# வடக்கு அம்புலன்ஸ் சேவையால் 1,493 பேருக்குப் பயன்

யாழ்ப்பாணம், ஏப்.26
வடக்கு மாகாண சுகாதார அமைச்சால் நடைமுறைப்படுத்தப்பட்ட அவசர நோயாளர் காவு வண்டிச் சேவையை ஓர் ஆண்டில் மட்டும் ஆயிரத்து 493 பேர் உபயோகித்துள்ளனர் என்று வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம் தெரிவித்தார்.
அவர் தெரிவித்ததாவது:
வடக்கு மாகாண மக்களின் நலன் கருதி கடந்த ஆண்டு ஜனவரி மாதம் முதல் அவசர நோயாளர் காவு வண்டிச் சேவை அறிமுகப்படுத்தப்பட்டது. ஓர் ஆண்டில் மட்டும் அந்தச் சேவையை ஆயிரத்து 493 பேர் பெற்றுக் கொண்டுள்ளனர்.
யாழ்ப்பாணத்தில் 901 பேரும், மன்னாரில் 150 பேரும், வவுனியாவில் 78 பேரும், கிளிநொச்சியில் 279 பேரும், முல்லைத்தீவில் 113 பேரும் சேவைகளைப் பெற்றுள்ளனர்.
விபத்துத் தொடர்பாக 317 பேரும், மகப்பேற்றுக்காக 129 பேரும், நஞ்சருந்திய நிலையில் 14 பேரும், அவசர நிலைமைக்குள்ளான 501 பேரும் இந்தச் சேவை மூலம் பயனடைந்துள்ளனர்.
இந்த ஆண்டின் முதல் 3 மாத காலப் பகுதியில் 635 பேர் இந்தச் சேவையைப்பெற்றுக்கொண்டுள்ளனர். அவர்க ளில் கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்தவர்களே அதிகமாகக் காணப் படுகின்றனர் - என்றார். (ற -101)

# 21 நோயாளர் காவு வண்டிகள் ஆண்டு இறுதிக்குள் வடக்குக்கு



யாழ்ப்பாணம், ஏப். 26
கொழும்பு அரசிடம் 21 நோயாளர் காவு வண்டிகளுக்கு கோரிக்கை விடுத்திருக்கின்றோம். அவர்களும் இணங்கியுள்ளனர். இந்த ஆண்டு இறுதிக்குள் அவை கிடைக்கக் கூடும்.
இவ்வாறு வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம் தெரிவித்தார்.
வடக்கு மாகாண சுகாதார அமைச்சின் கீழ் உள்ள வைத்தியசாலைகளின் அவசர இலக்கப் பயன்பாட்டுக்காக 9 மில்லியன் ரூபா பெறுமதியான 3 நோயாளர் காவு வண்டிகள் வட மாகாண சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கத்தால் மாவட்ட சுகாதார வைத்திய அதிகாரிகளிடம் நேற்றுக் கையளிக்கப்பட்டது. பண்ணையில் அமைந்துள்ள சுகாதாரக் கிராமத்தில் இந்த நிகழ்வு நடைபெற்றது.
வடக்கு மாகாண சுகாதார அமைச்சின் கீழ் உள்ள கொடிகாமம் வைத்தியசாலைக்கும், கிளிநொச்சி தர்மபுரம் வைத்தியசாலை, முல்லைத்தீவு வைத்தியசாலைகளுக்கே அவை வழங்கப்பட்டன.
மாவட்டச்சுகாதாரத்திணைக்களங்களின் நிதியில் மாவட்டங்களின் பயன்பாட்டுக்காக கொள்வனவு செய்யப்பட்ட நோயாளர் காவு வண்டிகள் தலா 8 மில்லியன் ரூபா பெறுமதியானவை. அவற்றில் பொருத்தப்பட்ட உபகரணங்கள் ஒரு மில்லியன் ரூபா பெருமதியானவை.
"மாவட்டங்களுக்கு ஒதுக்கீடு செய்த நிதியில் இருந்து கொள்வனவு செய்யப்பட்டு வழங்கப்பட்ட 3 நோயாளர் காவு வண்டிக்ளோடு மேலும் 21 நோயாளர் காவு வண்டிகளைப் பெறுவதற்கு கொழும்பு அரசின் ஊடாக நாம் முயற்சித்து வருகின்றோம். கோரப்பட்ட 21 நோயாளர் காவு வண்டிகளும் இந்த ஆண்டுக்குள் வழங்குவதற்கு கொழும்பு அரசு இணக்கம் தெரிவித்துள்ளது." என்று வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் தெரிவித்தார். (ற - 5,101)


## அமாவாசை தினத்தில் பாடசாலை ஆரம்பம் என அதிருப்தி


யாழ்ப்பாணம், ஏப். 26
பாடசாலை இரண்டாம் தவணை இன்று ஆரம்பமாகவுள்ளது. இன்றைய நாள் அமாவாசை என்றும், இன்றைய நாளில் பாடசாலைக் கல்விச் செயற்பாடுகளை ஆரம்பிப்பது நல்ல தல்ல எனவும் பெற்றோர் சிலர் கருத்துத் தெரிவித்தனர்.
இந்துக்கள் பெரும்பாலும், அமாவாசை தினத்தில் எந்தவொரு காரியத்தையும் தொடங்குவதில்லை. அதனைத் தொடர்ந்தும் பின்பற்றி வருகின்றனர். ஆனால் இன்றைய தினம் இரண்டாம் தவணைக் கல்விச் செயற்பாடுகள் ஆரம்பமாகின்றது. இது இந்துக்களால் ஏற்றுக் கொள்ளக் கூடியதான விரும்பத்தகு நிகழ்வு அல்ல என்று பெற்றோர் சுட்டிக் காட்டி யுள்ளனர். (ற - 5)

## கீரிமலைக் கடற் பகுதியில் முதியவரின் சடலம் மீட்பு

யாழ்ப்பாணம் ஏப் 26
யாழ்ப்பாணம் கீரிமலை கடற்கரைப்பகுதியில் வயோதிபர் ஒருவரின் சடலம் நேற்று மதியம் மீட்கப்பட்டது. அவர் உரும்பிராய் பகுதியை சேர்ந்த செல்லையா மகாதேவன் (வயது81) என்று அடையாளம் காணப்பட்டார்.
இவர் அண்மையில் விபத்து ஒன்றில் சிக்கிக் காயமடைந்தார் என்றும் அதிலிருந்து மனம் குழப்பமடைந்திருந்தார் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.
உடல் பிரேத பரிசோதனைக்காக தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது. சம்பவம் தொடர்பாக காங்கேசந்துறை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.
இவர் நேற்றுமுன்தினம் கீரிமலைக் கடலில் இறங்க முற்பட்ட போது அங்கிருந்த பொதுமக்கள் அவரை கரைக்குஅழைந்துச்சென்று அங்கிருத்து அனுப்பி வைத்திருந்தனர் என்றும் கூறப்பட்டது. (ற -8)

# மீதொட்டமுல்லவில் இறந்தோருக்கு யாழ். பல்கலைக்கழகத்தில் அஞ்சலி





கொழும்பு, ஏப்.26
மீதொட்டமுல்லையில் இடம்பெற்ற குப்பை மேடு சரிவால் உயிரிழந்தவர்களுக்கு யாழ். பல்கலைக் கழக கலைப்பீட மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் நேற்று அஞ்சலி செலுத்தப்பட்டது.
கலைப்பீட மாணவர் ஒன்றிய மாணவர்கள் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் ஒன்றியத் தலைவர், பீடாதிபதி மற்றும் சகோதர மொழி மாணவர்களின் அஞ்சலியுரையும் இடம்பெற்றது.
நிகழ்வில் கலைப்பீடத்தின் மூவின மாணவர்களும்பெருமளவில் [illegible] செலுத்தினர். [illegible]

# பொதுக் கிணறுகளை அமைப்பதற்கு நீராவிப்பிட்டியில் இடவசதி இல்லை

## கரைதுறைப்பற்று பிரதேச செயலாளர் தெரிவிப்பு

முல்லைத்தீவு, ஏப். 25
நீராவிப்பிட்டியில் பொதுக்கிணறுகள் அமைப்பதற்குப் போதுமான இடவசதியில்லை. அதனாலேயே கிணறுகள் அமைக்க முடியவில்லை என்று கரைதுறைப்பற்று பிரதேச செயலாளர் தெரிவித்தார்.
"முள்ளியவளை நீராவிப்பிட்டியிலிருந்து 1990 ஆம் ஆண்டு இடம்பெயர்ந்து செல்லும் போது மக்களின் குடிதண்ணீர்த் தேவையை பூர்த்தி செய்ய மூன்று பொதுக்கிணறுகள் காணப்பட்டன. 20 வருடங்களின் பின்னர் மீளக் குடியமர்ந்த போது அங்கு கிணறுகளைக் காண முடியவில்லை. தற்போது நில [illegible] குடிதண்ணீருக்கு பெரும் [illegible] எதிர்கொண்டுள்ளோம். பாவனையில் இருந்த அந்த மூன்று பொதுக்கிணறுகள் இருக்குமாயின் இந்த நிலை ஏற்பட்டிருக்காது. நீராவிப்பிட்டிக்கு பொதுக்கிணறுகள் அமைத்து தரவேண்டும்" - என்று கிராம மக்கள் கோரிக்கை விடுத்தனர்.
"நீராவிப்பிட்டி கிராமத்தில் கடந்த வருடங்களில் மக்களின் தேவைக்காக 15 குழாய்க் கிணறுகள் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளன. பிரதேச செயலகத்தால் கிணற்றுத் திட்டங்கள் வழங்க முடியும். ஆனால் அங்கு இடவசதிகள் இல்லை. மக்களுடைய காணிகளும் சிறியவையாகவே உள்ளன." என கரைதுறைப்பற்றுப் பிரதேச செயலாளர் தெரிவித்தார். (ற - 7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாயக்கல்லிமலையில் காணிகள் ஆக்கிரமிப்பு

*அரச தலைவரிடம் ஆவணங்களைச் சமர்ப்பிக்க முடிவு*

மட்டக்களப்பு,ஏப்.26
அம்பாறை மாவட்டம் இறக்காமம் பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள முஸ்லிம், தமிழ் மக்களின் காணிகள் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ளமை தொடர்பாக அரச தலைவரின் கவனத்துக்குக் கொண்டு செல்லப்படும். காணி ஆக்கிரமிப்புத் தொடர்பான ஆவணங்களும் சமர்ப்பிக்கப்படும். இவ்வாறு கிழக்கு மாகாண முதலமைச்சர் செய்னுலாப்தீன் நஸீர் அஹமட் தெரிவித்தார்.

இறக்காமத்தைச் சேர்ந்த சிவில் சமூகப் பிரதிநிதிகள் இணைந்து முதலமைச்சரிடம் இறக்காமம் மாயக்கல்லிமலை விவகாரம் தொடர்பில் நேற்று முன்தினம் மனு ஒன்றைக் கையளித்தனர். அதற்குப் பதிலளிக்கும் போதே கிழக்கு முதலமைச்சர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் தெரிவித்தாவது:

கிழக்கின் பல பகுதிகளில் தொடர்ச்சியாகக் காணிகள் கையகப்படுத்தப்படுவதையும், காணிகள் ஆக்கிரமிக்கப்படுவதையும் வெறுமனே அவதானித்துக் கொண்டு பார்வையாளர்களாக எவரும் இருந்து விட முடியாது. சிறுபான்மையினருக்குச் சொந்தமான பூர்வீகக் காணிகள் மீதான அத்துமீறல்கள் நல்லாட்சிக்கு நல்ல சகுனமல்ல. இது மக்கள் மத்தியில் பெரிய அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது.

நாட்டில் சமாதானமும் இன ஒற்றுமையும் நிறைந்த அபிவிருத்தியைக் காண்பதற்கு இனவாதிகள் தொடர்ந்து தடையாகவே இருந்து வருகின்றனர். இந்தப் பொன்னான சந்தர்ப்பத்தை நல்ல முறையில் பயன்படுத்த விடாமல் சில தீய இனவாத சக்திகள் காலாகாலமாக செயற்பட்டுக் கொண்டே வருகின்றனர். அதனால் நாடு பின்னோக்கிச் செல்வதோடு இன விரிசல்களும் ஏற்படுகின்றன. அதனை ஒரு போதும் அனுமதிக்க முடியாது. பல்லின மக்கள் வாழும் இந்த நாட்டில் அனைத்து இனத்தவரும் தமது இடங்களில் சுதந்திரமாகவும், நிம்மதியாகவும் வாழ்வதற்கான உரிமை உள்ளது. அரசியல் யாப்பின் அடிப்படையில் விதந்துரைக்கப்பட்டுள்ள நாட்டு குடிமகன் ஒருவரின் உரிமைக்கு அச்சுறுத்தல் ஏற்படுமிடத்து. அது தொடர்பில் நீதிமன்றில் முறையிடு வதற்கான உரிமை நமக்கு இருக்கின்றது. நீதிமன்றில் வழக்கொன்று நிலுவையில் உள்ள நிலையில் மாயக்கல்லி மலையில் இவ்வாறு அத்துமீறுவது நீதித்துறையின் அதிகாரத்தை கேள்விக்குட்படுத்துவதாகும்.

நீதித்துறையைக் கேள்விக்குட்படுத்தும் நபர்கள் யாராக இருந்தாலும் தராதரம் பாராது கைது செய்யப்பட வேண்டும். ஆனால், இங்கு நீதித்துறையையே கேள்விக்குட்படுத்துபவர்கள் மீது சிறு எச்சரிக்கை கூட விடுக்கப்படவில்லை. சிறுபான்மையினரின் பூர்வீக நிலங்கள் மீதான ஆக்கிரமிப்பு அந்த சமூகங்களின் எதிர்கால இருப்பையே கேள்விக்குட்படுத்தும் . அவ்வாறான செயற்பாடுகளுக்கு ஒரு போதும் இடமளிக்கப் போவதில்லை -என்றார். (ஐ-46)






கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த வேலை தேடும் பட்டதாரிகள் தங்களுக்கு வேலைவாய்ப்பை பெற்றுத்தருமாறு கோரி கிழக்கு மாகாண சபை நுழைவாயிலை மறித்து நேற்றுப் போராட்டத்தில் ஈடுபட்டனர். அம்பாறை , மட்டக்களப்பு, மற்றும் திருகோணமலை மாவட்டங்களிலிருந்து வருகை தந்த சுமார் 400 இக்கும் மேற்பட்ட வேலை தேடும் பட்டதாரிகள் இந்தப் போராட்டத்தில் ஈடுபட்டனர். (ஐ)

# சில அமைச்சர்களின் பதவிகளுக்கு வேட்டு

*எச்சரிக்கிறார் டிலான் பெரேரா*



கொழும்பு,ஏப்.26
சில அமைச்சர்களின் அமைச்சுப் பதவிகளை இந்த மாதத்துக்குள் பறிப்பதற்கு அரசதலைவர் தீர்மானித்துள்ளார் என்று அமைச்சர் டிலான் பெரேரா தெரிவித்தார்.

அமைச்சரவை மாற்றம் தொடர்பில் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

நாட்டை நல்ல நிலைமைக்குக் கொண்டு வர வேண்டும். மக்களுக்கு நல் வாழ்வை வழங்க வேண்டும். பொருளாதாரத்தை முன்னேற்ற வேண்டும் என்பதில் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன மிகவும் அர்ப்பணிப்புடன் செயற்படுகின்றார். அவரது அர்ப்பணிப்புக்கு அமைச்சர்கள் உள்ளிட்ட அனைவரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

ஆனால்,சில அமைச்சர்களின் செயற்பாடுகள் மக்கள் விரோதச் செயற்பாடுகளாக அமைந்துள்ளன. இது தொடர்பில் அரச தலைவர் கவனம் செலுத்தியுள்ளார். எனது பாசையில் கூறினால், இந்த மாதம் இவ்வாறான மக்களுக்கு விரோதமான திறமையற்ற அமைச்சர்களுக்கு அரச தலைவர் சிகப்பு அட்டை காட்டுவார். அத்தோடு அவர்களின் கதை முடிந்து விடும். அமைச்சர்களுக்கு மாத்திரமன்றி திறமை யின்றிச் செயலாற்றும் திணைக்களத் தலைவர்கள், உயர் அதிகாரிகள் உள்ளிட்ட பலருக்கும் அரச தலைவர் இந்த மாதம் சிகப்பு அட்டை காட்டுவார். அரசைப் பலவீனப்படுத்தும் செயற்பாடுகளுக்கு அனுமதி வழங்க முடியாது. நாட்டை முன்னேற்றுவதற்கு அரச தலைவர் எடுத்திருக்கும் நடவடிக்கைக்கு அனைவரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும். அரசைக்கவிழ்க்கும் வகையிலும் மக்களிடையே அரசுக்கு அவப் பெயரைப் பெற்றுக் கொடுக்கும் வகையில் செயற்படுவதற்கு அவர்களுக்கு அனுமதி வழங்க முடியாது. அவர்கள் அரசுடன் இணைந்து செயலாற்றுவதற்கு தகுதியற்றவர்கள்- என்றார். (ஐ-3)

# இடர்களால் பாதிக்கப்படும் மக்களுக்கு சிறப்பு நிலையங்கள் அமைக்க முடிவு

கொழும்பு,ஏப்.26
மேல் மாகாணத்தில் இடர்கள் ஏற்படும் சந்தர்ப்பங்களில் பாதிக்கப்படும் மக்களைத் தங்கவைப்பதற்கு, மூன்று சிறப்பு நிலையங்களை அமைப்பதற்கு இடர் முகாமைத்துவ அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது . இவ்வாறு இடர் முகாமைத்துவ அமைச்சர் அமைச்சர் அனுர பிரியதர்ஷன யாப்பா தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது,

சிறப்பு நிலையங்களை அமைப்பதற்கு மீதொட்டமுல்ல பிரதேசத்திலுள்ள நெற் சந்தைப்படுத்தல் சபையின் மூன்று கட்டடங்களைப் பயன்படுத்துவதற்குதீர்மானிக்கப்பட்டுள்ளது. அந்தக் கட்டடங்களைப் பொறுப்பேற்பதற்கான அமைச்சரவைப் பத்திரம் அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்படும்.

குறிப்பிட்ட கட்டடங்களின் பாதுகாப்பு உள்ளிட்ட அனைத்து விடயங்களும் சிவில் பாதுகாப்புத் திணைக்களத்தால் முன்னெடுக்கப்படும்.

மக்களுக்குத் தேவையான சகல வசதிகளையும் ஏற்படுத்திக் கொடுப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும்-என்றார். (ஐ)

# மீதொட்டமுல்லவில் தொடரும் மீட்புப் பணி



கொழும்பு,ஏப்.26
மீதொட்டமுல்லவில் குப்பைமேடு சரிந்து வீழ்ந்த இடர் இடம்பெற்று 11 நாள்களையும் கடந்துள்ளன. அந்தப் பகுதியில் இராணுவத்தினர் இன்னமும் மீட்புப்பணிகளில் ஈடுபட்டுள்ளனர். குப்பைமேடு மீண்டும் சரிந்து விழாமல் இருக்கும் வகையில் சிறப்புத் திட்டமொன் றும் அங்கு ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

மீதொட்டமுல்ல இடரால் பாதிக்கப்பட்ட மக்கள் கொலன்னாவ நெல் சந்தைப்படுத்தல் சபையின் களஞ்சியசாலையில் தங்கியுள்ளனர். களஞ்சியசாலையைச் சீரமைக்கும் பணிகளும் இடம்பெற்றன.

மக்கள் தங்கியிருக்கக்கூடிய வகையில் அந்தக் களஞ்சிய சாலை சீரமைக்கப்பட்டுள்ளது. முதல் கட்டத்தில் 26 குடும்பங்களும், இரண்டாம் கட்டத்தில் 50 குடும்பங்களும் தங்கவைக்கப்படவுள்ளனர்.

அதேவேளை மீதொட்டமுல்ல அபாய வலயத்திலிருந்து வெளியேற்றப்பட்ட மக்களுக்கு 50 ஆயிரம் ரூபா கொடுப்பனவு வழங்கும் நடவடிக்கைநேற்று ஆரம்பிக்கப்பட்டது என்ற கொழும்பு மாவட்டச் செயலர் சுனில் கன்னங்கர தெரிவித்தார்.

அவர் தெரிவித்த தாவது,

பாதிக்கப்பட்டவர்களுக்கு நிரந்தர வீடுகளை வழங்கும் வரை இந்தக் கொடுப்பனவு வழங்கப்படும். அபாய வலயத்திலிருந்து வெளியேற்றப்பட்ட மக்களுக்கு வழங்க வேண்டிய வீடுகளை அடையாளம் கண்டு வருகின்றோம். குறிப்பாக அவ்விடத்திலிருந்து சுமார் 300 வீடுகளை அகற்ற வேண்டும். அத்துடன் வீடுகளை இழந்த மக்களுக்கு உடமைகளுக்கான இழப்பீடுகளை வழங்கவும் நடவடிக்கைகளை எடுத்து வருகின்றோம். வீட்டு உபகரணங்கள் முழுமையாக சேதமடைந்திருந்தால் இரண்டு லட்சத்து 50 ஆயிரம் ரூபா வழங்குகின்றோம்- விருப்பமானவர்களுக்கு அரசின் மாடி வீடொன்றும் வழங்கப்படும். என்றார்.

அதேவேளை கொலன்னாவை ராகுல வித்தியாலயத்தில் கல்வி கற்ற மாணவர்களை டென்ஸ் சில்வாவித்தியாலயத்தில் இணைத்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று மேல் மாகாண கல்வி அமைச்சு தெரிவித்தது. அங்கு 100 மாணவர்கள் இணைத்துக்கொள்ளப்படவுள்ளதுடன், ராகுல வித்தியாலயத்தின் ஆசிரியர்களையும், அதிபரையும் டெரன்ஸ் டி சில்வா வித்தியா லயத்தில் சேர்த்துக்கொள்வதற்கும் முடிவு செய்யப்பட்டுள்ளது எனவும் அமைச்சர் குறிப்பிட்டார். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டின் வளங்களை வெளிநாடுகளுக்கு விற்பனை செய்வதற்கு சு.க. உடன்படாது

*அரச தலைவர் மைத்திரி உறுதி*



நாட்டின் வளங்களை வெளிநாடுகளுக்கு விற்பனை செய்வதற்கு சுதந்திரக்கட்சி ஒருபோதும் உடன்படாது. திருகோணமலை எண்ணெய்க் குதங்களை இந்தியாவுக்கு வழங்குவதற்கான எந்தவிதமான நடவடிக்கைககளையும் அரசு மேற்கொள்ளவில்லை.

இவ்வாறு அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார். சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய குழுக் கூட்டம் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. இதில் கலந்து கொண்ட அரச தலைவர் திருகோணமலை எண்ணெய்க் குதங்களின் விவகாரம் தொடர்பில் கருத்துத் தெரிவிக்கும்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

நடக்காத ஒன்றைப் பற்றி கற்பனையாகச் சிந்தித்துத் தொழிற்சங்கங்கள் செயற்படுகின்றன. அரசுடன் இணைந்திருந்தாலும், சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் கொள்கைகளில் எந்தவிதமான மாற்றங்களும் இல்லை. திருகோணமலை எண்ணெய்க் குதங்களைஇந்தியநிறுவனத்துக்குவழங்குவதற்கு எந்த முடிவும் எடுக்கப்படவில்லை.

இதுதொடர்பானஎந்தவிதயோசனையும்அமைச்சரவையில்முன்வைக்கப்படவில்லை.என்றார். (ஐ)

---

பாடசாலைகளில் டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகள்

## அறிக்கை சமர்ப்பிக்குமாறு சுகாதார அமைச்சு பணிப்பு

கொழும்பு.ஏப்.26

பாடசாலைகளில் முன்னெடுக்கப்படும் டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகளை ஆராய்ந்து அறிக்கை ஒன்றை உடனடியாகச் சமர்ப்பிக்குமாறு சுகாதார அமைச்சு, அதிகாரிகளுக்குப் பணிப்புரை விடுத்துள்ளது.

பொதுச் சுகாதார பரிசோதகர்கள் உள்ளிட்ட நாட்டிலுள்ள அனைத்துச் சுகாதார உத்தியோகத்தர்களுக்கும் இது தொடர்பில் அறிவுறுத்தப்பட்டுள்ளது என்றும் சுகாதார அமைச்சு குறிப்பிட்டுள்ளன.

பாடசாலைகளின் இரண்டாம் தவணைக் கல்வி நடவடிக்கைகள் இன்று ஆரம்பமாகவுள்ளன. அதற்கு முன்னதாக பாடசாலைகளின் சூழல்களைத் துப்புரவு செய்யும் நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு சகல பாடசாலைகளினதும் அதிபர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

டெங்கு அபாயம் கூடுதலாக உள்ள பாடசாலைகளின் சூழல்களைச் சிறப்புக் குழுக்கள் ஊடாக கண்காணிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

நுளம்புக்குடம்பிகள்பெருகுவதற்குஏதுவாக சூழலைவைத்திருக்கும் பாடசாலைகளுக்கு எதிராகக் கடும் நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றும் சுகாதார அமைச்சு குறிப்பிட்டுள்ளது. நாடளாவிய ரீதியாக முன்னெடுக்கப்பட்டுவரும் டெங்கு நுளம்பு ஒழிப்பு நடவடிக்கைகளுக்காக முப்படையினரின் ஒத்துழைப்புப் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ)

---

# இலங்கையின் வரலாற்று எதிரி இந்தியா

*பிவிதுறு ஹெல உறுமய எச்சரிக்கை*

கொழும்பு,ஏப்.26

இந்தியா இலங்கையின் வரலாற்று எதிரி. அவ்வாறிருக்கையில் திருகோணமலை எண்ணெய் குதங்களை இந்தியாவுக்கு வழங்கும் செயற்பாடு நரியிடம் கோழியை ஒப்படைப்பதற்கு ஒப்பான செயலாகும்.

இவ்வாறு பிவிதுறு ஹெல உறுமய எச்சரித்துள்ளது.

பிவிதுறு ஹெல உறுமயவின் செய்தியாளர் சந்திப்பு கொழும்பில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. அதில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்த கட்சியின் தலைவர் உதயகம்மன்பில மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்தாவது, மிகப் பெறுமதியான திருகோணமலைத் துறைமுகத்தை, உலக வல்லரசாவதற்குகனவு கண்டு கொண்டிருக்கும் இந்தியாவுக்கு வழங்குவதானது நரியிடம் கோழியை ஒப்படைக்கும் செயலுக்கு ஒப்பானதாகும்.

இந்தியா வரலாற்று ரீதியாக இலங்கையின் எதிரியாகும். மகாவம்சத்தை வாசித்தால் நமக்குப் புரியும். எமது நாட்டை ஆக்கிரமிப்பதற்கு முயற்சித்த ஒரு நாடே இந்தியா. ரணில் விக்ரமசிங்கவின் மாமனார், எமது வரலாற்று எதிரியான இந்தியாவிலிருந்து அந்த நாட்டு இராணுவத்தை வரவழைத்து நாட்டுக்கு மிகப்பெரிய அழிவை ஏற்படுத்தினார்.

அன்று இராணுவத்தால் ஏற்படாத பெரிய அழிவை மருமகன் ரணில், திருகோணமலைத் துறைமுகத்தை இந்தியாவுக்கு வழங்குவதனூடாக ஏற்படுத்த முயற்சிக்கின்றார் என்ற அபாய எச்சரிக்கையை விடுக்க விரும்புகின்றோம்.

திருகோணமலை எண்ணெய்க் குதங்களை இந்தியாவுக்கு வழங்குவதால், இலங்கையைத் தனது பிராந்தியமாக மாற்றியமைக்கும் இந்தியாவின் முயற்சியை எம்மால் தடுத்து நிறுத்த முடியாமற்போகும் - என்றார். (ஐ)

> மிகப் பெறுமதியான திருகோணமலைத் துறைமுகத்தை, உலக வல்லரசாவதற்கு கனவு கண்டு கொண்டிருக்கும் இந்தியாவுக்கு வழங்குவதானது நரியிடம் கோழியை ஒப்படைக்கும் செயலுக்கு ஒப்பானதாகும்.



---

## அரச தலைவர் ஆணைக்குழுவின் காலம் நீடிப்பு

கொழும்பு,ஏப்.26

திறைசேரி முறிகள் தொடர்பில் ஆராய்வதற்காக நியமிக்கப்பட்டுள்ள அரச தலைவர் விசாரணை ஆணைக்குழுவின் காலம் நீடிக்கப்பட்டுள்ளது. எதிர்வரும் ஜூலை மாதம் 27 ஆம் திகதி வரை ஆணைக்குழுவின் காலம் நீடிக்கப்பட்டுள்ளது என்று அதன் செயலாளர் சுமதிபால உடுகமசூரிய தெரிவித்தார்.

அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன, ஆணைக்குழுவின் காலத்தை நீடித்துள்ளார். அதற்கான ஆவணம் ஆணைக்குழுவுக்குக் கிடைத்துள்ளது. இதுவரை 14 பேரிடம் ஆணைக்குழு சாட்சியங்களைப் பதிவுசெய்துள்ளது எனவும் தெரிவித்தார். (ஐ)

---

## டில்ஷான் நீதிமன்றில் சரண்

கொழும்பு,ஏப்.26

இலங்கைக் கிரிக்கெட் அணியின் பிரபல வீரர் திலகரட்ன டில்ஷான் தனது சட்டத்தரணியுடன் நேற்று நீதிமன்றில் சரணடைந்தார் என்று தெரிவிக்கப்பட்டது. டில்ஷானைக் கைது செய்யுமாறு நீதிமன்று நேற்று முன்தினம் உத்தரவிட்டது. கொழும்பு பிரதான நீதவான் லால் ரணசிங்க பண்டாரவால் இந்தப் பிடியாணை உத்தரவுபிறப்பிக்கப்பட்டது. கொழும்பு நீதிவான் மன்றில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட வழக்கு ஒன்றில் டில்ஷான் முன்னிலையாகவில்லை. அதனையடுத்து நீதிவானால் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. இந்நிலையில் டில்ஷான் அவரது சட்டத்தரணியுடன் நீதிமன்றில் நீதிமன்றத்தில் சரணடைந்தார் என்று தெரிவிக்கப்பட்டது. இந்த வழக்குஎதிர்வரும்மேமாதம்24ஆம் திகதி மீண்டும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது. (ஐ)

---

## இலங்கைக் கடற்படை அதிகாரி கேரளக் குளத்தில் மூழ்கிச் சாவு

கொழும்பு.ஏப்.26

இந்தியாவில் பயிற்சியில் ஈடுபட்டிருந்த இலங்கைக் கடற்படை அதிகாரி ஒருவர் நீரில் மூழ்கி உயிரிழந்தார். கேரள மாநிலத்தில் உள்ள எர்ணாகுளத்தில் நேற்று முன்தினம் இந்தச் சம்பவம் இடம்பெற்றது எனத் தெரிவிக்கப்பட்டது.

கொச்சியில் உள்ள இந்தியக் கடற்படைப் பயிற்சி மையத்தில் கடந்த 3ஆம் திகதி தொடக்கம் பயிற்சியை மேற் கொண்டு வந்த இலங்கைக் கடற்படை அதிகாரியான பெற்றி ஒவ்விசர் வீரசிங்க என்ற இளநிலை அதிகாரியே நீரில் மூழ்கி உயிரிழந்தவராவர்.

நேற்று முன்தினம் அவர் உள்ளிட்ட கடற்படைப் பயிற்சியாளர்கள் எர்ணாகுளம் கால்வாயில் சுழியோடும் பயிற்சியில் ஈடுபட்டிருந்தனர்.

சுழியோடுவதற்காக இறங்கிய இலங்கைக் கடற்படை அதிகாரி மீளத் திரும்பாததை அடுத்து, உடனடியாக தேடுதல் மேற்கொள்ளப்பட்டது. அப்போது அவர் நினைவிழந்த நிலையில் நீருக்கு அடியில் கண்டுபிடிக்கப்பட்டார். ஆபத்தான நிலையில் கடற்படை மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட அவர் நேற்று முன்தினம் மாலை உயிரிழந்தார் என்று இந்தியக் கடற்படை தெரிவித்தது.

இந்தச் சம்பவம் தொடர்பாக இலங்கைக் கடற்படைக்குத் தெரியப்படுத்தப்பட்டுள்ளது. விசாரணைக்கும் உத்தரவிடப்பட்டுள்ளது என்று இந்திய கடற்படையினர் தெரிவித்தனர். (ஐ)

---

## ஹெரோயின் கடத்திய பாகிஸ்தான் நபர் கைது

கொழும்பு.ஏப்.26

ஹெரோயின் போதைப்பொருளைக் கடத்திய குற்றச்சாட்டில் பாகிஸ்தான் பிரசை யொருவர் கட்டுநாயக்க வானூர்தி நிலையத்தில் வைத்து வானூர்தி நிலையப் பொலிஸ் போதைப்பொருள் தடுப்பு பிரிவினரால் நேற்றுக் கைது செய்யப்பட்டார்.

டுபாயில் இருந்து வானூர்தி மூலம் இலங்கைக்கு வருகை தந்த 40 வயதுடைய பாகிஸ்தான் குடிமகனே இவ்வாறு கைது செய்யப்பட்டார். அவர் 708 கிராம் ஹெரோயின் போதைப்பொருளை மிகவும் சூட்சுமமான முறையில் தனது உள்ளாடைக்குள் மறைத்து வைத்திருந்தார். நேற்று அதிகாலை 12.45 மணியளவில் வானூர்தி நிலையப் பொலிஸ் போதைப்பொருள் தடுப்பு பிரிவினரால் அவர் கைது செய்யப்பட்டார் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ)

---

## ஐரோப்பிய ஒன்றியத்தின் தேவைக்கு நாட்டில் அரசியல் நடத்த முடியாது

*அமைச்சர் ராஜித தெரிவிப்பு*



கொழும்பு.ஏப்.26

நாட்டுமக்களின்தேவைக்கு ஏற்பவே அரசியல் நடத்தப்படும். மாறாக ஐரோப்பிய ஒன்றியத்தின் தேவைகளுக்காக அரசியலை நடத்த முடியாது இவ்வாறு சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

இலங்கைக்கு ஜீ.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகை வழங்குவதற்கு எதிராக ஐரோப்பிய நாடாளுமன்றில் முன்வைக்கப்பட்டுள்ள யோசனை தொடர்பாக கொழும்பு ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய செவ்வியி லேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இலங்கை, ஐரோப்பியச் சங்கத்துக்கு வழங்கிய உறுதிமொழிகளை நிறைவேற்றத் தவறியுள்ளது எனக் கூறி எதிர்ப்பு யோசனை ஒன்று முன் வைக்கப்பட்டுள்ளது. இந்த யோசனை மீதான விவாதம் இன்றும், நாளையும் ஐரோப்பிய ஒன்றியத்தின் விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது. இந்த யோசனை நிறைவேற்றப்படும் பட்சத்தில், இந்த வருடத்தில் இலங்கைக்கு வழங்கப்படவுள்ள ஜீ. எஸ். பி.பிளஸ் வரிச்சலுகை பிற்போடப்படும் என்று எதிரப்பார்க்கப்படுகின்றது. (ஐ)

> இலங்கை, ஐரோப்பியச் சங்கத்துகு வழங்கிய உறுதிமொழிகளை நிறைவேற்றத் தவறியுள்ளது எனக் கூறி எதிர்ப்பு யோசனை ஒன்று முன்வைக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## பெற்றோல் விற்றோருக்குத் தண்டம்

யாழ்ப்பாணம், ஏப். 26

மல்லாகம் பகுதியில் போத்தல்களில் பெற்றோல் விற்ற இருவருக்கு மல்லாகம் நீதிவான் தலா ஆயிரம் ரூபா தண்டம் விதித்தார்.

மல்லாகம் பகுதியில் நேற்றுமுன்தினம் போத்தல்களில் பெற்றோலை அடைத்து விற்பனை செய்தார்கள் எனும் குற்றசாட்டில் பொலிஸாரால் கைது செய்யப்பட்ட இருவர் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர். இருவரும் குற்றத்தை ஒப்புக் கொண்டதை அடுத்து இருவருக்கும் தண்டம் விதிக்கப்பட்டது. (ற-5.37)

## வாள்வெட்டில் ஒருவர் காயம்

வவுனியா மகாறம்பைக்குளத்தில் நேற்றுமுனம் இரவு நடைபெற்ற வாள் வெட்டுச் சம்பவத்தில் ஒருவர் காயமடைந்தார். முத்துராசா உதயசேகரன் (வயது- 52) என்பவரே காயடைந்தவராவார். கட்டடப் பொருள்கள் வாடகைக்குக் கொடுப்பவரான இவர் வாடகைப் பணத்தைக் கேட்கச் சென்ற சமயமே வாள் வெட்டு நடத்தப்பட்டது என்று கூறப்படுகின்றது.

இது தொடர்பாக தந்தை, மகன் என இருவர் சந்தேகத்தின்பேரில் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேக நபர்களை நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தியபோது மகனை 25ஆயிரம் ரூபா பிணையில் செல்ல அனுமதித்த நீதிவான், தந்தையை எதிர்வரும் 2ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார் என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (ற - 8)

# இராசபுரம் கிராமத்தின் பெயரை மாற்ற முடியாது என தீர்மானம்

வவுனியா, ஏப். 26

வவுனியா வடக்கில் சின்னடம்பன், இராசபுரம் கிராமத்தில் பூந்தோட்டம் நலன்புரி நிலையத்தில் தங்கியிருந்த மக்களை குடியமர்த்துவதற்காக உருவாக்கப்பட்ட வீட்டுத்திட்டப் பகுதி கிராமத்தின் பெயரை லைக்கா ஞானம் கிராமம் என பெயர் மாற்றம் செய்ய முடியாது என ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

வவுனியா வடக்கு பிரதேச செயலகத்தின் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நேற்று பிரதேச செயலகத்தில் நடைபெற்றது. அதில் அந்தப்பகுதி உத்தியோகத்தர் ஒருவர் இராசபுரம் என்னும் தமிழ் மக்களின் பூர்வீக கிராமத்தின் பெயர் லைக்கா ஞானம் கிராமம் எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. மக்களை மீள்குடியேற்றுவதற்காக வீட்டுத்திட்டம் வழங்குவது நல்ல விடயமாக இருக்கின்ற போதும் ஒரு பாராம்பரிய பழமையான கிராமத்தின் பெயரான இராசபுரம் என்பதை மறைத்து லைக்கா ஞானம் கிராமம் என மாற்றுவது எமது வரலாற்றை மாற்றுவதாக அமைந்து விடும் எனச் சுட்டிக்காட்டினார்.

"புராதன கிராமங்களின் பெயர்கள் அந்தக் கிராமங்களின் அடையாளங்களாகவும், ஏதோவொரு வகையில் அந்த கிராமத்தவர்களுடன் தொடர்புபட்டதாகவும் அமைந்துள்ளது. அந்த அடையாளங்களை நாம் மாற்ற முடியாது. அது தொடர்பில் உடனடியாக பிரதேச சபை கவனம் செலுத்த வேண்டும்" - என்று வன்னி மாவட்ட நாடளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் தெரிவித்தார்.

அதே கருத்தை வடமாகாண சபை உறுப்பினர்களான ம.தியாகராசா, ஜி.ரி.லிங்கநாதன் ஆகியோரும் வலியுறுத்தினர். இணைத்தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான கே.கே.மஸ்தான் அவர்களும் ஆதரவு வழங்கினார்.

இது தொடர்பாக கருத்துத் தெரிவித்த வவுனியா வடக்கு பிரதேச சபைச் செயலாளர் க. சத்தியசீலன், கிராமத்தின் பெயரை மாற்றி வீதிப் பலகைகள் நாட்டப்பட்டுள்ளன. இது தொடர்பில் எம்மிடம் எந்தவித அனுமதியும் பெறப்படவில்லை. கூட்டத்தில் நீங்கள் ஏதாவது முடிவு எடுத்தால் அது நடைமுறைப்படுத்தப்படும் என்று தெரிவித்தார்.

கிராமத்தின் பெயரை மாற்ற முடியாது எனவும் அது இராசபுரம் கிராமம் என்றே தொடர்ந்தும் இருக்கும் எனவும் தீர்மானிக்கப்பட்டது. பெயர் மாற்றி அமைக்கப்பட்ட வீதிப் பலகைகளை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் ஏகமனதாக முடி வெடுக்கப்பட்டது. (ற - 5.7)

## தரம் 5 மாணவருக்கு மாதிரிப் பரீட்சை

யாழ்ப்பாணம் ஏப்.26

வடமாகாண கல்வித் திணை க்களத்தால் மாகாண பாடசாலைகளில் ஐந்தாம் தரப் புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்கான மாதிரிப் பரீட்சைகளை நடத்தப்பட்டு புள்ளிகள் பகுப்பாய்வு செய்யப்படுகின்றன.

பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கான நான்காவது மாதிரிப் பரீட்சை எதிர்வரும் 28 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பி.ப.1 மணிக்கு பாடசாலைகளில் நடத்தப்படவுள்ளது. ஏற்கனவே மூன்று மாதிரிப் பரீட்சைகள் சனிக்கிழமைகளில் நடத்தப்பட்டன என்றும் தெரிவிக்கப்பட்டது.

பரீட்சைக்கான வினாத்தாள்களை அந்தந்த வலயங்களில் பெற்றுக் கொள்ள முடியும் என்று மாகாண கல்விப் பணிப்பாளர் செ.உதயகுமார் அறிவித்துள்ளார். (ற - 9)

# மகிந்த தரப்பு எம்.பிக்களை வளைத்துப் போடப் பேச்சு

*சு.கவின் இளைஞரணித் தலைவர் தெரிவிப்பு*



கொழும்பு, ஏப்.26

மே தினத்தோடு மகிந்த தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலரை வளைத்துப் போட்டு மகிந்தவை தனிமைப்படுத்தும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப் பட்டுள்ளன. அதற்கான பேச்சு தொடர்ந்து இடம்பெறுகின்றது.

இவ்வாறு முன்னாள் அமைச்சரும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் இளைஞர் அணித்தலைவருமான சாந்த பண்டார தெரிவித்துள்ளார்.

மே தின ஏற்பாடுகள் தொடர்பில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது

கண்டியில் இடம்பெறப் போகும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மே தின நிகழ்வுக்கான ஏற்பாடுகள் அனைத்தும் பூர்த்தியாகி விட்டன. நாடு முழுவதிலும் இருந்து 3 ஆயிரத்துக்கும் அதிகமான பேருந்துகளில் மக்கள் கண்டிக்கு அழைத்துச் செல்லப் படுவர்.

சுதந்திரக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அமைச்சர்கள் அனைவருக்கும் நாம் அழைப்பு விடுத்துள்ளோம். சுதந்திரக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் எவரும் வேறு ஒருவரின் தலைமையின் கீழ் இடம் பெறும் மே தின நிகழ்வில் கலந்துகொள்ளமுடியாது. மகிந்த தரப்பில் இருக்கும் சுதந்திரக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் நாம் அழைப்பு விடுத்துள்ளோம்.

மே தின நிகழ்வில் கலந்துகொள்வதற்கும் அதனைத் தொடர்ந்து எம்மோடு இணைந்து செயலாற்றுவதற்கும் நாம் மகிந்த தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் பேசி வருகின்றோம். அவர்கள் விருப்பம் தெரிவித்துள்ளனர். மே தினம் எமது கட்சிக்கு மிக முக்கியமான திருப்பு முனையாக அமையும். மே தினத்தைத் தொடர்ந்து பல முக்கிய மாற்றங்கள் எமது கட்சிக்குள் இடம்பெறும். மகிந்த தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் எம்மோடு இணைவதோடு மகிந்தவும் தனிமைப்பட்டுப் போவார். அதற்கான ஏற்பாடுகள்தான் செய்யப் படுகின்றன - என்றார். (ற - 3)

# தனியார் கல்வி நிறுவனங்களின் தரத்தைப் பாதுகாக்கச் சட்டம்

கொழும்பு, ஏப். 26

தனியார் உயர் கல்வி நிறுவனங்களின் தரத்தைப் பாதுகாப்பது தொடர்பிலான சட்டவரைவு விரைவில் நாடாளுமன்றில் முன்வைக்கப்படும் என்று கண்டியில் நேற்று இடம்பெற்ற நிகழ்வொன்றில் உயர் கல்வி அமைச்சர் லக்ஸ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.

தனியார் கல்வி நிறுவனங்கள் தற்போது நாட்டுக்கு அவசியம் என்பதை இந்த அரசு கொள்கை ரீதியாக ஏற்றுக்கொண்டுள்ளது. அதனால் அதனைச் சிறப்பாகக் கொண்டுமுன்னகர்த்த வேண்டுமாயின் அவற்றின் தரத்தைப் பாதுகாப்பது தொடர்பில் கவனம் செலுத்தவேண்டியது தவிர்க்க முடியாததொன்று என்றும் அவர் கூறினார். (கு-4)

**வேலையாள்கள் தேவை**

கிளிநொச்சி நகரில் இயங்கும் அலுமினியப்பிற்றிங் கடைக்கு அலுமினியம் பொருத்தல், கண்ணாடி வேலை தெரிந்த or பழக விரும்புபவர்கள் தேவை.

(AKN/111) (22.17)

**021 228 3073, 077 367 2796**

**ஓம் ஸ்ரீ துர்க்கா ஜோதிடம்**



**பண்டித் ராமராயூ**

**077 835 7307, 077 839 5119**

காதல், கணவன், மனைவி, பிள்ளைகள் பிரச்சினை, பொலீஸ் முறைப்பாடுகள், வசீகரம், உத்தியோகப் பிரச்சினை, வீட்டுப் பிரச்சினைகள், குழந்தைகள் இல்லாதவர்களுக்கு குழந்தைப் பாக்கியம், பில்லி சூனியம் போன்ற பல பிரச்சினைகளைத்தீர்த்து வைப்பார்.

25 நாள்களுக்குள் முடிவு கிடைக்கும்

எந்த மதமும் வரலாம் | நேரம்:- 8.00am-6.00pm

இல: 129, மேல்மாடி, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
(மாநகரசபை கட்டடம் முன்பாக மாங்கல்யா கடை அருகில்)

**அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு**



கடந்த 12.04.2017 புதன்கிழமை அன்று சிவபதமடைந்த
எமது குடும்பத் தலைவி

**அமரர் லீலாம்பாள் சண்முகசுந்தரம்**

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நேற்று (25.04.2017) செவ்வாய்க்கிழமை காலை 7.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக் கரையில் நடைபெற்றது. வீட்டுக்கிருத்திய கிரியைகள் நாளை (27.04.2017) வியாழக்கிழமை முற்பகல் 11 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற இருப்பதால் அத்தருணம் தாங்களும் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தனிப்பட்ட அழைப்பு கிடைக்க பெறாதவர்கள் இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளுகிறோம்.

கே.கே.எஸ்.வீதி,
கோண்டாவில் மேற்கு, கோண்டாவில்.

**குடும்பத்தினர்.**

(ஏ.ஜே.ஏ) (13.17)

**Painting வேலைக்கு ஆள்கள் தேவை**

கட்டடப் Painting வேலை தெரிந்தவர்கள் தேவை.

**077 760 7068**

**சாரதி தேவை**

கொழும்பில் இயங்கும் தனியார் நிறுவனம் ஒன்றிற்கு வாகன சாரதி (Driver) தேவை. தங்குமிட வசதி உண்டு. சம்பளம் 25.000/=

**077 772 7654**

**உதவியாளர் தேவை**

கொழும்பில் இயங்கும் தனியார் நிறுவனம் ஒன்றிற்கு அலுவலக உதவியாளர் (Office Assistant) தேவை. தங்குமிட வசதி உண்டு. சம்பளம் 20.000/=

**077 772 7654**

**விற்பனைக்கு**

யாழ் நகரில் கட்டட இடிபாடுகள் (60 Load) கைவசம் உண்டு. பழைய கட்டட கம்பிகளும் உடன் விற்பனைக்கு.

**078 502 9616**

**ஆள் தேவை**

உரும்பிராயில் உள்ள உணவகத்துக்கு ரொட்டி, கொத்து வேலைக்கு ஆள் தேவை. சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

(C29452)

**தொடர்பு :- 076 534 7035**

**விஷேட பல் வைத்திய சேவை**

- பல் முக சீராக்கல் (Consultant Orthodontist)
- முக சத்திரசிகிச்சை (Consultant Facio Maxillary Surgeon)

மேற்கொள்ளுவதற்கு விசேட வைத்திய நிபுணர்கள் வருகை தருகின்றனர்

- மிதப்புப் பற்களைச் சீராக்குதல் (கிளிப் மூலம்)
- ஒழுங்கற்ற பற்களைச் சீராக்குதல்
- நிரந்தரமாக பற்களைப் பொருத்துதல் (Crown & Bridges, Implants)
- வேர்முறை சிகிச்சை (Root Canal Filling)
- நவீன முறையில் அனைத்துவிதமான பற்சிகிச்சைகள்
- பற்களை வெண்மையாக்குதல் (Vital Bleeching)

**சன்றைஸ் மெடி கிளினிக்**
388, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொடர்பு:077 934 7687(லதா)

**றோயல் மெடிக்கல் சென்ரர்**
454, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொடர்பு: 077 654 4731 (தர்சினி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Facebook
Twitter : l








# முடங்கியது தமிழகம்

சென்னை. ஏப். 26
தமிழக விவசாயிகளுக்கு ஆதரவாக அங்கு நேற்று நடத்தப்பட்ட கடையடைப்புக்களால் ஒட்டுமொத்தத் தமிழகத்தின் இயல்பு வாழ்க்கை முழுமையாகப் பாதிக்கப்பட்டது என்று இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.

விவசாயிகள் பெற்றுள்ள பயிர்கடன் அனைத்தையும் தள்ளுபடி செய்ய வேண்டும், வறட்சி நிவாரணம் வழங்க வேண்டும், காவிரி நதிநீர் பங்கீடு தொடர்பில் உரிய தீர்வு காண வேண்டும் போன்ற கோரிக்கைகளை முன்வைத்து தமிழக விவசாயி கள் டெல்லியில் கடந்த மாதம் 14 ஆம் திகதி முதல் போராட்டம் நடத்தினர். இன்று வரை உறுதியான தீர்வொன்றும் வழங்கப்படவில்லை.

விவசாயிகளுக்கு ஆதரவாகவும் அவர்களின் கோரிக்கையை வலியுறுத்தும் வகையிலும் எதிர்வரும் 25 ஆம் திகதி (நேற்று) தமிழகத்தில் பரவலாகக் கடையடைப்புப் போராட்டம் நடத்தப்படும் என்று தி.மு.கழகம் அறிவிப்பு விடுத்தது. அனைத்துக் கட்சிகள் கூட்டமொன்று நடத்தப்பட்டு அதிலும் இது தொடர்பில் விவாதிக்கப்பட்டு கடையடைப்பு நடத்துவது என்பது தொடர்பில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இதன் அடிப்படையில் நேற்று நடத்தப்பட்ட கடையடைப்பால் தமிழகத்தின் இயல்புவாழ்க்கை முழுமையாகப் பாதிக்கப்பட்டது.

4 லட்சம் லொறிகள், 65 ஆயிரம் மணல் லொறிகள், ஒரு லட்சம் முச்சக்கர வண்டிகள், தனியார் பேருந்துகள் இயங்கவில்லை. திரையுலகத்தினரும் தமது ஆதரவைத் தெரிவித்தமையால் காலைக் காட்சிகள் முழுமையாகக் கைவிடப்பட்டன. காலை 6 மணிமுதல் மாலை 6 மணிவரை பால் விநியோகம் இடம்பெறவில்லை.



**ஸ்டாலின் கைது**

திருவாரூரில் வீதி மறியல் போராட்டத்தில் ஈடுபட்ட தி.மு. கழகத்தினரும் அந்தக் கட்சியின் செயல் தலைவரும், தமிழக சட்டசபையின் எதிர்கட்சித் தலைவருமான ஸ்டாலினும் கைது செய்யப்பட்டனர். ரயில் மறியல், பேருந்து மறியல் ஆகியவற்றில் ஈடுபட்ட கிட்டத்தட்ட 3 ஆயிரம் பேர் கைது செய்யப்பட்டனர். அவர்கள் திருமண மண்டபங்களில் தங்கவைக்கப்பட்டனர் என்று இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.

**ஒரு லட்சம் பொலிஸார் பாதுகாப்புப் பணியில்**

நேற்று நடத்தப்பட்ட கடையடைப்புப் போராட்டத்தில் வன்முறைகள் நிகழலாம் என்ற அச்சத்தில் அனைத்து இடங்களிலும் கூடுதல் பொலிஸ் பாதுகாப்புப் போடப்பட்டது. அண்ணா சாலை, அ.தி.மு. கழக தலைமையகம், மெரீனா கடற்கரை, முதல்வரின் அலுவலகம், பேருந்துத் தரிப்பிடம் ஆகியவற்றக்கு அதிகூடிய பாதுகாப்புப் போடப்பட்டது.

**பேருந்துகள் தாக்கப்பட்டன**

தமிழகத்தில் நேற்று முழு அமைப்புப் போராட்டம் நடத்தப்பட்ட போதிலும், தமிழக அரச பேருந்துகள் வழக்கம் போல் இயங்கின. இதனால் ஆங்காங்கே பேருந்துகள் மீது கற்கள் வீசித் தாக்குதல் நடத்தப்பட்டது. இதுதொடர்பில் மேலும் சிலர் கைது செய்யப்பட்டனர். (ம)

## அ.தி.மு.க. அலு[illegible]
## சசிகலா படத்[illegible]
### ஓ.பி.எஸ். தரப்பு [illegible]

சென்னை. ஏப். 26
அ.தி.மு. கழகத்தின் தலைமையகத்தில் இருந்து சசிகலாவின் படத்தை அகற்ற வேண்டும் என்று ஓ.பி.எஸ். தரப்பினர் போர்க்கொடி தூக்கியுள்ளனர்.

ஜெயாவின் மறைவின் பின்னர் சசிகலா பொதுச் செயலாளராகச் செயற்பட்டு வந்தார். ஊழல் குற்றச்சாட்டில் தற்போது அவர் சிறை சென்றுள்ளார். சசிகலாவையும், அவரால் நியமிக்கப்பட்ட டி.டி.வி. தினகரனையும் மக்கள் ஏற்கவில்லை. இதனால் அவர்களை விலக்கி வைத்துவிட்டு கட்சியை நடத்துவது என்று தற்போது முடிவு செய்யப்பட்டுள்ளது. இதனால் தற்போதைய முதல்வர் எடப்பாடி பழனிச்சாமி, முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் ஆகியோர் இணைந்து செயற்பட முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்த நிலையில் அ.தி.மு. கழகத்தின் தலைமையகத்தில் வைக்கப்பட்டுள்ள சசிகலாவின்

## மெக்சிக்கோவில் வன்முறை 35 பேர் உயிரிழப்பு

மெக்சிக்கோ சிற்றி, ஏப். 26
மெக்சிக்கோவில் போதைப் பொருள் கடத்தல் குழுக்களுக்கு இடையே ஏற்பட்ட மோதலில் 35 பேர் உயிரிழந்தனர் என்று அந்த நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.

மெக்சிகோவில் பல்வேறு போதைப் பொருள் கடத்தல் குழுக்கள் ஆதிக்கம் செலுத்தி வருகின்றன. தொழில் ரீதியான போட்டியில் இந்த குழுக்களுக்கிடையே அவ்வப்போது வன்முறை சம்பவங்கள் வெடிக்கின்றன. சினலோவ் மாகாணத்தில் உள்ள வெவ்வேறு இடங்களில் போதைப்பொருள் கடத்தல் கும்பல்களுக்கு இடையே ஏற்பட்ட மோதலில் 35 பேர் உயிரிழந்தனர் என்று பன்னாட்டு உடகங்கள் செய்தி வெளியிட்டன. (ம)



## மெர்க்கல் - ட்ரம்ப் திடீர் ஆலோசனை

வொஷிங்டன், ஏப். 26
அமெரிக்க அதிபர் ட்ரம்ப் - ஜேர்மனி அதிபர் மெர்க்கல் இருவரும் நேற்று முன்தினம் அலைபேசியில் திடீர் ஆலோசனை நடத்தினர் என்று வெள்ளை மாளிகையின் செய்திக் குறிப்பில் குறிப்பிடப்பட்டது.

சிரியா, ஏமன் நாடுகளில் நிலவும் போர்ச் சூழல் குறித்தும், வடகொரியாவின் அச்சுறுத்தல் குறித்தும் ஆலோசனை நடத்தப்பட்டது. உக்ரைன் விவகாரத்தில் ஜேர்மனி, பிரான்ஸ் நாடுகள் மேற்கொண்டுவரும் அமைதிப் பேச்சுக்கு தான் முழு ஆதரவையும் வழங்குவேன் என்று ட்ரம்ப் உறுதியளித்தார் என்று வெள்ளை மாளிகையில் செய்திக் குறிப்பில் மேலும் குறிப்பிடப்பட்டது. இவர்கள் சில வாரங்களுக்கு முன்னர் நேரடியாகவும் சந்தித்துப் பேச்சு நடத்தினர். இந்தச் சந்திப்பு வெள்ளை மாளிகையில் நடந்தது. (ம)

## மீண்டும் வெடிக்கும் போரா[illegible]

சென்னை, ஏப். 26
விவசாயிகளுக்கு ஆதரவாக நடத்தப்பட்ட போராட்டங்களில் வலியுறுத்தப்பட்ட கோரிக்கைகள் நிறைவேற்றப்படாத பட்சத்தில் அடுத்த மாதம் 25 ஆம் திகதி டெல்லியில் மீண்டும் அறவழிப் போராட்டம் வெடிக்கும் இவ்வாறு தெரிவித்தார். கடந்த 42 நாளாகப்புது டெல்லியில் நடந்த போராட்டத்துக்குத் தலைமைதாங்கிய [illegible] நதிகள் இணைப்புச் சங்கத்தின் தலைவருமான விவசாயி அய்யாக்கண்ணு.

விவசாயிகளுக்கு ஆதரவாக நேற்றுப் பரவலாக நடைபெற்ற கடையடைப்புப் போராட்டத்தில், டெல்லியில் போராட்டம் நடத்திய விவசாயிகளும் கலந்துகொண்டனர். அப்போது உரையாற்றுகையிலேயே அய்யாக்கண்ணு இவ்வாறு தெரிவித்தார்.

"தற்கொலை செய்து மடியும் விவசாயிகளைக் காப்பதற்காக டெல்லியில் போராட்டத்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வலகத்திலிருந்து த அகற்றுங்கள்

## ,லியுறுத்தல்



படம் உடனடியாக அகற்றப்பட வேண்டும் என்று ஓ.பி.எஸ். தரப்பினர் கோரிக்கை வைத்துள்ளனர். ஓ.பன்னீர்செல்வத்தின் அணியில் உள்ள மதுசூதனன் வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றிலேயே இந்த கருத்து வலியுறுத்தப்பட்டது. (ம)

# தனிக்கட்சி ஆரம்பிக்க வேண்டுமாம் ரஜினிகாந்

சென்னை, ஏப். 26
சுப்பர் ஸ்டார் ரஜினி அரசியலுக்கு வரவேண்டும் என்று வலியுறுத்தி கோவையில் நேற்று பரவலாக சுவரொட்டிகள் ஒட்டப்பட்டிருந்தன என்று இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.

விவசாயிகள் பிரச்சினை, காவிரி நதிநீர் பிரச்சனைகளைப் போக்க ரஜினி தனிக்கட்சி ஆரம்பிப்பதே ஒரே தீர்வு என்று அந்த சுவரொட்டிகளில் குறிப்பிடப்பட்டிருந்தது என்று இந்திய ஊடகங்கள் மேலும் குறிப்பிட்டன. (ம)



# லொறி - பேருந்து மோதல் 27 பேர் பரிதாப உயிரிழப்பு

## கென்யாவில் துயரம்

நைரோபி, ஊப். 26
கென்யாவின் துறைமுக நகரமான மோம்பாஸாவில் இருந்து தலைநகர் நைரோபியை நோக்கி சென்றுகொண்டிருந்த பயணிகள் பேருந்தும், எதிர்திசையில் இருந்து வந்த லொறியும் நேருக்கு நேர் மோதியதில் 27 பேர் உயிரிழந்தனர் என்று பன்னாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.

இந்தச் சம்பவம் நேற்று அதிகாலை (இலங்கை நேரப்படி) இடம்பெற்றது.

பொலிஸார் மேற்கொண்ட முதல்கட்ட விசாரணைகளின் அடிப்படையில், முன்னால் சென்ற வாகனத்தை முந்திச் செல்லமுயன்றபோதே பேருந்து லொறியுடன் மோதுண்டது என்று தெரிவிக்கப்பட்டது.

உயிரிழந்தவர்களைத் தவிர மேலும் 20 பேர் படுகாயங்களுடன் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர்.

அவர்களில் பலரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளதால் உயிரிழப்பு மேலும் அதிகரிக்கும் என்று அச்சம் வெளியிடப்பட்டது. (ம)

# சிரியா மீது கூடுதல் பொருளாதார தடைகள்

## அமெ. விதிப்பு

வொஷிங்டன், ஏப். 26
இரசாயனக் குண்டுவீச்சு நடத்தியமைக்காகச் சிரிய அரசு மீது கூடுதல் பொருளாதாரத் தடையை விதித்தது அமெரிக்கா.

சிரிய அதிபர் அல் அசாத்தை பதவி விலக வேண்டும் என்று வலியுறுத்தி ஆரம்பித்த அழுத்தக் குழுக்கள் தற்போது ஆயுதக் குழுக்களாக மாற்றம் பெற்றுள்ளன. கிளர்ச்சிக் குழுக்களுக்கும், அரச படைகளுக்கும் இடையே தற்போது அங்கு கடும் போர் நடைபெற்று வருகிறது.

இட்லிப் மாகாணத்தில் இந்த மாதத் தொடக்கத்தில் நடத்தப்பட்ட வான்வழி இரசாயனத் தாக்குதலில் 86 பொதுமக்கள் உயிரிழந்தனர். இது போர்க் குற்றம் என்று ஐக்கிய நாடுகள் சபை அறிவித்தது.

அமெரிக்கா, சிரியா மீது நேரடித் தாக்குதல் நடத்தியது. பொருளாதாரத் தடைகளும் விதிக்கப்படும் என்று அமெரிக்கா எச்சரித்தது. அந்த நாட்டின் மீது அமெரிக்கா ஏற்கனவே சில பொருளாதாரத் தடைகளை விதித்திருந்த நிலையில் நேற்று முன்தினம் கூடுதல் தடைகள் விதிக்கப்பட்டன. (ம)



# டி.டி.வி. தினகரன் விரைவில் கைது

சென்னை, ஏப். 26
அ.தி.மு. கழகத்தின் முன்னாள் துணைப் பொதுச் செயலாளர் டி.டி.வி. தினகரன், இரட்டை இலைச் சின்னத்தை மீட்பதற்காக இந்தியத் தேர்தல் ஆணையத்துக்கு லஞ்சம் கொடுக்க முயன்றார் என்றகுற்றச்சாட்டில்விரைவில் கைதாவார் என்று இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டன. விசாரணையில் முன்பின் முரணான தகவல்களை வெளிப்படுத்தியதை அடுத்தே இவ்வாறு தெரிவிக்கப்பட்டது.

அ.தி.மு. கழகம் சசிகலா தரப்பு, ஓ.பி.எஸ். தரப்புஎன இரண்டாக உடைந்ததை அடுத்து கட்சிச் சின்னம் இந்தியத் தேர்தல் ஆணையத்தால் முடக்கப்பட்டுள்ளது. எவருக்கு சின்னத்தை வழங்குவது என்பது தொடர்பில் தற்போது பரிசீலிக்கப்பட்டு வருகிறது. இந்த நிலையில் அ.தி.மு. கழகத்தின் துணைப் பொதுச் செயலாளரும், சசிகலாவின் ஆதரவாளராகவும்இருந்த டி.டி.வி. தினகரன் இரட்டை இலையை மீட்டெடுக்க சுகேஷ் என்ற இடைத்தரகருக்கு லஞ்சம் கொடுக்க முயன்றார் என்று ஆதாரத்துடன் வழக்குப் பதிவுசெய்யப்பட்டது.

ஆரம்பத்தில் சுகேஷ் எவர் என்றே தெரி யாது என்று மறுத்த தினகரன் தற்போது அவருடன் பேசயதை ஒப்புக்கொண்டுள்ளார். சுகேஷ், தினகரன் இருவரும் சந்தித்தமை தொடர்பான காணொலிகளும்டெல்லி பொலிஸிடம் உள்ளது என்று தெரியவருகிறது. இதனால் அவர் விரைவில் கைதாகலாம் என்று இந்திய ஊடகங்கள் குறிப்பிட்டன. (ம)

# மீண்டும் தோன்றினார் ஒபாமா

வொஷிங்டன், ஏப். 26
அமெரிக்காவின் முன்னாள் அதிபர் ஒபாமா கிட்டத்தட்ட மூன்று மாத இடைவெளியின் பின்னர் மீண்டும் பொது வெளியில் தோன்றியுள்ளார்.

தனது சொந்த மாநிலமான சிக்காகோ மாநிலப் பல்கலைக் கழகத்தில் நேற்றுமுன்தினம் நடந்த நிகழ்வு ஒன்றிலேயே அவர் கலந்து கொண்டுள்ளார்.

எதிர்காலத்தை நம்பிக்கையுடன் எதிர்கொள்ளல், பிரச்சினைக்கு தீர்வு காணும் விதம், போன்ற பல் வேறு விடயங்கள் தொடர்பில் அவர் உரையாற்றினார். மாணவர்கள் மற்றும் செய்தியாளர்களின் கேள்விகளுக்கும் அவர் பதில் வழங்கினார். தனது பேச்சின் போது ஓரிடத்திலேனும் தற்போதைய அதிபர் ட்ரம்ப் தொடர்பில் ஒபாமா எதுவும் பேசவில்லை.

அவர் தொடர்பில் மாணவர்களும், செய்தியாளர்களும்கூட எந்தக் கேள்விகளையும் கேட்கவில்லை என்று அமெரிக்க ஊடகங்கள் குறிப்பிட்டன. (ம)



# ஆட்டம் கண்டது சிலி

சான்தியாகோ, ஏப். 26
தென்னமரிக்க நாடுகளில் ஒன்றான சிலியில் நேற்றுக் காலை (இலங்கை நேரப்படி) நில அதிர்வு ஏற்பட்டது என்று அமெரிக்க புவியியல் ஆய்வு மையம் தெரிவித்தது.

வால்பரைசோ நகருக்கு 22 கிலோ மீற்றர் மேற்கில், 11 கிலோ மீற்றர் ஆழத்தில் நில அதிர்வு மையம் கொண்டிருந்தது என்று தெரிவிக்கப்பட்டது. ரிச்டர் அளவில் 6.9 அலகுகளாக பதிவான இந்த நில அதிர்வால் சுனாமி எச்சரிக்கை எதுவும் விடுக்கப்படவில்லை. உயிரிழப்புக்கள் மற்றும் பொருட்சேதங்கள் தொடரில் எந்தத் தகவலும் நேற்று மதியம் வரை வெளியிடப்படவில்லை.

நேற்று நில அதிர்வு ஏற்பட்ட இடத்திலிருந்து 100 கிலோ மீற்றர் தொலைவில் 5.9 ரிச்டர் அளவில் நேற்றுமுன்தினம் நில அதிர்வு ஏற்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ம)

# ராட்டம்; விவசாயிகள் எச்சரிக்கை



நடத்தினோம். எங்கள் போராட்டத்தை மோடி அரசு கண்டு கொள்ள வில்லை. நிர்வாணமாக ஓடியும் பார்த்தோம். அப்படியும் கண்டு கொள்ளவில்லை.

முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமி, மு.க.ஸ்டாலின் போன்ற தலைவர்கள் எல்லாம் வந்து சந்தித்து பேசினார்கள். அவ்வளவு பெரிய தலைவர்கள் [illegible] பிறகும் போராட்டத்தை கைவிடாமல் இருந்தால் நல்லதல்ல என்பதற்காகத்தான் தற்காலிகமாகப் போராட்டத்தை ஒத்தி வைத்துள்ளோம்.

தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகளில் விவசாயிகள் வாங்கி இருக்கும் கடனை மத்திய அரசு தள்ளுபடி செய்ய வேண்டும். இதை மத்திய அரசும், மாநில அரசும் தட்டி கழிக்க முடியாது. எங்கள் கோரிக்கைகள் நிறைவேறாவிட்டால் மீண்டும் அடுத்த மாதம் 25ஆம் திகதி டெல்லி சென்று போராட்டத்தைத் தொடருவோம்" என அவர் மேலும் தெரிவித்தார். (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com



# வடக்கின் கல்வி நிலமை தொடர்ந்தும் பாதாளத்தில்

அண்மையில் வெளியிடப்பட்ட கல்விப் பொதுத் தராதரசாதாரணதரப் பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படையில் முதல் 25 இடங்களுக்குள் வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த எந்தவொரு கல்வி வலயத்துக்கும் இடம் கிடைக்கவில்லை என்ற செய்தி இடியாய் வந்து இறங்கியிருக்கிறது. மொத்தமுள்ள 98 வலயங்களில் கிழக்கைச்சேர்ந்த அக்கரைப்பற்று மற்றும் கல்முனை கல்வி வலயங்களே முறையே 24, 25ஆவது இடங்களைப் பெற்றிருக்கின்றன. இந்தப்பட்டியலில் வடக்குமாகாணத்துக்குக் கிடைத்திருக்கக்கூடிய ஆகக்கூடுதலான இடம் யாழ்ப்பாணக்கல்வி வலயத்திற்குக் கிடைத்திருக்கக்கூடிய 46ஆவது இடம்தான்.

இந்தப் புள்ளி விவரம் மிகத் தெளிவாக ஒரு செய்தியைச் சுட்டிக்காட்டுகிறது. ஈழத் தமிழர்களின் கல்வி நிலை படுவீழ்ச்சியைச் சந்தித்துள்ளது என்பதுதான் அந்த செய்தி. ஒரு காலத்தில் கல்வியாலேயே தலையெடுத்த ஓர் இனம், இப்போது கல்வி நிலையில் அதளபாதாளத்தில் வீழ்ந்து கிடப்பது வேதனை தருகிறது.

போர் நடந்தபோதுகூட வடக்கு கிழக்கு மாகாணங்கள் கல்வியில் நல்ல நிலையில் இருந்தன. குப்பி விளக்குகளில் படித்தபோதும், குண்டு வீச்சுகளுக்கும் இடம்பெயர்வுகளுக்கும் மத்தியில் அலங்கோலப்பட்டுக் கல்வி கற்றபோதும் பெறுபேறுகளும்கல்வியும்நல்லமுன்னேற்றத்துடன்இருந்தன. ஆனால் போர் முடிந்து வசதிகளும் வாய்ப்புகளும் கிடைத்த பின்னர் அவை எல்லாம் இல்லாமல் போய்விட்டமை மனதை நெருடுகிறது.

2009 முதல் 2016 வரையான காலப் பகுதியில் ஏனைய மாகாணங்கள் கல்வி நிலையில் முன்னேற்றத்தைக் காட்டியிருக்கும்போது வடக்குகிழக்கு மாகாணங்களேபின்னடைவைச் சந்தித்துள்ளன என்று கல்வியியலாளர்கள் சுட்டிக்காட்டுகிறார்கள். அதிலும் குறிப்பாக வழக்கமாக முதலாவது இடத்தைப் பிடிக்கும் மேல் மாகாணத்தைப் பின்தள்ளிவிட்டு தென்மாகாணம் முதல் இடத்தைப் பிடித்துள்ளமையை அவர்கள்சிறப்பாகச்சுட்டிக்காட்டுகிறார்கள்.

அதற்கு நேர்மாறாக வடக்கு மாகாணம் மாறியிருக்கிறது. வடக்கில்கல்விநிலையைப்பார்த்து ஏனைய மாகாணங்கள் பொறாமைப்பட்ட காலம் போய், வடக்கு மாகாணத்தைப் போன்றுவந்துவிடக்கூடாதுஎன்றுஎண்ணுகின்றநிலைமை வந்துவிட்டது.

வடக்கில் தமிழர்களால் தலைமைதாங்கப்பட்டு, தமிழர்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட அரசு ஒன்று பதவியேற்று மூன்று ஆண்டுகள் கடந்த நிலையிலும்கூட இந்த நிலையில் மாற்றம் எதுவும் வரவில்லை என்பது மேலும் கொடுமை. கல்வித்துறையைச் சேர்ந்த, பழுத்த அனுபவமுள்ளஒருவரேவடக்கின்கல்விஅமைச்சராகஇருந்தபோதும் உருப்படியான உடனடி மாற்றங்களை அவரால் ஏற்படுத்த முடிந்திருக்கவில்லைஎன்பது கொடுமையிலும் கொடுமை.

தமிழ் மக்களின் உயிர்மூச்சான கல்வியையே அபிவிருத்தி செய்துவிட முடியாத, அதனைச்சாத்தியப்படுத்த முடியாது வக்கற்று நிற்கும் இந்த வடக்கு மாகாண அரசு, வேறு எதைச் சாதித்துவிடப் போகிறது என்கிற கேள்வியையும் இது ஒருங்கே எழுப்புகிறது.

வடக்கின்கல்விநிலையில்தொடர்ந்துஏற்பட்டுவரும்வீழ்ச்சியைத்தொடர்ந்து 2014ஆம்ஆண்டுஏப்ரல்மாதம்வடக்கு மாகாணக்கல்வி அமைச்சின்ஏற்பாட்டில்பெருமெடுப்பில் ஆய்வு மாநாடு ஒன்று நடத்தப்பட்டு அதன் பெறுபேறுகள் புத்தகங்களாகவும் வெளியிடப்பட்டன. எனினும் அதன் பின்னரான 2 வருடப் பெறுபேறுகளிலும் முன்னேற்றம் எதனையும் காணமுடியவில்லை என்பது பெரும் சோகம்.

வடக்குமாகாண முதலமைச்சர் இதுபோன்ற விடயங்களில் கவனம் செலுத்தாமல் வெறும் அரசியல் மட்டுமே பேசிக் கொண்டிருப்பதில் அர்த்தம் ஏதுமில்லை. ஈழத் தமிழினத்தின் அடிப்படைக் கட்டுமானங்களைச் சிதைய விட்ட பின்னர் அரசியல் பேசுவதில் பயனேதும் இருக்கப்போவதுமில்லை. எனவே விரைந்து செயற்பட்டு, கல்விஅமைச்சரை மாற்றி புதிய வினைத்திறன் உள்ள ஒருவரைக் கொண்டு வந்தாவது வடக்கின் கல்வி நிலையில் உத்வேகத்தையும் வளர்ச்சியையும் ஏற்படுத்த முயற்சிக்க வேண்டும். இனியும் காலதாமதம் கூடாது.




# இந்த ஆண்டிலும் ஜி. எஸ். பி. சலுகை கிடைப்பது சாத்தியமில்லை

## மே 14ஆம் திகதிக்கு முன்னர் நிபந்தனைகளை நிறைவேற்றுவதில் அரசுக்குச் சிக்கல்

## புலம்பெயர் தமிழரும் பன்னாட்டு நிறுவனங்களும் கடும் அழுத்தம்

சண்டேரைம்ஸ் கட்டுரையில் இருந்து
■ ரெங்கன்

நாட்டின் பொருளாதாரம் வளர்முகமாகக் காணப்படுகின்றதா அல்லது தேய்முகமாகக் காணப்படுகின்றதா என்ற விவாதங்கள் சூடுபிடித்துள்ள அதே நேரம், அரசுக்குக் கவலையளிக்கும் செய்திகளும் வந்துகொண்டுதான் இருக்கின்றன. நடப்பு வருடத்தில் ஐரோப்பிய ஒன்றியத்திடமிருந்து ஜி.எஸ்.பி.பிளஸ் வரிச்சலுகைகள் கிடைக்கப் போவதில்லை என்பதற்குப் பலத்த அறிகுறிகள் தென்படுகின்றன. ஜி.எஸ்.பி. பிளஸ் சலுகையானது, இப்போது ஐரோப்பிய நாடாளுமன்றம் மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் ஆகியவற்றின் பரிசீலனையில் இருந்து வருகின்றது. இந்த நிலைமையின்படி இலங்கை அரசு மீண்டும் இந்தச் சலுகையைக் கேட்டு விண்ணப்பம் செய்ய வேண்டும் எனத் தோன்றுகிறது.

### நிபந்தனை நிறைவேற்றாமை

இதற்கான காரணம், ராஜதந்திரவட்டாரங்களின் தகவலின்படி, ஐரோப்பிய ஒன்றியம் முன்வைத்த சில நிபந்தனைகளை அரசு மே 14 ஆம் திகதிக்குள் நிறைவேற்றாமையாகும்.

பயங்கரவாதத் தடைச்சட்டத்தை ஒழித்து விட்டு அதற்கு மாற்றீடாக பயங்கரவாதத் தடைப் பதில் சட்டம் ஒன்று நிறைவேற்றப்படவேண்டும் என்பதும் இதில் அடங்கும். இது அனைத்துலக தரங்களுக்கு சமமானதாக இருப்பதுடன், தற்போதுள்ள குற்றவியல் நடைமுறை விதிகளிலும் மாற்றங்கள் செய்யப்படவேண்டும். கடந்த வியாழக்கிழமை ஐரோப்பிய நாடாளுமன்றக் குழு ஒரு தீர்மான முன் வடிவுக்கு முன்னறிவித்தல் கொடுத்துள்ளது. மன்றின் பூர்வாங்க நிகழ்ச்சி நிரலில் இதனை இணைத்துக் கொள்ளுமாறு கோரப்பட்டுள்ளது. தீர்மானத்தை 373 உறுப்பினர்கள் ஆதரிக்கின்றனர். இந்தத் தீர்மானம் நிறைவேறும் பட்சத்தில் இலங்கைக்கான சலுகைகள் நிராகரிக்கப்படும். அந்தத்தீர்மான முன்வரைவின் சில அம்சங்கள் பின்வருமாறு: மனித உரிமைகளை முன்னேற்றும் விடயத்தில் 2015 ஜனவரியில்இருந்துஇலங்கை அரசானது சில சாதகமான விடயங்களை நிறைவேற்றி இருக்கின்றது. 2015 ஒக்ரோபரில் நிறைவேற்றப்பட்ட 30/01 தீர்மானத்துக்கு இணை அனுசரணை வழங்க எடுத்த முடிவு இதில் ஒன்று.

> 2017 பெப்ரவரி 10ஆம் திகதி ஐ.நா.மனித உரிமைகள் ஆணையாளர் பணிமனையின் முடிவின்படி 2015 ஒக்ரோபர் முதல் இலங்கை அரசானது எடுத்திருந்த நடவடிக்கைகள் உண்மையான முன்னேற்றம் என்று கூறுவதற்குப் போதுமானவையாக இருக்கவில்லை. மற்றும் ஒப்புக்கொண்டவைகளை நிறைவேற்றுவதில் கவலைதரும் வகையில் மந்த நிலை காணப்பட்டுள்ளது.

அரசின் சீர்திருத்த நடவடிக்கைகளைப் பொறுத்தவரை ஜி.எஸ்.பி. பிரமாணங்களுடன் நேரடியாக சம்பந்தப்படுபவை உட்பட, அனைத்துலக சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் தொடர்பான ஒப்பந்தங்களுக்கு ஏற்புடையவையாகக் காணப்படவில்லை. வதை செய்தல் மற்றும் இன ரீதியிலான பாகுபாடுகளை ஒழித்தல் தொடர்பான அனைத்துலக ஒப்பந்தங்கள். 2017 பெப்ரவரி 10ஆம் திகதி ஐ.நா.மனித உரிமைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆணையாளர் பணிமனையின் முடிவின்படி, 2015 ஒக்டோபர் முதல் இலங்கை அரசானது எடுத்திருந்த நடவடிக்கைகள் உண்மையான முன்னேற்றம் என்று கூறுவதற்குப் போதுமானவையாக இருக்கவில்லை. மற்றும் ஒப்புக் கொண்டவைகளை நிறைவேற்றுவதில் கவலைதரும் வகையில் மந்த நிலை காணப்பட்டுள்ளது. அனைத்துலக தொழிலாளர் ஸ்தாபனத்தின் நிபுணர்கள், அனைத்துலக தொழிலாளர் ஒப்பந்தங்கள் 87 மற்றும் 98 தொடர்பில் பல எண்ணிக்கையிலான குறைபாடுகளை இனங்கண்டுள்ளனர்.

1999 ஆம் ஆண்டின் தொழில் தகராறு திருத்தச் சட்டத்தில் காணப்படும் பற்றாக்குறையும் இதில் அடங்கும். அனைத்துலக தொழிலாளர் ஸ்தாபன ஒப்பந்தம் 87 இன் பிரகாரம் இந்த ஒரு சட்டம் மட்டுமே இப்போது நடைமுறையில் உள்ளது.

இன்னமும் பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் நீக்கப்படாமலும் மாற்று ஏற்பாடு செய்யப்படாமலும் இருக்கும் நிலையில், பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை நீக்கும் வகையில் உருவாக்கப்படுகின்ற சட்டத்தில் பயங்கரவாதம் தொடர்பான குற்றங்கள் மற்றும் வதைகள் மூலம் ஒப்புதல் வாக்குமூலங்களை பெறுவதற்கான அபாயத்தைக் கட்டுப்படுத்துவது போன்று விரிவான வரையறைகள் அதில் உள்ளடக்கப்பட்டிருக்கலாகாது.

ஜி.எஸ்.பி.பிளஸ் அந்தஸ்தை இலங்கைக்கு வழங்குவதற்கான தகுதி தொடர்பில், இலங்கையின் மனித உரிமை மீறல்கள் தொடர்ந்து காணப்படும் நிலையில் அனைத்துல நிறுவனங்களின் கருத்துப்படியும் உண்மையான முன்னேற்றத்தில் பற்றாக்குறை காணப்படுகின்றது. குற்றஞ் செய்கிறவர்களைத் தப்புவிக்கும் கலாசாரத்தைப் போதுமான வகையில் இலங்கை அரசு கையாளவில்லை என்ற சந்தேகம் எழுந்துள்ள நிலையில் மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டவர்கள் என்று குற்றஞ்சாட்டப் பட்டுள்ளவர்களுக்கு அரசு உயர் பதவிகளை வழங்கிவருகின்றது.

**செயற்படுத்துவதில் அரசுக்குச் சிக்கல்**

பயங்கரவாத தடைச்சட்டத்தை எதிர்வரும் மே 14 ஆம் திகதிக்கு முன் ஒழிப்பதை ஐரோப்பிய ஒன்றியம் ஒரு நிபந்தனையாக விதித்திருந்தாலும், அதனைச் செயற்படுத்துவதில் சிக்கல் இருப்பது தெரிய வந்துள்ளது. அந்தச் சட்டத்துக்கு மாற்றீடான ஒரு சட்டமுன்வரைவு அமைச்சர்கள் மத்தியில் இப்போது சுழற்சிக்கு விடப்பட்டுள்ளது.

நாடாளுமன்ற மேற்பார்வைக்குழுவும், சட்ட ஒழுங்கு அமைச்சர் சாகல ரட்நாயக்க தலைமையிலான குழுவும் அதனை ஆராய்ந்து பரிந்துரைகளுடன் சமர்ப்பித்ததன் பின்னர் மீள் வடிவமைப்புக்காக அது சட்ட வரைஞர் திணைக் களத்துக்கு அனுப்பி வைக்கப்படும். இவ்வாறு இந்தச் சட்டம் முழுமை பெறுவதில் தாமதங்கள் ஏற்படுவதால் எதிர்வரும் மே 14க்கு முன்னர் அதனை நிறைவேற்றுவதில் சிக்கல் இருக்கின்றது. அதனால் அரசு மீண்டும் புதிதாக ஜீ.எஸ்.பி.பிளஸ் சலுகை கோரி ஐரோப்பிய ஒன்றியத்துக்கு விண்ணப்பிக்க வேண்டிய நிலை தோன்றியுள்ளது.



காலிமுகத் திடலை கூட்டு எதிர்க்கட்சியினர் மேதினக் கூட்டத்தை நடத்தப் பயன்படுத்த முதன்மை அமைச்சர் ரணில் விக்கிரம சிங்க அனுமதியளித்தார். என்று அரசு சார்பு ஊடகங்கள் கூறிவரும் நிலையில், சில தினங்களுக்கு முன்னர் சிறிலங்கா சுதந்திரக் கட்சி அமைச்சர்கள் மற்றும் மாகாண அமைச்சர்கள் மத்தியில் பேசியபோது மே தின வைபவத்தை நடத்த கூட்டு எதிர்க்கட்சியினர் காலிமுகத்திடலைப் பயன்படுத்துவதற்கு அனுமதித்தவர் தாமே என்ற அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன வலியுறுத்திக் கூறினார்.

**பன்னாட்டு நிறுவனங்கள் மற்றும் புலம்பெயர் தமிழர்களின் எதிர் செயற்பாடுகள்**

ஐரோப்பிய ஒன்றியத்தின் நிபந்தனையான எதிர் வரும் மே 14 ஆம் திகதிக்கு முன் நிறைவேற்றப்பட வேண்டும் என்பதை, இலங்கை அரசால் சாத்தியமாக்க முடியாமை ஒருபுறமிருக்க, இலங்கை அரசுக்கு எதிராக பன்னாட்டு நிறுவனங்கள் பலவும், புலம்பெயர் தமிழர் அமைப்புக்களும் இறுக்கமான நெருக்குதல்களைப் பிரயோகித்துவருவது தெரிய வந்துள்ளது. ஐ.நா.மனித உரிமைகள் சபையின் தீர்மானத்தை நிறைவேற்றுவதற்கு இலங்கை அரசுக்கு அந்தச்சபை இரண்டு ஆண்டுகள் கால அவகாசம் வழங்கியதையடுத்து மேற்படி அமைப்புக்களின் அழுத்தங்கள் தீவிரம் அடைந்துள்ளன.

ஐரோப்பிய ஒன்றியத்தின் மற்றொரு நிபந்தனை என்னவென்றால், குற்றவியல் நடைமுறைச் சட்டத்தில் மாற்றம் செய்யப்பட வேண்டும் என்பதாகும். இதன்படி ஒரு நபர் குற்றச்சாட்டுக்களின் பேரில் கைது செய்யப்படுவாரானால். உடனடியாக அவர் தமது சட்டத்தரணியைச் சந்திப்பதற்கு வழிவகை செய்யப்படவேண்டும் என்பதாகும். சட்டத்தில் இதற்கான அம்சம் இடம்பெறவேண்டும் என்று வலியுறுத்தப்பட்டுள்ளது. ஆனால் நீதியமைச்சர் விஜயதாச ராஜபக்ச எடுத்துள்ள நிலைப் பாட் டின்படி சந்தேகநபர் அவர் ஆணோ பெண்ணோ, அவரிடமிருந்து வாக்குமூலம் ஒன்று பதிவு செய்யப்பட்ட பின்னரே சட்டவாளர் ஒருவர் அவரைச் சந்திக்கலாம் என்பதாகும். இதன் திருத்தம் அடங்கிய திருத்தச் சட்ட வரைவு வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ளது. இருந்த போதிலும் நாடாளுமன்றில் அது குறித்து இன்னமும் விவாதிக்கப்படவில்லை.

**அரச தலைவரே காரணம்**

காலிமுகத் திடலைக் கூட்டு எதிர்க்கட்சியினர் மேதினக் கூட்டத்தை நடத்தப் பயன்படுத்த தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க அனுமதியளித்தார் என்று அரசு சார்பு ஊடகங்கள் கூறிவரும் நிலையில், சில தினங்களுக்கு முன்னர் சிறிலங்கா சுதந்திரக் கட்சி அமைச்சர்கள் மற்றும் மாகாண அமைச்சர்கள் மத்தியில் பேசியபோது மே தினக்கூட்டத்துக்காகக் கூட்டு எதிர்க்கட்சியினர் காலிமுகத்திடலைப் பயன்படுத்துவதற்கு அனுமதித்தவர் தாமே என்ற அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன வலியுறுத்திக் கூறினார்.

அவர்களின் (கூட்டு எதிர்க் கட்சி) மே தினக் கூட்டத்துக்கான இடக்கோரிக்கையை வழங்குமாறு நானே பணிப்புரை வழங்கினேன் என்று அவர் கூறினார். சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் சின்னமானகையை மேதின வைபவங்களின் போது எல்லா இடங்களிலும் பயன்படுத்த வேண்டாம் என்றும், சிறிலங்கா சுதந்திரக்கட்சி ஏற்பாட்டாளர்களை அவர் கேட்டுக் கொண்டார். மேதினமானது தொழிலாளர்களுக்குரிய அனைத்துலகக் கொண்டாட்டமாகும். இதில் கட்சிச் சின்னத்தை எல்லா இடங்களிலும் காட்சிப்படுத்துவது பொருத்தமாகாது என்றார் அவர்.





# வாசகர் திருமுகம்

## பாதுகாப்பைக் காரணம் காட்டிக் காணிகளை விடுவிக்க மறுப்பது நியாயமே அல்ல

அடாத்தாகத் தாம் பிடித்து வைத்திருக்கும் தமிழர்களுக்குச் சொந்தமான காணிகளை விடுவிப்பதில் இராணுவத்தினர் தொடர்ந்தும் பின்னடித்து வருகின்றமை ஏற்கக் கூடியதல்ல.

விடுதலைப் புலிகளுடனான போரைக் காரணம் காட்டியே தமிழர்களுக்குச் சொந்தமான காணிகள் படையினரால் ஆக்கிரமிக்கப்பட்டன. போரில் விடுதலைப்புலிகள் தோற்கடிக்கப்பட்டனர். போர் ஓய்ந்து அடுத்த மாதத்துடன் எட்டு ஆண்டுகள் நிறைவடையப் போகின்றன. இந்தக் காலப் பகுதியிலும் தமிழர் பகுதிகளில் இயல்பு நிலை திரும்பாமை ஏமாற்றத்தை ஏற்படுத்துகிறது.

மக்கள் குடியிருப்புக்களுக்கு அண்மையில் படையினரின் பிரசன்னம் தொடர்ந்து இடம்பெறுகின்றது. இதனால் மக்கள் தமது இயல்பு வாழ்க்கைக்குத் திரும்ப முடியாத நிலையில் உள்ளனர். படையினரின் இருப்பை மக்கள் விரும்பவில்லையென்பது தெளிவாகத் தெரிகின்றது. ஆனால் பாதுகாப்புக் காரணங்களால் படையினரைத் திரும்பப் பெறமுடியாதெனப் பாதுகாப்புத் தரப்பினர் கூறுகின்றனர். தமிழர் பகுதியின் பாதுகாப்புக்கு தற்போது ஏற்பட்டுள்ள குந்தகம் என்னவென்பது எவருக்கும் தெரியவில்லை. மக்கள் தமக்குச் சொந்தமான காணிகளை விடுவிக்க வேண்டுமென ஜனநாயக வழியில் போராட்டங்களை நடத்துகிறார்கள். இது அவர்களது ஜனநாயக உரிமையாகும். இந்த மக்கள் ஆயுதங்களை ஏந்திப் படையினருக்கு எதிராகப் போராடவில்லை. அமைதியைச் சீர்குலைக்கவில்லை. ஆனால் அதேநேரம் மக்களுக்குச் சொந்தமான காணிகளில் படையினர் விவசாய முயற்சிகளில் ஈடுபடுவதும், நீச்சல் குளங்களை அமைத்துக் களியாட்டங்களில் ஈடுபடுவதும், உல்லாச விடுதிகளை அமைத்துப் பணம் சம்பாதிப்பதும் பாதிக்கப்பட்ட மக்களால் ஏற்றுக் கொள்ள முடியாதவை. ஏற்கனவே போரால் பலவழிகளிலும் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களது மனங்களை வருந்தவைக்கும் செயற்பாடு இது. வெந்த புண்ணிலே வேலை பாய்ச்சுகின்ற செயலாகவே இதைக் கருதமுடிகின்றது.


இந்த நிலையில், பாதுகாப்புக் காரணங்களைக் கூறிக் கொண்டு படையினர் தமிழ் மக்களுக்குச் சொந்தமான காணிகளை அடாத்தாகப் பிடித்து வைத்திருக்கின்றமை எந்த வகையிலும் நியாயப்படுத்த முடியாத செயலாகும்.

நல்லாட்சி அரசு, நல்லவற்றைச் செய்ய விரும்பினால், முதலில் படையினர் வசமுள்ள தமிழ் மக்களது காணிகளை மக்களிடமே ஒப்படைக்க வேண்டும். இதைச் செய்யத் தவறினால் நல்லாட்சி, நல்லிணக்கம் என்பவற்றுக்கு அர்த்தமே இருக்காது.

மா. திருநாவுக்கரசு
முல்லைத்தீவு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சங்க இலக்கியத்தில் தோழி



எஸ்.மல்லிகா

உலகியல் அறிந்த தோழி, வரைவு கடாவுதலை (மணந்துகொள்ள வேண்டுதல் அல்லது தூண்டுதல்) பல முறை கையாள்வதைச் சங்க இலக்கியங்கள் புலப்படுத்துகின்றன. இத்தகைய தோழி, களவொழுக்கத்தில் தலைவியைத் தலைவன் அடிக்கடி சந்திக்கும் வாய்ப்பைத் தருவதில்லை. தலைவன் தனது வேண்டுகோளின்படி தலைவியை வரைந்து கொள்ளாது (திருமணம் செய்யாது) நாள்களை நீட்டித்து வரும்பொழுது, அவன் நாணி உடன் தலைவியை வரைந்து கொள்ளுமாறு மழையை நோக்கிக் கூறும் நெறியில் கூறிய தோழியின் செயற்றிறனை அகநானூற்றில் காணலாம்.

"பெருங் கடன் முகந்த
இருங்கிளைக் கொண்மூ
போர்ப்புறு முரசின் இரங்கி
மின்னுடைக் கருவியை
ஆகி நாளும்
கொன்னே செய்தியோ அரவம்
குறமகள் காக்கும் ஏனற்
புறமும் தகுதியோ வாழிய
மழையே!"

மேகத்தை நோக்கி....

மேகத்தை நோக்கிக் கூறினாற் போன்று தலைவன் பெருங்குடிச் செல்வனாய் இருந்தும், தலைவியை வரைந்து கொள்ளப்போதலை ஊருக்குப் பல வழியாகப் புலப்படுத்திவிட்டு அவன் காலந் தாழ்த்துவதை அவனுக்குச் சுட்டிக்காட்டி "இனியாவது விரைந்து வந்து தலைவியை வரைந்து கொண்டு காதல் வாழ்க்கை உருப்பெறப் பயன் எய்துவிப்பாயா? அன்றி, இல்வாழ்க்கை முற்றுப்பெறாது ஒழிந்து போகக் கைவிட்டு விடுவாயா? என்று கேட்டு அவனைத் திடுக்கிடச் செய்வதனை அத்தலைவன் நன்கு உணர்ந்து, தன் கடமைகளை உடனே நிறைவேற்றத் தூண்டிய தோழியின் செயற்றிறன் பாராட்டுக்குரியது.

தலைவன், தலைவி, நற்றாய் (பெற்ற தாய்), செவிலித்தாய் (வளர்ப்புத் தாய்), பரத்தை, பாணன் போன்றோருக்கும் அவர்தம் கடமைகளை அறிவுறுத்தி அக வாழ்க்கையை வளம்பெறச் செய்யும் திறத்தினள் தோழி. தன் அறிவின் திறத்தைப் பிறர் அறியாது ஒழுகும் அடக்கமும், மாசற்ற அறிவுணர்ச்சியும், செய்யத்தகுவன அறிந்து கூறலும் ஆகிய பெண்மைக் குணங்கள் முழுவதும் தோழியிடத்து ஒருங்கே அமைந்துள்ளன. "தாங்கருஞ் சிறப்பின் தோழி மேன் என தொல்காப்பியர் சிறப்பித்துக் கூறுவது இங்கு சுட்டத்தக்கது.

தோழியின் சிறப்பினைத் தொல்காப்பியம், இறையனார் களவியல், நம்பியகப்பொருள் ஆகிய இலக்கண நூல்கள் தொகுத்துத் தருகின்றன. ஆனால், சங்க இலக்கியங்களில் தோழியானவள் பல்வேறு கோணங்களில் விரித்துப் பேசப்படுவதைக் காணலாம். தாய் போன்று பிரியமுற ஆதரிப்பவளாகவும், நண்பியாய், மந்திரியாய், நல்லாசானாய், பண்பிலே தெய்வமாய் படைக்கப்பட்டவளே தோழி எனலாம். சங்க இலக்கியத்துக்குப் பின்வந்த திருக்கோவையயார் காட்டும் தோழியும் இதே பண்பினளாகவே திகழ்கின்றாள். ஆனால், பாரதி பாடலில் காட்டப்படும் தோழி நவீன தோழி. தோழி என்ற பதம் சுட்டும் (நட்புடன்) பண்புடன் மட்டும் அவள் நின்றுவிடுகிறாள்.

பாரதி பாடலில் ஒரு காட்சி. தலைவி, தலைவனது பிரிவாற்றாமையால் துன்புற்றுத் தன் துயரத்தைத் தோழியிடம் கூறு கின்றாள்.

ஆசை முகம் மறந்து போச்சே இதை
யாரிடம் சொல்வேனடி தோழி
நேசம் மறக்கவில்லை நெஞ்சம் எனில்
நினைவு முகம் மறக்கலாமோ (ஆசை)

கண்ணில் தெரியும் தோற்றம்
கண்ணில் தெரியுதொரு தோற்றம் அதில்
கண்ணனழகு முழுதில்லை
நண்ணு முகவடிவு காணில் அந்த
நல்ல மலர்ச் சிரிப்பைக் காணோமே
(ஆசை)

தேனை மறந்திருக்கும் வண்டும் ஒளிச்
சிறப்பை மறந்துவிட்ட பூவும்
வானை மறந்திருக்கும் பயிரும் இந்த
வையம் முழுதுமில்லை தோழி (ஆசை)

கண்ணன் முகம் மறந்துபோனால் இந்த
கண்களிருந்து பயனுண்டோ?
வண்ணப் படமுமில்லை கண்டாய் இனி
வாழும் வழியென்னடி தோழி? (ஆசை)

இங்கே தலைவி தோழியிடம் தனது ஒழுக்கத்தைக் கூறுகின்றாள். நட்பு என்ற வட்டத்துக்குள் மட்டும் நின்று, அவளுக்கு உதவி செய்கின்றாள் தோழி. ஆனால், சங்க இலக்கியத் தோழி அப்படியல்ல. தலைவன் தலைவியின் காதல் வாழ்க்கையையே இலக்காகக் கொண்டு வாழ்ந்தவள் அவள். அவர்கள் வாழ்க்கையின் அச்சாணியாகத் திகழ்ந்தவள் அவள். ஆதலால், சங்க இலக்கியங்கள் சுட்டும் தோழி தனித்துவமான பண்புடையவள் என்றே கூறவேண்டும்.

முற்றும்







தும்பளை மார்க் கண்டுவின் "பாதை தெரியாத பயணங்கள்" நூல்வெளியீட்டு விழாவை கலாபூசணம் எஸ்.இருதயராஜா மங்கல விளக் கேற்றி ஆரம்பித்து வைத்தார். நூலைப் பருத்தித்துறைப் பிரதேச செயலர் ஆர்.ரீ.ஜெயசீலன் வெளியிட்டு வைக்க கலாபூசணம் அனந்தராஜா நூல் பிரதியைப் பெற்றுக் கொண்டார். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நித்திரைக்குச் செல்வதற்கு நேரமில்லாமல் தொடர் கச்சேரிகளை நிகழ்த்தினோம்



கோயில் திருவிழாக்காலம் தொடங்கீற்றுது என்றால் எங்களுக்கு நித்திரை கொள்ள நேரமிருக்காது. ஒரு நாளைக்கு ரெண்டு மூன்று கச்சேரியும் நடக்கும் கிளிநொச்சியில செய்திட்டு அப்பிடியே வவுனியாவெல்லாம் போய் நிகழ்ச்சி செய்த சம்பவமும் இருக்கு. யாழ்ப்பாணம்,மன்னார் முள்ளியவளை முல்லைத்தீவெண்டு தொடர்ந்து செய்திருக்கிறம்.

## நினைவுகளைப் பகிர்ந்து கொள்கிறார் சுப்பையா அருணாசலம்

■ வேந்தன்

"பள்ளிக்கூடத்திலையும் ஏதாவது நிகழ்ச்சியெண்டா நான்தான் வாத்தியங்கள் வாசிக்கிறது. இதைவிட 15 வயசிலயெல்லாம் வில்லுப் பாட்டு நிகழ்ச்சிகளிலயும் ஆர்மோனியம் வாசிக்கிறதுக்குப்போயிருக்கிறன். என்ர அத்தான் கணேச சுந்தரத்தோட சேர்ந்து நிகழ்ச்சிகள் செய்யப் போறனான். இதைவிட அந்தநாளையில பிரபலமா இருந்த சின்ன மேளம் நிகழ்ச்சிகளிலயும் பெரியாக்கள் என்னைக் கூட்டிக்கொண்டு போவினம்.

பெருமளவிலான தொழில்நுட்ப வசதிகளும் பொழுதுபோக்கு அம்சங்களும் இல்லாத முப்பது வருடங்களுக்கு முந்தைய காலங்களில் யாழ்ப்பாண் மக்களின் பொழுதுபோக்காக இருந்தவை கோயில் திருவிழாக்களும் அங்கு இடம்பெறுகின்ற நிகழ்வுகளும்தான்.

**விடிய விடியத் திருவிழாக்கள்**

திருவிழாக்கள் விடியவிடிய நடைபெறும் வழக்கத்தைக் கொண்டிருந்தன. பூசை புனஸ்காரங்களைத் தவிர்த்து மக்களை ஒன்றுகூடச் செய்யும் வல்லமையை திருவிழாக்களில் இடம்பெறும் கலை நிகழ்ச்சிகள் கொண்டிருந்தன.

அவற்றுள் நாடகம்,வில்லுப்பாட்டு, பட்டிமன்றம், மேளக்கச்சேரிகள் போன்று இசைக்கச்சேரிகளும் மக்கள் மத்தியில் பெரும் வரவேற்பைப் பெற்றிருந்தன. அந்தவரிசையில் யாழ்ப்பாணத்தில் கொடிகட்டிப்பறந்த இசைக்குழுக்களில் "அருணா இசைக்குழுவும் ஒன்று" அன்றைய நாட்களில் இசையை ரசிக்காதவர்களுக்குக்கூட அருணா இசைக்குழுவை தெரிந்திருந்தது. அந்தளவுக்கு யாழ்ப்பாணத்தின் பட்டிதொட்டியெங்கும் இந்த இசைக்குழு ஒலித்தது.

இன்றும் ஐம்பது வருடங்களுக்கு மேலாக இயங்கிவரும் இந்த இசைக்குழுவின் தாபகர் சுப்பையா அருணாசலத்தை உதயனின் புதன்பொய்கை இதழுக்காக அவருடைய இசைப்பயணம்பற்றி கலந்துரையாடச் சென்றேன். தனக்கேயான வெள்ளைச்சிரிப்புடன் தன்னையும் இசையையும் பற்றிப் பேசத்தொடங்கனினார்.

**தந்தையார் ஒரு சங்கீத ஆசிரியர்**

எங்கட அப்பா ஒரு சங்கீத ஆசிரியர் எங்கட வீட்டில எல்லாருமே கலைத்துறையில ஈடுபாடனவர்கள்தான். அப்பாக்கு எல்லா வாத்தியங்களும் வாசிக்கக்கூடிய ஆற்றல் இருக்கு. வீட்டில எல்லா வாத்தியங்களும் இருக்கும். அப்ப நாங்கள்(சகோதரர்கள்) எல்லாரும் எப்பவும் எதையாவது எடுத்து வாசிச்சுக்கொண்டிருப்பம். அப்பா எனக்கு முறையா மிருதங்கம் கற்றுத்தந்தவர். வில்லூன்றி பிள்ளையார்கோயிலடியில இருந்த சர்வேஸ்வர சர்மா என்றவரிட்ட வயலினையும் முறையாக படிச்சனான். பிறகு பி.டி.பிச்சையப்பா, சண்முகானந்தன் அவர்களிட்டையும் படிச்சனான். வீட்டில எல்லா வாத்தியங்களும் இருந்தபடியால எல்லாத்தையும் ஓரளவு வாசிப்பன். பள்ளிக்கூடத்திலயும் ஏதாவது நிகழ்ச்சியெண்டா நான்தான் வாத்தியங்கள் வாசிக்கிறது. இதைவிட 15 வயசிலயெல்லாம் வில்லுப்பாட்டு நிகழ்ச்சிகளிலயும் ஆர்மோனியம் வாசிக்கிறதுக்குப்போயிரு க்கிறன். என்ர அத்தான் கணேசசுந்தரத்தோட சேர்ந்து நிகழ்சிகள் செய்யப் போறனான். இதைவிட அந்தநாளையில பிரபலமா இருந்த சின்ன மேளம் நிகழ்ச்சிகளிலயும் பெரியாக்கள் என்னை கூட்டிக்கொண்டு போவினம்.

**இசைத்துறையில் ஈடுபாடு**

படிச்சுக்கொண்டிருக்கேக்கயே இசைத்துறையில ஈடுபடத் தொடங்கீற்றன். அப்பா கர்நாடக சங்கீதத்தோட சம்மந்தமான ஆள் நானும் தம்பியாக்களும் இதுகளில ஈடுபட்டது அவருக்கு பிடிப்பில்ல. பேசுவார் ஆனாலும் ஆக்கள் பெருமையா கதைக்கேக்க அவருக்கு சந்தோசம் தான். ஆனாலும் [illegible]
[illegible]

**இசைக்குழு உருவாக்கம்**

67ஆம் ஆண்டு SSC யோட படிப்பையும் விட்டாச்சு. என்ர பள்ளிக்கூட சினேகிதன் பரமசிவம் நல்ல திறமா பாட்டுகள் பாடுவான். ஒரு முறை ஒரு சினேகிதன் வந்து எங்கட ஊர் கல்வியங்காட்டு வாசகசாலையில ஒரு நிகழ்ச்சி இருக்கு அதில நாங்கள் எல்லாருமா ஒரு இசைநிகழ்ச்சி செய்வமா எண்டு கேட்டான். அப்ப சரி எண்டு எங்கட ஆர்மோனியமும் முஸ்லிம் சினேகிதன் ஒருத்தரிட்ட போய் எக்கோடியனும் வாங்கிக்கொண்டு வந்து ஒத்திகை பார்த்து கனகம்பாள் சதாசிவம், பரமசிவம் வேற இன்னும் ரெண்டு மூன்று எங்கட பாட்டுக்காரரையும் போட்டு நிகழ்ச்சி செய்தம். அது நினைச்சதைவிட பெரியளவில வெற்றியடைஞ்சுது. ஏற்கனவே இங்க பிரபலமான பல இசைக்குழுக்கள் இருந்தாலும்நாங்கள்கொஞ்சசின்னாக்கள் சேர்ந்து செய்த நிகழ்ச்சி மக்களிட்ட ஒரு வித்தியாசத்தை காட்டிச்சுது. அந்த நிகழ்ச்சி முடிஞ்சு கீழ இறங்கிவர எழுதுமட்டுவாலில நிகழ்ச்சி செய்யவேணுமென்று சொல்லி எங்களை அதிலயே வைச்சுப்முன்பதிவு(ஓடர்) செய்திச்சினம். அதில இருந்து அப்பிடியே தொடங்கி அதுக்குப் பிறகு "அருணா இசைக்குழு" என்று பெயரும் வைச்சு இயங்கத் தொடங்கியாச்சு. பிறகு அப்பிடியே கொஞ்சங்கொஞ்சமா வளர்ந்து இப்ப யாழ்ப்பாணத்தில பேர் சொன்னா தெரிஞ்சுகொள்ளக்கூடிய ஒரு இடத்துக்கு வந்தாச்சு.

நாங்கள் இலங்கையில தமிழாக்கள் இருந்த எல்லா இடத்திலயும் இசைக்கச்சேரி நடத்தியிருக்கிறம். முந்தி சவுண்ட்செற் எல்லாம் இல்லை கோன் கட்டித்தான் நிகழ்ச்சி நடக்கும் 75க்குப் பிறகுதான் சவுண்ட் சிஸ்டம் போட்டு நிகழ்ச்சி செய்ய வெளிக்கிட்டது. அந்தநாளையில ஒரு காரிலதான் நிகழ்ச்சி செய்யப்" போறது கார் பின்பக்கத்தில வாத்தியங்களை ஏத்திப்போட்டு மற்றவர்கள் முன்னால இருந்து போறது. [illegible]மாதிரி எந்த வசதியும் தொழிநுட்பசாமான்களும் இல்லை ஆனாலும் எங்கட இசைநிகழ்ச்சியப் பாக்கிறத்துக்கென்று சனாங்கள் விடியவிடிய காத்திருப்பினம். மேளக்கச்சேரி. வில்லுப்பாட்டு. நாடகங்கள் எல்லாம் நடக்கும் இருந்தாலும் எங்கட கச்சேரிகளுக்காக விடியவிடிய காத்திருக்கிற ரசிகர்கூட்டமும் இருந்தது.

கோயில் திருவிழாக்காலம் தொடங்கீற்றுது என்றால் எங்களுக்கு நித்திரை கொள்ள நேரமிருக்காது. ஒரு நாளைக்கு ரெண்டு மூன்று கச்சேரியும் நடக்கும் கிளிநொச்சியில செய்திட்டு அப்பிடியே வவுனியாவெல்லாம் போய் நிகழ்ச்சி செய்த சம்பவமும் இருக்கு. யாழ்ப்பாணம்,மன்னார் முள்ளியவளை முல்லைத் தீவெண்டு தொடர்ந்து செய்திருக்கிறம்.

**இசையும் புரட்சியும்**

இப்பிடியே போய்க்கொண்டிருக்கேக்க நாட்டுப் பிரச்சனையும் கொஞ்சங்கொஞ்சமா சூடு பிடிக்கத் தொடங்கீற்றுது. 83ம் ஆண்டு வரையும் நிறைய இடங்களுக்கும் போய் நிகழ்ச்சி செய்தனாங்கள். 83 கலவரத்துக்குப் பிறகு அப்பிடியே எல்லாம் தொப்பென்று குறைஞ் சிட்டது. பிறகு வந்த காலப்பகுதிகளில புரட்சிப்பாடல்கள் கொண்ட இசைக் கச்சேரிகள் தொடங்கிற்றது.

**புலிகளின் குரலில் பணி**

விடுதலைப்புலிகளின்ர காலத்தில் புலிகளின் குரல் வானொலியில இசையமைப்பாளரா வேலை செய்தனான்.

அவர்களின்ர நிதர்சனத்தின்ர வெளியீடா என்ர இசையமைப்பில புரட்சிப்பாட்டுக்கள் வெளியாச்சுது. "ரத்தத்திலே சிவந்த மண்ணே முத்தம்கொடுத்தேன் வா". "மானம் ஒன்றே வாழ்வெனக்கூறி வழியில் நடந்தான் மாவீரன்." "குழந்தைகள் நாம்." "போருக்குப் போகும் புலி வீரா" இப்பிடி நிறையப் பாட்டுக்கள் என்ர இசையமைப்பில வெளியானது. அச்சுவேலியில பிளேன் விழுந்தவுடன பாட்டொன்று செய்ய வேணுமென்று என்னைக்கூப்பிட்டு

(23ஆம் பக்கம் பார்க்க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# கோலாகலமாக இடம்பெற்றது தென்னாசிய இலக்கியத் திருவிழா

ந.ஞானசூரியா

தென்னாசிய எழுத்தாளர்கள் மற்றும் இலக்கிய அமைப்பும், சார்க் உயர்குழுவும் இணைந்து 53ஆவது தென்னாசிய இலக்கியத்திருவிழாவைக் கடந்த பெப்ரவரி மாதம் 24,25,26ஆம் திகதிகளில் இந்தியத் தலைநகர் புதுடில்லியில் நடத்தியது. இந்திய வெளியுறவு அமைச்சின் சார்க் பிரிவு, கலாசார உறவுகளுக்காக இந்தியப் பேரவை, இலங்கை-இந்திய அமைப்பு, இந்தியா-பூட்டான், இந்தியா-பங்களாதேஷ், இந்தியா-ஆப்கானிஸ்தான் அமைப்புக்கள் மற்றும் சாகித்திய அமைப்பு என்பன இணைந்து இந்தப் பெருந்திருவிழாவை ஒழுங்கு செய்திருந்தன.

**உறவு கொள்ளும் மரபு**

சார்க் எழுத்தாளர் அமைப்பின் தலைவரான பிரபல இந்திய எழுத்தாளரான அஜித்கூர் தொடக்கி வைத்த இந்தத் தென்னாசிய இலக்கியத் திருவிழா மக்களோடு மக்கள் உறவு கொள்ளும் மரபின் தொடர்ச்சியான குறியீடாக அமைந்திருந்தது. தென்னாசிய மக்கள் மத்தியில் அமைதியைப் பேணுதல், பரஸ்பர புரிந்துணர்வு, எல்லைகளுக்குள்ளும் எல்லை தாண்டியும் பரஸ்பரப் புரிந்துணர்வு, பண்பாட்டு பன்முகப்பாட்டுக்கான பரஸ்பர அங்கீகாரம் என்பன கருப்பொருள்களாக அமைந்தன. சார்க் நாடுகளில் வாழும் மக்கள் ஒரு பொதுவான நாகரிகத்தையும் வரலாற்றையும் பங்காகக் கொண்டார்கள். எழுத்தாளர்களும், கவிஞர்களும் பயங்கரவாத அச்சுறுத்தல்களுக்கு மத்தியில் பலமான தூண்களாக மிளிர்பவர்கள் இவ்வாறாக சார்க் நாட்டு எழுத்தாளர்களின் முழுமையான பங்களிப்பு என்பது இலக்கியத் திருவிழா ஏற்பாட்டாளர்களுக்கு மிகுந்த உற்சாகத்தை வழங்கியிருந்தது. விழாவின் இயக்குநர், பேராசிரியர் ஆனந்தகுமார் நிகழ்வுக்கு வருகை தந்த சார்க் நாட்டு தூதுவர்களையும் எழுத்தாளர்களையும் அறிமுகம் செய்தார். வரவேற்புரையை திருமதி அஜித்கூர் நிகழ்த்தினார்.

*'முகில்களையும், பருவப் பெயர்ச்சிகளையும்*
*பறவைகளையும், மிருகங்களையும்*
*சமுத்திரங்களையும், ஆறுகளையும்*
*பூக்களையும், மிருகங்களையும்*
*சார்க் நாடுகளின் மக்களாகிய நாம்*
*பங்கிட்டுக் கொள்வது போல்*

*நிலைக்குத்தாகவும்,*
*சமாந்தரமாகவும்,*
*நுண்ணிய பாரிய மட்டங்களில்*
*நாகரீகத்தின் பயணங்களையும்*
*பங்கிட்டுக் கொள்கின்றோம்.*
*அத்தோடு*
*எங்கள் துன்ப துயரங்களையும்*
*ஆசை அங்கலாய்ப்புக்களையும்*
*நாம் பகிர்ந்து கொள்கின்றோம்.*
*வடக்கிலே எழுந்து நிற்கும் இமயமலையும்*
*தெற்கிலே சங்கமிக்கும் வங்காள விரிகுடாவும்*
*அராபிக்கடலும் இந்து சமுத்திரமும்*
*எம்மை எல்லாம் ஒன்று சேர்த்துள்ளன.*
*இதையிட்டு நாம் பெருமை கொள்கிறோம்'*

எனத் தமது வரவேற்புரையில் சார்க் எழுத்தாளர் அமைப்பின் நோக்கை வலியுறுத்தினார் அஜித்கூர் அவர்கள்.

**தப்பி ஓடும் சமாதானப் பறவை**

1986 இல் தப்பி ஓடும் சமாதானப்பறவையை கொந்தளிக்கும் சார்க் பிராந்தியத்தில் உயர்த்தி வைக்க எடுக்கப்பட்ட பிரயத்தனங்களில் ஒரு செயற்பாடாகவே இத்தகைய எழுத்தாளர் சந்திப்புக்களை நாம் மனங் கொள்ளலாம். திருமதி அஜித் கூர் அவர்களின் தொடர்ச்சியான முயற்சிகளால் 1987 ஆம் ஆண்டளவில் இந்தியா - பாகிஸ்தான் எழுத்தாளர் சந்திப்பு நிகழ்ந்தது. ஆயினும் 2000ஆம் ஆண்டளவிலேதான் ஒரு முழுமையான சார்க் நாடுகளின் எழுத்தாளர் மாநாட்டை நடத்த முடிந்தது. 2001 இல் சார்க் எழுத்தாளர் அமைப்பு எனும் அங்கீகாரத்துடன் மாநாடுகள் தொடர்ச்சியாக நடத்தப்பட்டன.

சார்க் நாடுகளில் மக்களுடன் தொடர்புகளை ஏற்படுத்தும் பண்பாட்டு அம்சத்தையும் சார்க் அரசியல் மாநாடுகள் நடத்தப்படும் போது இணைக்கவும் வழிகோலப்பட்டது. 2007இன் பிற்பாடு ஆப்கானிஸ்தானும் சார்க் அமைப்பில் உள்வாங்கப்பட, அந்நாட்டு எழுத்தாளர்களுக்கு இத்தகைய மாநாடுகளில் பங்கு கொள்ள வழிகோலியது.

மகாத்மாகாந்தியின் கொள்ளுப்பேரர்கள் பேராசிரியர் ராஜ்மோகன்காந்தி, தாராகாந்தி பட்டார்சார்யா ஆகியோர் சிறப்புரை ஆற்றினார்.

**சார்க் நாடுகளின் தூதர்கள்**

பேராசிரியர் அசீஸ் நந்தி, கலாநிதி கபில வாத்சாயனார், கலாசார தொடர்புகளுக்கான இந்தியப்பேரவையின் பணிப்பாளர் அமரேந்திர கௌட ஆகியோருடன் சார்க் நாட்டுத் தூதுவர்களும் உரையாற்றினார்கள். இலங்கை உயர்ஸ்தானிகர். திருமதி சித்திராங்கனி வஜிஸ்பரா இலக்கியம் மக்கள் மத்தியில் நல்ல புரிந்துணர்வையும், நட்பையும் வளர்க்கும் பயிர் எனக் குறிப்பிட்டார்.

காலையில் பல நாட்டு எழுத்தாளர்கள் தங்கள் புத்தகங்களை வெளியிட்டு வைக்கும் நிகழ்வும், மாலையில் கவிதை வாசிப்புகளும், நாடக நிகழ்வுகளும் சிறப்புற நடைபெற்றன. எட்டு நாட்டுக் கவிஞர்களின் பங்களிப்பு ஒரு வித்தியாசமான அனுபவமாக இருந்தது. அடுத்த இரு நாள்களிலும் கவிதை வாசிப்பு அமர்வுகள் தொடர்ந்தன. சில கவிஞர்கள் சொந்த மொழியிலும் கவிதையை பாடியும், எடுத்துச் சொல்லியும் இரசனை கூட்டினர். ஆய்வு அரங்குகளில் பேராசிரியர்கள் விரிவுரையாளர்கள் மற்றும் எழுத்தாளர்களும் தமது ஆய்வுரைகளை சிறப்பாக நிகழ்த்தினர். கட்மண்டு பல்கலைக்கழக நேபாளியப் பேராசிரியர் அபிசுவேதி, இந்தியக் கவிஞர் திரு. ஜெயந்தா மகாப்பாட்ரா, பங்களாதேஷ் பேராசிரியர் முகமட் நுறுல் கூடா, இலங்கைப் பேராசிரியர் பிரணீத் அபயசுந்தரா, இந்தியக் கவிஞர் கலாநிதி சீதாகாந்த் மகாபர்தா, இலங்கை கவிஞர் கமலா விஜயரட்னா எனப் பல்வேறுபட்ட கவிஞர்கள் எழுத்தாளர்கள் தலைமையில் நிகழ்வுகள் நடந்தேறின.

**இலங்கையிலிருந்தும் குழு**

இலங்கையிலிருந்து 12 பேர் கொண்ட குழுவுக்கு எழுத்தாளர் தயா திஸ்ஸ நாயக்க தலைமை தாங்கினார். யாழ்ப்பாணத்திலிருந்து சென்ற கவிஞர் சோ.பத்மநாதன் தமது கவிதைகளை ஆங்கிலத்தில் வாசித்தார். யாழ்ப்பாண பல்கலைக்கழக சிரேஷ்ட ஆங்கில மொழிக்கற்பித்தல் விரிவுரையாளர் கலாநிதி கந்தையா ஸ்ரீகணேசன் தமது கவிதைகளுடன் பேராசிரியர் செல்வா கனகராயகம் தொகுத்த 'Uprooting the Pumpkin' எனும் இலங்கைத் தமிழ் எழுத்துக்களின் மொழிபெயர்ப்பு பற்றிய ஆய்வை வழங்கியிருந்தார். இலங்கை அரசின் கலாசார அமைச்சின் செயலாளர் எம். சுவர்ணபால் மற்றும் பண்பாட்டுப் பணிப்பாளர் கலைக்குழுவின் தலைவர் உட்பட பேராசிரியர் ஜே.பி. திசநாயக்க, பிரணீத் அபயசுந்தர, கவிஜை கமலா விஜயரட்ண ஆகியோர் கலந்து கொண்டு உரையாற்றினர்.

பல்வேறுபட்ட கவித்துவ ஆற்றல் கொண்ட கவிஞர்கள் எழுத்தாளர்கள் சந்தித்து சிந்தனை பரிமாற்றம் செய்து கொள்ளக் கிடைத்த வாய்ப்பு ஒரு அரிய நிகழ்வு ஆகும். பண்பாட்டு பரிவர்த்தனைக்கான ஒரு களம், இந்த நிகழ்வு என்பதும் இத்தகைய நிகழ்வுகளின் தொடர்ச்சி ஓர் ஆழமான புரிதல்களுக்கு மக்களை இட்டுச் செல்லும் என்பதும் குறிப்பிட வேண்டியதே.

> சார்க் எழுத்தாளர் அமைப்பின் தலைவரான பிரபல இந்திய எழுத்தாளரான அஜித்கூர் தொடக்கி வைத்த இந்தத் தென்னாசிய இலக்கியத் திருவிழா மக்களோடு மக்கள் உறவு கொள்ளும் மரபின் தொடர்ச்சியான குறியீடாக அமைந்திருந்தது. தென்னாசிய மக்கள் மத்தியில் அமைதியைப் பேணுதல், பரஸ்பர புரிந்துணர்வு, எல்லைகளுக்குள்ளும் எல்லைதாண்டியும் பரஸ்பர புரிந்து ணர்வு, பண்பாட்டு பன்முகப்பாட்டுக்கான பரஸ்பர அங்கீகாரம் என்பன கருப்பொருள்களாக அமைந்தன. சார்க் நாடுகளில் வாழும் மக்கள் ஒரு பொதுவான நாகரீகத்தையும் வரலாற்றையும் பங்காக கொண்டார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## இந்துவின் பண்பாட்டுப் பெருவிழா



யாழ். இந்துக் கல்லூரி மாணவ முதல்வர் சபையின் ஓர் முதல் முயற்சியாக யாழ். இந்துவின் பண்பா பெருவிழா. 2017 வெற்றிகரமாக யாழ்மண்ணில் ஒரு வரலாற்றுத் திருப்பமாக இடம்பெற்றது. கடந்த 18 அ திகதி செவ்வாய்க்கிழமை தமிழர் பண்பாடு மற்றும் கல்விக்காகப் பெரும்பாடுபட்டு நாவலர் கட்டிய யாழ். இந்து கல்லூரியின் ச[illegible]லிங்கம் கலையரங்கில் ``அழிவின் விளிம்பில்" நிற்கும் தமிழரின் அற்புத பண்பாட்டை மீளத் துளிர்க்கவென யாழ். இந்து மாணவ முதல்வர் சபையினால் யாழ். இந்துக் கல்லூரி மற்றும் யாழ். இந்து மகளீர் கல்லூரியின் 2018 உயர்தர மாணவர்களை இணைத்து இந்தப் பண்பாட்டு விழா நடத்தப்பட்டது. நாட்டிய நாடகம், பறையிசை, மெல்லிசை கலந்து சொல்லிலே சிறந்த கருத்துக்கள் நிறைந்த வில்லிசை, பட்டிமன்றம், இசையிலே புதியதோர் சரித்திரம் படைத்த இந்துவின் வாத்திய சங்கமம் போன்ற மேடை நிகழ்ச்சிகளும், உறியடித்தல் தலையணைச்சண்டை, கிளித்தட்டு , கயிறிழுத்தல் போன்ற தமிழர் பாரம்பரிய விளையாட்டுகளும் சிறப்புறவே இடம்பெற்றன.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கே.எஸ்.சிவஞானராஜா

# திருமுறைகள் மனிதர்களுக்கு அருமருந்தாகுமே!

ஒவ்வொரு சமயத்திலும் அவரவர் சார்ந்த வேதங்கள் தேவாமிருதமாகும். அது வேதமருந்து என்றும் ஆன்மிக மருந்து என்றும் உயர்வாகக் கொள்ளப்படுகிறது. இதில் யாருமே அதீத நம்பிக்கை கொள்வார்களேயன்றி மாறாக நம்பிக்கையீனம் கொள்ள எத்தனிக்க மாட்டார்கள். காரணம் ஒவ்வொரு வசனங்களும் சரி, பாடல்களும்சரி இறைவனாலும் இறைஅனுபூதிமான்களாலும் தரப்பட்டிருப்பதுவே அதுவாகும். அவை அற்புதம் நிறைந்தவை.

**சைவ சமயம்**

எமது சைவசமயத்தைப் பொறுத்த அளவில் இறைவனாலும் சமய குரவர்களாலும் பேரின்பம் நிறையும் பொருட்டு ஞான சாகரமாக அருளப்பட்டவையே திருமுறைகளாகும். திருமுறைகளில் பொதிந்துள்ள ஒவ்வொரு பதங்களும் இறையமுதில் தோய்ந்து எடுக்கப்பட்ட திருவருட் சொத்துக்களாகும். சொல்லச் சொல்ல இனிக்கும். பாடப்பாடப் பலிக்கும். தேடத் தேட வாழ்வு சோபிக்கும். எழுத எழுத துன்பம் பறக்கும். எண்ண எண்ண வீடோ சிறக்கும். உண்ண உண்ண நாடோ உயரும். கேட்கக் கேட்கப் பிணியோ தீரும். தீராத பக்தியும் ஓயாத ஈடுபாடும் காயாத மனமும் தாளாத நம்பிக்கையுமே செளபாக்கியத்துக்கு அடிப்படையாகும். இலவசமாகக் கிடைக்கக் கூடிய இந்தப் பாக்கியமானது இறைவனால் வழிகாட்டப்பட்டதாகும். திருமுறைகளிலே பக்தியும், பண்ணும் பொதிந்துள்ளமையால் ஓதும் போதே சிவப்பேறு கிடைக்கும்.

**பக்தி**

மனிதனாகப் பிறந்த ஒவ்வொருவருக்கும் பக்தி உண்டு. இறைவனோ பக்திக்கு இரங்குகின்றான். தன்னையறியாமலே அடிமையாகின்றான். பக்தி செய்வதற்குப் படிப்போ, பட்டமோ, சம்பளமோ, பற்றுச் சீட்டோ, அறிமுகமோ, வாகனமோ, குளிரூட்டிகளோ தேவையில்லை. நெக்கு நெக்கு உருகி நினைப்பதுவும் நைந்து நைந்து பாடுவதும் அவனருளாலே அவன்தாள் வணங்குவதும் இருந்தாலே போதும். பக்திக்கு ஜாதியோ உயர்வோ, தாழ்வோ, இனமோ, மொழியோ எதுவுமே தேவையில்லை. வயதும் தேவையில்லை. வனப்பும் தேவையில்லை. வடிவும் தேவையில்லை. இசையும் தேவையில்லை இலக்கணமும் தேவையில்லை. எனவே துணிந்து பாடலாம். வெட்கமும் தேவையில்லை. போர்வையும் தேவையில்லை. போர்க்கவும் தேவையில்லை. ரமணர் கௌபீனம் அணிந்ததுவே பக்தியின் உச்சமே! ரமணரின் துறவு நிலையையும் பக்தி நிலையையும் வெல்வதற்கு இன்று வரையாருமிலர். கூட்டுறவு வர்த்தக சங்க முகாமையாளராக இருப்பதனைப் போன்று வரவையும், செலவையும், மேற்பார்வையும் செய்வதும், இடிப்பதும், கட்டுவதும் ,சம்பளம் கொடுப்பதும், நியமனஞ் செய்வதும், நீக்குவதும், கூட்டம் கூட்டுவதும் , விளம்பரஞ் செய்வதும், விளம்பரமாவதும், நாயன்மார்களுடைய பக்திக்குக் கிட்டவும் நெருங்க முடியாதவையாகும். பக்திவேறு பதவி வேறு. பயன்கருதாத பணியே பக்தியின் பேறு. தற்போது பதவி கருதிய பணியே பக்தி என்று சிலர் வரைவிலக்கணம் வகுத்துள்ளனர். அது சரியென்று பட்டங்களையும் பதவிகளையும் போட்டு இதுதான் பக்தியின் வெளிப்பாடு என்று கூறுவதோடு மட்டும் நின்றுவிடாமல் ஒரு குடும்பத்தின் தனிவிவகாரங்களிலும் தீர்ப்புச் சொல்கின்ற ஏகபிரதிநிதியாகவும் விளங்குகின்ற பேரவலம் தொடர்கிறது. சிலர் பதவியேற்றபின்னர் அவலங்கள் நடந்து கொண்டேயிருக்கும். பிரச்சினைகள் தலைவிரித்தாடிக் கொண்டேயிருக்கும். வழக்குகள் வந்து கொண்டேயிருக்கும். என்னதான் பிரச்சினை வந்தாலும் பதவியை விட்டிறங்கவும் மாட்டார்கள். மற்றவர்களை விடவும் மாட்டார்கள். "வேண்டாம் சாமி போதும் ராசா வீட்டுக்குப் போங்கோ" என்று சொல்லும் மட்டும் பல்லக்குத் தான். சின்னம்மா மாதிரியே தான் பக்திக்குப் பாதை வகுத்துள்ளார்கள். சின்னம்மாவைக் கும்பிட்ட மாதிரி ஆண்களின் நடிப்பு அடேயப்பா! ஒரு பக்தியுள்ள தலைவனைத் தேடிக்கண்டு பிடிக்க இந்தப் பிறவிபோதாதப்பா! மகிந்தவுக்கும் ஏகப்பட்ட சனம். மைத்திரிக்கும் ஏகப்பட்ட சனம். சின்னம்மாவுக்கும் சனம் சனத்தை வைத்துப் பக்தியை எடைபோடலாமா? பக்தியானது எந்தவிதமான ஆரவாரமும் அற்றதாகும்.

**பண்**

பண்ணோடு இசைபொதிந்து திருமுறை ஒலிக்கும் போது உலகமே வியந்து சொக்கி நிற்கும். இந்தியாவிலே இசையானது பயிர்களையே சீக்கிரமாக வளர்க்கும் என்பது நிரூபிக்கப்பட்டுள்ளமை இங்கு நோக்கத்தக்கது. திருமுறைகள் எதுவாயினும் அதற்குரிய பண் வகுக்கப்பட்டுள்ளது. அவ்வாறு உரிய பண்களுக்கு அமைவாகத் திருமுறைகளைப் பயபக்தியோடு ஓதுவோமாக இருந்தால்,

நோய், பிணி, இடர், துன்பம், கவலை, செய்வினை, சூனியம், கடன், தோல்வி, பயம், படபடப்பு, எதிரிகள், தொல்லை, பாவம், கடுமை, காவல், களவு, பயமுறுத்தல், பணத்தட்டுப்பாடு, கண்ணூறு, கிரக தோசம், மரணபயம் யாவுமே அறவே நீங்கும். திருமுறைகள் பதிகமாகவே ஓத வேண்டும். ஆற அமரஇருந்து ஆசார சீலராக ஓதவேண்டும். தினமும் பண்ணோடு பாடுங்கள் சுகமானது உங்களைத்தேடிவரும். டாக்டர் நா.வி.மு.நவரத்தினம் ஐயாவின் திருமுறை கேட்க வேண்டும். யாவும் செளபாக்கியமாகும். கேட்போமே வருகிறீர்களா?

50 வருட காலமாக யாழ் குடாநாட்டு மக்களின் நன்மதிப்பைபெற்ற உங்கள் அபிமான

மைதிலி நகைமாடம் இன்

தங்கத்திருநாளாம் அக்ஷய திருதியை கொண்டாட்டம்



இம்மாதம் (29.04.2017) 29 ஆம் திகதி வரை எம்மிடம் நகை வாங்கும் அனைத்து வாடிக்கையாளர்களின் சிட்டைகளும், குலுக்கல் முறையில் தெரிவுசெய்யப்படுபவர்களுக்கு விசேட பரிசுகள் காத்திருக்கின்றன.

முதலாம், இரண்டாம், மூன்றாம் பரிசுகள்
தங்க நாணயங்கள், மேலும் 10 ஆறுதல் பரிசுகள்

அன்றைய தினத்துக்கான (28,29 ஆம் திகதி) விசேட சலுகைகள்

- அதி நவீன டிசைனுக்கேற்ப நம்ப முடியாத விலைக் கழிவுகள் வழங்கப்படும்.
- பழைய நகைகளைக் கொடுத்து நகை வாங்குவோருக்கு அன்றைய பவுண் விலைக்கே எடுக்கப்படும்.
- குறிப்பிட்ட நகைகள் தங்க விலைக்கே சேதாரம் இல்லாமல் வழங்கப்படும்.
- நகைகள் கொள்வனவு செய்யும் அனைவருக்கும் அதி விசேட பரிசு காத்திருக்கின்றது.
- 02 பவுணுக்கு மேல் கொள்வனவு செய்வோருக்கு பவுண் காசு அன்பளிப்பாக வழங்கப்படும்.

காலை 8.00 மணி தொடக்கம் இரவு 8.00 மணிவரை கடை திறந்திருக்கும்

அக்ஷய திருதியை

அர்த்தமுள்ள அக்ஷய திருதியில் பொன், பொருள் வாங்கினால் செல்வம் பெருகும் என்பது அசைக்க முடியாத நம்பிக்கையாகும்.

செல்வத்துக்கு அதிபதியான குபேரன் நான் இழந்த சங்க நிதி, பதும நிதி களை பெற்றது அக்ஷய திருதியை நாளில்தான். பாண்டவர்கள் வன வாசத் தின்போது சூரியனிடம் இருந்து அள்ள அள்ள குறையாத அட்சய பாத்திரம் பெற்றது இந்த நாளில்தான். அதேபோல் மணிமேகலையும் இந்த நாளில் தான் அக்ஷய பாத்திரம் பெற்றுள்ளார். ஆம் உங்கள் செளபாக்கியம் குறை யாத வாழ்வின் அதிர்ஷ்டம் பெருகிட தூய தங்க ஆபரணங்களை உங்கள் ஒவ்வொருவர்து இல்லத்துக்கு எடுத்துச் செல்லத் தவறாதீர்கள்.



யாழ் மைதிலி ஜுவெலர்ஸ்

89V, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். T.P. 021 222 7902 | 79 Z, Sea Street, Colombo-11. Tel: 2396239.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர்களின் வரலாறு இலக்கியங்களாக மலர வேண்டும்

இரா.தனம்

இலக்கியம் என்பது காலத்தின் கண்ணாடி ஈழத்தின் ஒவ்வொரு கால கட்டத்திலும் மக்களால் உணரப்படுவது பெண் அடிமை மதக் கோட்பாடு போன்றவை அன்றைய கால இலக்கியங்களாக மேலெழுந்தவை. அன்றைய கால இலக்கியங்கள் ஊடாக அந்தந்தக் காலப்பகுதியின் சரித்திரங்களை அறிந்து கொள்ள முடிகின்றது. வன்னியைப் பொறுத்த மட்டில் மாவீரன் பண்டார வன்னியனின் போர் வரலாறு இன்று வரையிலும் இலக்கியத்தில் இடம்பெறவில்லை.

**மாவீரன் பண்டார வன்னியன்**

மாவீரன் பண்டார வன்னியன் எவ்வாறு வாழ்ந்தான்; ஆங்கிலேயருடன் எப்படிப் போராடினான்; காக்கை வன்னியனால் காட்டிக் கொடுக்கப்பட்டுக் கற்சிலைமடுவிலே தோற்கடிக்கப்பட்டான்; அடுத்து அவன் எங்கு சென்று இறந்தான் போன்ற வாழ்க்கை வரலாறு இன்றைய இளம் தலைமுறையினருக்குத் தெரியாத புதிராகவே உள்ளது. சான்றாக சில எழுத்தாளர்கள் சில ஆதாரங்களை வைத்து வரலாறாக வெளிக் கொணர்ந்தனரே தவிர அது வரலாற்றில் சேர்த்துக் கொள்ளப்படவில்லை. இருபதாம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியில் சிங்கள-தமிழ் இனங்களுக்கிடையிலான போரானது தமிழர்கள் மத்தியில் பல மாற்றங்களை ஏற்படுத்தி 21ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் முடிவுக்கு வந்தது. மூன்று தசாப்த காலங்களாக நடைபெற்ற அகிம்சைவழிப் போராட்டத்திலும் ஆயுத வழிப் போராட்டங்களிலும் தமிழ் மக்கள் மத்தியில் பல்வேறு பரிணாம வளர்ச்சி, மாற்றம் என்பன ஏற்பட்டன. அந்தக் காலத்திலே வாழ்ந்த படைப்பிலக்கியவாதிகள் சமூகம் சார்ந்தவற்றையே வெளிக் கொண்டுவந்தனர்.



எனவே நடைபெற்ற மூன்று தசாப்தங்களுக்கு மேலாக இடம்பெற்ற நிகழ்வுகள் எதிர்கால இளம் தலைமுறையினருக்கு பாடசாலைகளிலே கற்பிக்கப்படவேண்டியன. பண்டைய தமிழ் மன்னர்களின் போரியல் வரலாறுகளை மாற்றி அமைத்துச் சிங்கள இராசதானிகளின் வரலாறுகளை வரலாறாக மாற்றிப் பாடசாலைப் புத்தகங்களிலே அச்சிட்டுக் கற்பித்து வருகின்றார்கள். இலக்கியத்தைப் பொறுத்தவரை 20ஆம், 21ஆம் நூற்றாண்டிலே தமிழ் தேசத்திலே என்ன நடந்தது? எப்படி எப்படி எல்லாம் மக்கள் இம்சிக்கப்பட்டனர். கொலை செய்யப்பட்டனர். வஞ்சிக்கப்பட்டனர். எப்படியெல்லாம் காணாமல் ஆக்கப்பட்டனர் என்பவைகளை எல்லாம் எமது அடுத்த சந்ததியினருக்கு எடுத்துக் கூறும் ஊடகமாக இலக்கியங்கள் இருக்கின்றன. எனவே எமது ஈழத்தைப் பொறுத்தமட்டில் கடந்து சென்ற கசப்பான வரலாறுகளை ஒன்றுவிடாது அவைகளை வரலாறு படைப்பதில் நாம் கவனம் செலுத்த வேண்டிய காலமாக உள்ளது.

**தமிழனின் பண்பாடுகள்**

சிறிது சிறிதாக தமிழனின் பண்பாடுகள், கலாசாரங்கள், விழுமியங்கள் அழிக்கப்படுகின்றன. ஆக்கிரமிப்புக்கள், காணி வரலாறு படைத்த புராதன கால ஆலயங்களை ஆக்கிரமித்து அதில் புத்தர் சிலைகளை வைக்கப்பட்டு புத்த கோயிலாக மாற்றப்படுகின்றன. இப்படியான செயற்பாடுகள் நடைபெற்று யாவும் விழுங்க ப்பட்டு வருகின்றன. இது மட்டுமல்ல தமிழ் இனத்துக்காக தமிழ் மண்ணுக்காக தமிழனின் உரிமைக்காக தமிழரின் தன்மானம் காப்பதற்காக போராடி தமிழ் மண்ணில் ஆகுதியாகிய வீரமறவர்களின் தியாகங்களை இலக்கியமாக வடிவமைக்க வேண்டியது காலத்தின் கட்டாயமாகும். எனவே தொடர்ந்து கொண்டு வரும் அநீதிகளையும் அட்டூழியங்களையும் இலக்கியங்களாக வடித்து எமது அடுத்த சந்ததிக்கு அவைகளைக் கொண்டு செல்வதில் படைப்பாளிகள் முனைப்புடன் செயற்பட வேண்டும்.

## நித்திரைக்குச் செல்வதற்கு...

(19 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இசையமைக்கச் சொல்லி 'சிறீமா ஆச்சி பெற்ற மகள் சந்திரிக்காவே போச்சுதம்மா உங்களின் வான்படைக் கலமே" என்ற பாட்டையும் தந்து இரவு புலிகளின்குரல்வானொலியில சிறப்பு நிகழ்ச்சில ஒலிபரப்ப வேணுமெண்டும் சொல்லிச்சினம். உடன அவசரமா வேலைசெய்து இசையமைச்சு சாந்தன் பாடி ஒலிப்பதிவுசெய்து அன்றிரவே அந்தப் பாட்டு ஒலிபரப்பானது. ஆனா அந்தப் பாட்டில ஒரு நாட்டின்ர தலைவரை இழிவுபடுத்துவது மாதிரியான வார்த்தைகள் வருகுது என்று சொல்லி தலைவரிட்ட இருந்து பாட்டை தடை செய்யச் சொல்லி உத்தரவு வந்தது. அப்பிடி இருந்தும் அந்தப் பாட்டை நிறையப்பேர் முணுமுணுத்துக்கொண்டு இருந்தவை. அவசரத்தில செய்தாலும் மிகச்சிறப்பா அது வந்திருந்தது. இப்பிடி நிறைய சம்பவங்கள் நடந்தது. 93ம் ஆண்டு முல்லைக் கலைஞர்கள் தயாரிச்ச தமிழோசை என்ற படத்துக்கு இசையமைச்சனான். அதுக்கு விடுதலைப் புலிகளின் தலைவர் விருது தந்தவர். பிறகு இடம்பெயர்ந்து சாவகச்சேரில இருக்கேக்க புரட்சிப் பாட்டு இசைக்கச்சேரிகள் தொடர்ந்து செய்தனாங்கள்.

**நாட்டுப் பிரச்சினை உச்சத்தில்**

பயிற்றுவித்தலூடாக இசையைத் தொடர்தல் பிறகு கொஞ்சநாள் நாட்டுப்பிரச்சனை உச்சத்தில வர கொஞ்சக்காலம் இதில இடைவெளி வந்திற்றுது. அதுக்குப்பிறகு திரும்பவும் ஆரம்பம் மாதிரியே பரவலா எல்லா இடமும் நிகழ்ச்சிகள் செய்யத் தொடங்கினம். 2004ம் ஆண்டு லண்டனில போய் பூபாள ராகங்கள் என்ற நிகழ்ச்சி செய்தனான். பிறகு இப்ப இதில இருந்து கொஞ்சம் நான் விலகிஇருக்கிறன் இப்ப என்னுடைய மூன்று மகன்மார் இதைக்கொண்டு நடத்துகினம். இப்ப முந்தையமாதிரி இல்லைத் தானே நிறைய வசதிவாய்ப்புக்கள் வந்திட்டுது. இப்ப இசைத்துறையில நிறையப்பேர் வேலைசெய்யத்தொடங்கீற்றினம். நல்ல நல்ல படைப்புக்களும் வரத்தொடங்கியிருக்கு ஆனாலும் எங்களை மாதிரி ஆக்களுக்கு ஏனோ அந்தநாளையில் கிடைச்ச கொஞ்ச வளத்தோட செய்த நிறைய விசயங்களில ஏதோ ஒரு ஈர்ப்பும் சந்தோசமும் இப்ப செய்யிறதில கிடைக்கேல்ல மாதிரித்தான் இருக்கு. அதில எந்தளவு உண்மை இருக்கோ தெரியாது ஆனாலும் அதில உள்ள பிடிப்பு இன்னும் குறையாமத்தான் இருக்கு என தனது பழமையிலிருந்து விடுபட மனமின்றி அந்த இனிமையான நினைவுகளோடு வாழ்ந்துவருகிறார்.

**பல விருதுகளுக்கு உரியவர்**

இவருக்கு அரசினால் வழங்கப்படும் கலாபூசனம் விருது 2014ம் ஆண்டு கிடைத்திருக்கிறது. தேனிசை வேந்தன், இசைக்கோகுலம் என ஏகப்பட்ட விருதுகளுக்குச் சொந்தக்காரான சுப்பையா அருணாசலத்தின் இன்றைய இசைச்சேவை இசைத்துறையில் அடுத்த இளந்தலைமுறையை உருவாக்குவது. இசைவகுப்புக்காக காத்துக்கொண்டிருப்பார்கள் எனக்கூறி தன்னுடைய மாணவர்களிடம் செல்ல ஆயத்தமாகிறார். இந்த மூத்த இசைக்கலைஞன்.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

# சித்திரை மாத பலன்

## துலாம்

அனைவரிடத்திலும் சரிசமமாக நடந்து கொள்ளும் துலா ராசி அன்பர்களே, சிக்கனத்தைக் கடைப்பிடிப்பதில் கவனம் செலுத்துவது நன்மையைத் தரும். அதிக விடயங்களைத் தெரிந்து கொள்வதில் ஆர்வம் உடையவர்கள் நீங்கள். இந்தக் காலகட்டத்தில் கஷ்டம் நீங்கி சுகம் உண்டாகும். தனாதிபதி செவ்வாய் சஞ்சாரத்தால் பணவரத்து கூடும். எதிர்ப்புக்கள் மறையும். பகை பாராட்டியவர்கள் பகையை மறந்து நட்புக் கரம் நீட்டுவார்கள். நீண்ட நாள்களாக இருந்து வந்த பிரச்சினைகள் குறையும். எதையும் செய்து முடிக்கும் சாமர்த்தியம் உண்டாகும். வாக்குவன்மையால் காரியங்களில் அனுகூலம் ஏற்படும். வேளை தவறி உண்ண வேண்டி இருக்கும். வாகனம், வீடு ஆகியவற்றால் செலவு ஏற்படும். அடுத்தவர் பிரச்சினைகளில் தலையிடுவதைத் தவிர்ப்பது நல்லது.

தொழில், வியாபாரம் எதிர்பார்த்த அளவு வேகமாக நடக்காவிட்டாலும் இலாபம் குறையாமல் இருக்கும். பங்குதாரர்களுடன் இருந்து வந்த பிரச்சினைகள் நீங்கும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் தடங்கல்கள், கூடுதல் உழைப்பு ஆகியவற்றைச் சந்திக்க வேண்டியிருக்கும். பணி நிமித்தமாகப் பயணம் செல்ல வேண்டி வரலாம். குடும்பத்தில் இருப்பவர்கள் உங்களுடன் இன்முகம் கொடுத்துப் பேசுவார்கள். கணவன், மனைவிக்கிடையே இருந்த வருத்தங்கள் நீங்கும். பிள்ளைகள் விடயத்தில் அதிக அக்கறை காட்டுவீர்கள். அயலவர்களுடன் அனுசரித்துச் செல்வது நல்லது. பெண்களுக்குச் சாமர்த்தியமான பேச்சின் மூலம் காரிய வெற்றி கிடைக்கும். கலைத்துறையினருக்குச் சிறப்பான காலகட்டமாக இருக்கும்.

பழைய பாக்கிகள் வசூலாகும். முக்கிய நபர்களின் ஆதரவும் கிடைக்கப் பெறுவீர்கள். பணம் சம்பாதிக்கும் திறமை அதிகரிக்கும். கொடுத்த வேலையைத் திறமையுடன் செய்து முடித்துப் பாராட்டுப் பெறுவீர்கள். அரசியல்துறையினருக்கு எதிர்காலம் பற்றிய சிந்தனை அதிகரிக்கும். நண்பர்களால் தேவையான உதவி கிடைக்கும். எந்தத் தடைகளையும் தாண்டி எடுத்த காரியத்தில் வெற்றி பெறுவீர்கள். மனதில் மகிழ்ச்சி உண்டாகும். பதவிகள் சம்பந்தமான விடயங்களில் முன்னேற்றம் உண்டாகும். எதிர்ப்புக்களைச் சாமர்த்தியமாகச் சமாளிப்பீர்கள். மாணவர்கள் கல்வி தொடர்பான விடயங்களில் கவனமாக இருப்பது நல்லது. கூடுதல் கவனத்துடன் பாடங்களைப் படிப்பது வெற்றிக்கு உதவும்.

பரிகாரம்:
வெள்ளிக்கிழமைகளில் மகாலட்சுமியை வழிபட்டு வர பொன், பொருள் சேர்க்கை உண்டாகும். குடும்பத்தில் மகிழ்ச்சி ஏற்படும்.

## விருச்சிகம்

எடுத்த வேலையை கொடுத்த நேரத்தில் செய்யும் திறன் படைத்த விருச்சிக ராசி அன்பர்களே, நீங்கள் அவசரத்தை விட்டுவிட்டு நிதானத்தைக் கடைபிடிப்பது நல்லது. இந்தக் காலகட்டத்தில் எடுத்த முயற்சிகளில் சாதகமான பலன் கிடைக்கும். பணவரத்து அதிகரிக்கும். மற்றவர்கள் செய்யத்தயங்கும் வேலையைச் செய்து முடித்துப் பாராட்டுப் பெறுவீர்கள். எண்ணியபடி செயல்களைச் செய்து காரிய வெற்றி காண்பீர்கள். நண்பர்கள் மூலம் உதவிகள் கிடைக்கும். ஆன்மிகப் பணிகளில் ஈடுபாடு அதிகரிக்கும். விரும்பிய பொருள்களை வாங்கி மகிழ்வீர்கள். திருமண முயற்சிகளில் சாதகமான பலன் கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் இருந்த இடையூறுகள் நீங்கும். வியாபார வளர்ச்சி பற்றிய சிந்தனை எழும், எதிர்பார்த்த நிதி உதவி கிடைக்கும்.

உத்தியோகத்தில் இருப்பவர்கள் முன்னேற்றமான பலன் காண்பார்கள். புதிய வேலை பற்றிய சிந்தனை அதிகரிக்கும். சம்பள உயர்வு, பதவி உயர்வு கிடைக்கலாம். குடும்பத்தில் மகிழ்ச்சியான சூழ்நிலை காணப்படும். கணவன், மனைவிக்கிடையில் இருந்த ஊடல்கள் நீங்கி நெருக்கம் அதிகரிக்கும். பிள்ளைகள் பெருமை சேர்ப்பார்கள். விருந்து கேளிக்கை நிகழ்ச்சிகளில் குடும்பத்தினருடன் கலந்து கொள்வீர்கள். பெண்கள் எடுத்த காரியத்தைச் சிறப்பாக செய்து முடித்துப் பாராட்டுப் பெறுவார்கள். பணவரத்து திருப்தி தரும்.

கலைத்துறையினருக்கு பணவரத்து அதிகப்படும். பேச்சின் இனிமை சாதூரியம் இவற்றால் எடுத்த காரியம் கைகூடும். புண்ணிய காரியங்களில் நாட்டம் அதிகரிக்கும். அனைவருடனும் அனுசரித்துச் செல்வது நல்லது. அரசியல்துறையினருக்கு பூர்வீகச் சொத்துக்கள் மூலம் வரவேண்டிய இலாபம் தாமதப்படும். எதிர்பார்த்த காரியங்கள் நல்லபடியாக நிறைவேற கடினமாகப் பணியாற்ற வேண்டி இருக்கும். மேல் மட்டத்தில் இருப்பவர்கள் உங்களை ஆலோசனை செய்யாமல் தானாக எதையும் செய்வது உங்களுக்கு மன வருத்தத்தைத் தரலாம். மாணவர்கள் கல்வியில் முன்னேற்றம் காண எடுக்கும் முயற்சிகள் கைகூடும். எதிர்காலக் கல்வி பற்றிய சிந்தனை மேலோங்கும். வெளிநாடு செல்ல எடுக்கும் முயற்சிகள் சாதகமாக முடியும்.

பரிகாரம்:
வள்ளி தேவசேனா சமேதராக உள்ள முருகப் பெருமானை அர்ச்சனை செய்து வணங்க எல்லாத் துன்பங்களும் நீங்கி வாழ்வில் இன்பம் உண்டாகும்.

# தமிழ் மொழியின் தொன்மையில் தொக்கு நிற்கும் அம்சங்கள்

புலவர் வள்ளுவதாசன்




பண்டைய தமிழ் மொழி வரலாற்றில் தமிழ் மொழிக்கு இலக்கணம் வகுத்த அகத்தியர், தொல்காப்பியர், பவணந்தி முனிவர் போன்றோரால் காலத்துக்குக் காலம் திருத்தங்கள் செய்யப்பட்டபோதிலும், அன்னியர்களும் தமிழ் மொழியிலுள்ள குறைபாடுகளைக் கண்டறிந்து, பிழைதிருத்தம் செய்ய வேண்டியதொரு துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டிருப்பது வருந்தத்தக்க விடயம் என்றே கூற வேண்டியுள்ளது. அந்த வகையில், தமிழ் மொழியில் எண்ணியல் அமைப்பில் இன்னமும் திருத்தங்கள் செய்ய வேண்டியுள்ளதை அசட்டை செய்வோமாயின், அது அன்னிய மொழிக்காரரின் நகைப்புக்கு இடமளிப்பதாகவே இருக்கும்.

உதாரணத்துக்கு எண்ணியல் எண்ணியலை உற்று நோக்கும் பொழுதுதான் அதிலுள்ள குறைபாடுகள் புலப்படும். இலக்கண நூல் ஆசிரியர்களின் கண்ணுக்கும் கருத்துக்கும் எட்டாது ஒளிந்திருக்கும் சில தவறுகள், அவற்றால் ஏற்படுகின்ற குழப்பங்கள் களையப்பட வேண்டுமென்பதே இந்தக் கட்டுரையின் நோக்கம்.

இலக்கண நூலாசிரியர்களின் கருத்துப்படி மொழியமைப்பில் இயல்புப் புணர்ச்சி, விகாரம், வழு எனக் குறிப்பிட்டுள்ள போதிலும் இயல்புக்கு மாறாக எண்ணியலில் கையாளப்பட்ட சொற்றொடரில் மயக்கம் தோன்றுவது கவனிக்கப்பட வேண்டிய ஒன்றாகின்றது. தற்காலத்தில் வழக்கிலுள்ள ஒன்பது என்னும் சொல் சங்ககாலத்தில் இருக்கவில்லை என்பது அறியக்கூடியதாக உள்ளது. அவ்வாறாயின், அதற்குப் பதிலாகப் பெருவழக்கில் இருந்த சொல் "தொற்கு" தொண்டு என்ற சொல் வழக்கற்றுப் போனாலும் இன்றும் அதன் தாக்கம் தமிழ் மொழி எண்ணியலில் குழப்பத்தை ஏற்படுத்திக் கொண்டிருக்கிறது. உதாரணத்துக்கு தொண்ணூறு, தொளாயிரம் என்பன சான்றாகின்றன. எட்டு+நூறு எண்ணூறு என்றால, தொண்டு+நூறு தொண்ணூறு தானே?

மேலும் இதை ஆராயுமிடத்து, இலங்கையில் பேசப்படுகின்ற மும்மொழிகளுள் எண்ணியலில் தமிழ் மொழி மாறுபட்ட தன்மையுடையதாயிருப்பது வெளிப்படை. பத்து, இருபது, முப்பது, என்னும் தொடரில், எண்பது எட்டுப் பத்துக்களைக் கொண்டதாயின், ஒன்பது பத்துக்களைக் கொண்ட தொகை தொண்ணூறு ஆனது எப்படி? என்ற கேள்வி சர்வசாதாரணமாகவே எழும். தொல்காப்பியத்தில், "ஒன்பான்" என்ற சொல் பத்தில் ஒன்று குறைவு என்று விளக்கப்பட்டிருக்கிறது. அப்படியாயின், பத்து என்னும் எண்ணில் சம்பந்தப்படுத்தாமல் எட்டுக்குப் பின் வரும் தானத்துக்கு ஒரு தனிச் சொல் அமைக்க முடியாமல் போய்விட்டதா? என்ற கேள்வி எழுகின்றது. ஆக, தொண்ணூறு என்னும் தானம் எண்பதுக்கு அடுத்ததாக வருவது பொருத்தமற்றது. தொண்டு என்ற பதம் எட்டுக்கு அடுத்ததாக வருமாயின், தொண்டு+நூறு 900 எனக் கொள்ள வேண்டும். அப்படிக் கொள்ளும் பட்சத்தில், எண்ணூறை விட தொண்ணூறுதான் கூடிய தொகை எனக் கொள்ளலாம். இதற்குச் சான்றாகக் கீழ்க்காணும் செய்யுள்களைக் காணலாம். பரிபாடலிலுள்ள 75/79 ஆம் வரிகளில்,

"இருநிழல் படாமை மூவேழு உலகமும் ஒருநிழல் ஆகிய ஏமந்தை மாதோ பாழென காலென பாகென ஒன்றென இரண்டென மூன்றென நான்கென ஐந்தென ஆறென ஏழென எட்டென தொண்டென" என்று எண்களை வரிசைப்படுத்தியுள்ளது. தொல்காப்பியத்தில் "தொணருதலையிட்ட பத்துக்குறை? மேலும் மலைபடுகடாம் "தொணருதலை விட்ட பத்துக்குறை" மேலும் மலைபடுகடாம் என்னும் இலக்கண நூலில் தொண்டு பகுதிபலின் முண்டக யாழ்" எனக் குறிப்பிட்டிருப்பதைக் காணலாம். எனவே, தமிழ் மொழியில் எண்ணியலில் உள்ள தவறுகள் கவனிக்கப்பட வேண்டியதோர் கட்டாயம் தமிழ் அறிஞர்களுக்குக் காலத்தின் தேவை எனக் கொள்ள வேண்டியுள்ளது. நன்னூலாரின் கொள்கைப்படி (மலங்க வைத்தல்) குற்றம். காலப்போக்கில் தமிழ் மொழி மரபில் ஏற்படுகின்ற மாற்றங்கள் மொழி மரபில் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய வாய்ப்புகள் அதிகமாகவே காணப்படுகின்ற அபாயநிலை தென்படுகின்றது. இதனைத் தமிழ் அறிஞர்கள் கவனத்தில் கொள்ள வேண்டும் என்பதை மிகத் தாழ்மையோடு தெரிவிப்பதோடு, தவறும் பட்சத்தில் அன்னியர்களால் (வீரமாமுனிவர்) தமிழ் மொழித் திருத்தம் செய்யுமிடத்து தமிழ் அறிஞர்கள் தலைகுனிய வேண்டிய நிலை ஏற்படுவது தவிர்க்க முடியாததாகி விடும். எனவே, தமிழ் அறிஞர்கள் இந்தப் பணியில் கவனம் செலுத்த வேண்டும் என்பதே எனது பணிவான வேண்டுகோள்.




## வரலாற்றில் இன்றைய தினம்

1986-சோவியத் யூனியன் ஷெர்னோபில் அணு சக்தி நிலையத்தில் ஏற்பட்ட விபத்தில் உலகின் மிகப் பெரிய அணுப்பேரிடர் ஏற்பட்டது.

1989 -உலக வரலாற்றில் மிகப் பெரிய சூறாவளி மத்திய பங்களாதேஷில் வீசியது. 1300க்கு மேற்பட்டோர் உயிரிழந்ததுடன் 12ஆயிரம் பேர் காயமடைந்தனர். 80 ஆயிரம் போர் வீடிழந்தனர்.

1993 - லலித் கொலையைப் பயன்படுத்தி இனக் கலவரத்தைத் தூண்ட முயற்சி என அரசு மீது குற்றச்சாட்டு.

1993- வேட்பாளரான நடிகை உட்பட லலித்துக்கு அஞ்சலி செலுத்திய 6 பேர் பயணித்த வாகனம் ஆற்றில் பாய்ந்த விபத்தில் உயிரிழந்தனர்.

1993 -திருமலை நகரப் பகுதியில் சுற்றி வளைப்புத் தேடுதல்.

1994 -சீன விமான சேவை விமானம் 140 ஜப்பான் நகோயா விமான நிலையத்தில் விபத்துக்கு உள்ளாகியதில் அதில் பயணித்த 264 பேர் உயிரிழந்தனர்.

2000 -ஆனையிறவுப் போரின் போது படையினரின் 28 சடலங்களே அடையாளம் காணப்பட்டன.

2000 -ஆனையிறவை இழந்ததற்காக சமாதானப் பேச்சை நிறுத்தக் கூடாதென டிலான் பெரேரா தெரிவிப்பு.

2002 -பிரபாகரனை இந்தியாவிடம் ஒப்படைக்கரணிலைக் கோருவாராம் ஜெயலலிதா.

2005 -பன்னாட்டு அழுத்தத்தைத் தொடர்ந்து லெபனாலிருந்து சிரியா தனது 14000 படைகளை மீளப்பெற்றதையடுத்து அந்த நாட்டின் 29 ஆண்டு கால இராணுவ ஆதிக்கம் முடிவுக்கு வந்தது.

## நாளை

சித்திரை-14
வியாழக்கிழமை -27.04.2017
திதி: பிரதமை பி.ப.04.06
நட்சத்திரம்: பரணி மா.06.25
சுபநேரம்:07.29-08.59 வரை
ராகுகாலம்:01.29-02.59 வரை
கார்த்திகை விரதம், சித்திரைப் பரணி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மு.ஈழத்தமிழ்மணி

# ஈழத் தமிழினத்தின் விடிவுக்காக அர்ப்பணிப்புடன் உழைத்த தந்தை செல்வா

*1947 ஆம் ஆண்டு தனது அரசியல் வாழ்வை ஆரம்பித்த செல்வா 1947, 1956, 1960 மார்ச், 1960 ஜூலை, 1965, 1970 ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற நாடாளு மன்றத் தேர்தல்களில் காங்கேசன் துறைத் தொகுதியில் போட்டியிட்டு வெற்றி பெற்று நாடாளு மன்றம் சென்றிருந்தார்.*

ஒ ஈழத்தமிழர்களின் ஒப்பற்ற தேசியத் தலைவரான தந்தை செல்வாவின் மறைவின் 40ஆவது ஆண்டு நினைவு நாள் தமிழர்களால் இன்று நினைவு கூரப் படுகின்றது. தனது 49ஆவது வயதில், 1947 ஆம் ஆண்டு ஆரம்பித்த அவரது அரசியல் பயணம், முப்பது ஆண்டுகள் வரையில் ஈழத்தமிழினத்துக்குக் காத்திரமான பங்களிப்பை வழங்கியிருந்தது.

தனது அரசியல் வாழ்க்கையில் எந்தவொரு சிங்கள ஆட்சியாளர்களுக்கும் மண்டியிடாத, நெஞ்சுரமிக்க, தீர்க்க தரிசனமுள்ள தலைவராக விளங்கிய அவர், சமஷ்டிமுறை ஆட்சியே தமிழர்களின் பிரச்சினைக்குரிய ஒரே நிரந்தரத் தீர்வாக அமையும்; ஒற்றையாட்சி மூலம் ஈழத் தமிழ் மக்களது பிரச்சினைகளை ஒரு போதுமே தீர்த்து வைக்க முடியாது என்ற நிலைப்பாட்டை வலியுறுத்தியிருந்தார்.

அமரர் ஜீ.ஜீ.பொன்னம்பலம் 1944 ஆம் ஆண்டு அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ்கட்சியை ஆரம்பித்தபோது, தந்தைசெல்வநாயகம் காங்கிரஸ் கட்சியின் உபதலைவராகத் தேர்ந்தெடுக்கபட்டிருந்தார். ஜீ.ஜீ.பொன்னம்பலம், ஐம்பதுக்கு ஐம்பது சமபல பிரதிநிதித்துவத்தை வலியுறுத்தியிருந்தார்.

சோல்பரி ஆணைக்குழு சமபல பிரதிநிதித்துவத் திட்டத்தை நிராகரித்தமையால் சோல்பரி அரசியல் அமைப்பை நிராகரிக்கும் படியான முடிவை அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் கட்சியினர் எடுத்திருந்தனர். 1947ஆம் ஆண்டு நடைபெற்ற முதலாவது பொதுத்தேர்தலில் தமிழ் மக்கள் முன் இந்தக் கொள்கையை முன்வைத்து இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சி போட்டியிட்டது. தமிழ்க் காங்கிரஸ் சார்பில் காங்கேசன்துறைத் தேர்தலில் போட்டியிட்ட எஸ்.ஜே.வி. செல்வநாயகம் வெற்றிபெற்று நாடாளுமன்ற உறுப்பினரானார்.

**சமஷ்டி முறை ஆட்சியை வலியுறுத்திய எஸ்.ஜே.வி**

தந்தை செல்வநாயகத்தின் நாடாளுமன்ற பிரவேசத்துடன் அவரது அரசியல் பணி ஆரம்பமாகியது. தமிழினத்தின் அரசியல் தலைவர்களின் சுயநலப் போக்கால் வெறுப்புற்று, ஐ.தே.கட்சி அரசால் மலையகத் தமிழர்களுக்கு இழைக்கப்பட்ட அநீதியை எதிர்க்கும் விதத்தில் ஈழத்தமிழர்களின் விடிவுக்கான கொள்கையான சமஷ்டியை முன்வைத்து 1949 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 18ஆம் நாள் எஸ்.ஜே.வி அகில இலங்கைத் தமிழரசுக் கட்சியை ஆரம்பித்தார்.

தந்தை செல்வாவின் வழிகாட்டலையும் கொள்கைகளையும் ஈழத்தமிழர்கள் முழுமனதோடு ஏற்றுக் கொண்டு அங்கீகரித்தனர். தமிழரசுக் கட்சியை ஆரம்பித்து அதன் கொள்கையைத் தமிழ் மக்கள் மத்தியில் பரப்புரை செய்ததால் 1950 ஆம் ஆண்டைத் தந்தை செல்வா தமிழரசுக் கட்சியின் வளர்ச்சி ஆண்டு எனப் பிரகடனப்படுத்தினார். 1951ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 13ஆம் திகதி தொடக்கம் 15ஆம் திகதி வரை தமிழரசுக் கட்சியின் முதலாவது மாநாடு, திருகோணமலையில் நடைபெற்றபோது கட்சியின் தலைவராக தந்தை செல்வா தெரிவு செய்யப்பட்டார்.




தந்தை செல்வநாயகம், தமிழரசுக் கட்சியின் உறுதியான கொள்கைப் பிரகடனத்தில் தமிழ்பேசும் மக்கள் ஒரு தேசிய இனம் எனவும், தமிழ்த் தேசிய இனத்துக்குச் சுதந்திரமாக வாழும் உரிமை உண்டு எனவும், தமிழ் பேசும் மக்கள் தமது பாரம்பரிய வரலாற்றுப் பெருமைகளுடன் சுதந்திரமாக வாழ்வதற்குத் தமிழர்கள் வாழும் பிரதேசத்தில் தமிழரசு அமைக்கப்பட வேண்டும் என்றும் வலியுறுத்திக் கூறினார். தந்தை செல்வாவினது உரையின் உறுதி, தமிழர்கள் மத்தியில் நம்பிக்கையை ஊட்டியது. இந்த நாடு ஒரு மொழிக்கோ, ஓர் இனத்துக்கோ சொந்தமில்லை; இந்த மண்ணில் பிறந்த மக்கள் எல்லோரும் இந்த மண்ணின் மைந்தர்கள்தான் என்பதை ஆணித்தரமாக நிரூபிக்க சமஷ்டி அரசுதான், ஒரே வழி எனத் தனது எண்ணக் கிடக்கையை கட்சியின் கொள்கைப் பிரகடனத்தின் வாயிலாக உறுதிபட உரைத்தார் தந்தை செல்வா.

**சாத்வீக வழிப் போராட்டத்துக்கு வழிகாட்டிய தந்தை செல்வா**

1956ஆம் ஆண்டு ஜூலை 7ஆம் திகதியன்று தனிச் சிங்களச் சட்டம் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டதையடுத்து சத்தியாக்கிரகப் போராட்டத்தை நடத்தப் போவதாகத் தமிழரசுக் கட்சியால் அறிவிக்கப்பட்டது. தமிழர் பிரச்சினைக் குத் தீர்வு காண எஸ்.ஜே.வி. ஒரு காலக்கெடுவையும் பண்டாரநாயக்க தலைமையிலான அரசுக்கு விதித்திருந்தார்.

பிரதமரான பண்டாரநாயக்க தந்தை செல்வாவைப் பிரச்சினையைப் பேசித் தீர்ப்போம் எனக் கூறிப் பேச்சுக்கு அழைத்ததையடுத்து, செல்வா தலைமையில் குழு ஒன்று பண்டாரநாயக்காவைச் சந்திக்கச் சென்றது. தந்தை செல்வா பண்டாவைப் பார்த்துக் கவனமாகச் சிந்தனை செய்த பின்னர் தான் உங்களைச் சந்திக்க நான் ஒத்துக் கொண்டேன். இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு நீங்கள் ஒரு வழி செய்தாக வேண்டும். நாங்கள் இந்தப் பிரச்சினையை இப்பொழுது தீர்க்காவிட்டால் நாம் இறந்த பின்பு இந்தப் பிரச்சினை நாட்டுக்குப் பெரும் அழிவை உண்டாக்கும் என்று பிரதமரைப் பார்த்துக் கூறினார். அதன் தொடர்ச்சியாக தந்தை செல்வநாயகம் ஈழத் தமிழினத்துக்கு இழைக்கப்பட்ட அநீதிக்கு நியாயம் பெற 1957 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 26ஆம் திகதி அந்த வேளையில் நாட்டின் தலைமை அமைச்சராகவிருந்த எஸ்.டபிள்யூ.ஆர்.டி.பண்டாரநாயக்காவுடன் ஒப்பந்தம் ஒன்றைச் செய்து கொண்டார். அந்த உடன்படிக்கையானது பண்டா செல்வா ஒப்பந்தம் என அழைக்கப்பட்டது.

தந்தை செல்வா அந்த வேளையில் வெளியிட்ட கருத்து தீர்க்க தரிசனமாயிற்று. தமிழர்கள் சகல உரிமைகளையும் பெற்றுவிடுவார்கள் எனக் கருதிய இனவாதிகளாலும், அரசியல் ஆதாயம் தேட முனைந்தவர்களது அழுத்தம் காரணமாகவும் தலைமை அமைச்சர் பண்டாரநாயக்கா எஸ்.ஜே.வியுடன் செய்து கொண்ட ஒப்பந்தம் பண்டார நாயக்கவினாலேயே கிழித்தெறியப்பட்டது.

தந்தை செல்வா 1965 ஆம் ஆண்டு அப்போதைய பிரதமரான டட்லி சேனநாயக்காவுடன் ஒப்பந்தமொன்றைச் செய்து ஐக்கிய தேசியக் கட்சியை ஆட்சிபீடம் ஏறச் செய்தார். அத்தகைய சிங்கள அரசியற்கட்சிகளும் தலைவர்களும் எமக்குத் தந்தபாடம் அவர்க [illegible] உரிமைகளை வழங்கத் தயாராக இல்லை; அவர்களை நம்பிப் பயனில்லை என்பதேயாகும். தாம் அதிகாரபீடம் ஏறுவதற்கு எம்மை ஏணியாகப் பயன்படுத்திய பின்னர் எம்மை உதைத்துத் தள்ளுபவர்களேயன்றி, தமிழினத்தையும் சிங்கள இனத்தின் நிலைக்கு உயர்த்தவே மாட்டார்கள் என்ற படிப்பினையை ஈழத்தமிழர்கள் சிங்கள அரசுளிடமிருந்து கற்றுக் கொண்டனர்.

செல்வநாயகத்தின் தீர்க்க தரிசனம் தெட்டத் தெளிவாகத் தமிழினத்துக்கு விளங்கியிருந்தது. 1947ஆம் ஆண்டு தனது அரசியல் வாழ்வை ஆரம்பித்த செல்வா 1947, 1956, 1960 மார்ச், 1960 ஜூலை, 1965, 1970 ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தல்களில் காங்கேசன் துறைத் தொகுதியில் போட்டியிட்டு வெற்றிபெற்று நாடாளுமன்றம் சென்றிருந்தார்.

**சிறிமாவோ அரசின் அரசமைப்புச் சட்டத்துக்கு சவால் விடுத்த தந்தை செல்வா**

1972 ஆம் ஆண்டு மேமாதம் சிறிமாவோ அரசால் கொண்டு வரப்பட்ட புதிய அரசமைப்புச் சட்டத்துக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் முகமாகத் தனது நாடாளுமன்ற உறுப்பினர் பதவியைத் துறந்து இடைத்தேர்தலை நடத்துமாறு கோரி சவால் விட்ட தந்தை செல்வா, அகிம்சை வழியில் தொடர் போராட்டங்களை நடத்தினார். இரண்டரை ஆண்டுகள் கழிந்து சிறிமாவோ அரசால் காங்கேசன்துறைத் தொகுதிக்கு இடைத்தேர்தல் நடத்தப்பட்டது.

சிறிமாவோ தலைமையிலான முக்கூட்டு ஐக்கிய முன்னணி அரசு கம்யூனிஸ்கட்சி சார்பாக அளவெட்டியைச் சேர்ந்த வி. பொன்னம்பலத்தை வேட்பாளராக அந்த இடைத் தேர்தலில் களமிறக்கியது. விடுதலையுணர்வு, வீறு கொண்டெழுந்த வேளையில் தந்தை செல்வாவின் அளப்பரிய வெற்றிக்கு சகல தரப்பு தமிழர்களும் பாடுபட்டிருந்தனர். இறுதியில் தந்தை செல்வா 14000 இற்கு மேற்பட்ட வாக்குகளால் அந்த இடைத் தேர்தலில் வெற்றியீட்டினார்.

1977 ஆம் ஆண்டு வரை தமிழினத்துக்காக அர்ப்பணிப்பு உணர்வுடன் 30 ஆண்டுகள்வரை அரசியற் பணி ஆற்றினார் தந்தை செல்வம். 30 ஆண்டுகள் வரை தமிழினத்தின் குரலாகவும், தமிழர்களின் நம்பிக்கை நட்சத்திரமாகவும் திகழ்ந்தார்.

முஸ்லிம் மக்கள் தமது மக்களுக்கு இழைக்கப்பட்ட அநீதியை எதிர்த்துக் குரல் கொடுக்கத் திராணியற்று இருந்தபோது தந்தை செல்வாவே அம் மக்களுக்குச் சிங்கள அரசு இழைக்கும் அநீதியை எதிர்த்துக் குரல் கொடுத்து அனைத்து மக்களின் கண்களையும் திறக்க வைத்தார். இதனைத் தந்தை செல்வநாயகத்தின் நூற்றாண்டு விழாவின்போது மனம் உருகி நினைவு கூர்ந்தார், முஸ்லிம்காங்கிரஸ் கட்சியின் ஆரம்பகாலத் தலைவரும், ஸ்தாபகருமான மறைந்த அஷ்ரப் அவர்கள். இருபதாம் நூற்றாண்டில் ஈடு இணையில்லாத் தமிழ்த் தலைவராக வாழும் காலத்திலேயே போற்றப்பட்ட தந்தை செல்வநாயகம், எவரையும் உதாசீனம் செய்யும், மனம் நோக வைக்கும் பண்புடையவராகச் செயற்பட்டதில்லை என்பதை அவர் காலத்தில் அவருடன் வாழ்ந்த அரசியல் தலைவர்கள் ஆணித்தரமாக எடுத்துக் கூறியுள்ளனர்.

தந்தை செல்வாவைப் போன்று வேறு எந்தவொரு உண்மையும், நேர்மையும், திறமையும் மிக்க தலைவரெவரும் ஈழத் தமிழர் மத்தியில் வரலாற்றில் பிறப்பெடுக்கவுமில்லை; உருவாகவுமில்லை. எத்தனை தலைமுறை கடந்தாலும் தந்தை செல்வாவின் தியாகமும், தன்னலமற்ற உழைப்பும் . அகிம்சை வழியும் ஈழத்தமிழர் மனங்களில் நினைவுகளில் நின்று நிலைக்கும் என்பதில் எந்தவித ஐயமும் கிடையாது. அவரது 80 அடி உயர நினைவுத் தூபி இதற்கு வரலாறாய் நின்று நிலைக்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Yarl Beauty & Language's Skills College

YBLSC



மகளிருக்கான பயிற்சிகள் ஆரம்பமாகின்றன!
அழகுக்கலை
கேக் ஐசிங்
தையல்



சனி, ஞாயிறு பிரிவுகள் 06.05.2017 அன்று 10.00 மணிக்கு
கிழமை நாள் பிரிவுகள் 08.05.2017 அன்று 10.00 மணிக்கு

#சர்வதேச ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட NVQ பாடத்திட்டம்.
# சர்வதேச அங்கிகாரம் பெற்ற சான்றிதழ்கள் வழங்கப்படும்.



தமிழ் விளக்கத்துடன் A1 சான்றிதழுக்கு ஏற்றவாறு ஜேர்மன், சுவிஸ் நாடுகளுக்கான "Deutsch" மொழி வகுப்புகள்.

மேலதிக விபரங்களுக்கும் பதிவுகளுக்கும் அலுவலக நேரத்தில் வருகைதரவும்.

இல.17, 3ம் ஒழுங்கை, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம். (ராசி கலெக்சனுக்கு அருகில் உள்ள ஒழுங்கை)


# நினைவஞ்சலி

## 25 ஆம் ஆண்டு நினைவு | 31 ஆம் நாள் நினைவஞ்சலி

அன்னை மடியில் 1938 . 09 . 25



ஆண்டவன் அடியில் 1992 . 04 . 07

அன்னை மடியில் 1947 . 08 . 18



ஆண்டவன் அடியில் 2017 . 03 . 27

**அமரர் சுப்பிரமணியம் தவசுப்பிரமணியம்**
திதி - பூர்வபக்கபஞ்சமி

**அமரர் சரோஜாதேவி தவசுப்பிரமணியம்**
திதி - அபரபக்கசதுர்த்தசி

பத்துமாதம் சுமந்து எம்மைப் பெற்றீர்கள் பகலிரவாய் விழித்திருந்து பாரினில்
நாம் வாழ பண்பினை ஊட்டி பக்குவமாய் வளர்த்தெடுத்து ஏற்றமுடன்
நாம் வாழ எமக்கு நல்வழி காட்டி நின்றீர்கள்
உங்கள் ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

26.04.2017 புதன்கிழமை வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்களும் வருகை தந்து ஆத்ம சாந்திப்பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம். இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

**கற்குழி வடக்கு, சாவகச்சேரி.** **குடும்பத்தினர்.**

# மரண அறிவித்தல்கள்

## தம்பு தர்மராஜா



கரவெட்டியை பிறப்பிடமாகவும் 5 ஆம் குறுக்குத்தெரு யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட தம்பு தர்மராஜா நேற்று (25.04.2017) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பு மனோரஞ்சிதம் தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான மோசேஸ் சூசானம் தம்பதியினரின் அன்பு மருமகனும் கிளாரம்மாவின் பாசமிகு கணவரும் சுவர்ணா, றொகான் ஆகியோரின் அன்புத் தந்தையும் செந்தூரனின் மாமனாரும் மனோராணி, தயாநிதி, தர்மகீர்த்தி ஆகியோரின் சகோதரனும் செறோன், செறோனி ஆகியோரின் பேரனும் சிங்கராஜா பிறேமாவதி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின்பூதவுடல்நாளை(27.04.2017)வியாழக்கிழமை அவரின் இல்லத்தில் இருந்து பி.ப 3.00 மணியளவில் எடுத்துச் செல்லப்பட்டு புனித அடைக்கல நாயகி ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்ட பின் புனித மரியன்னை பேராலய சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**47, 5 ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்.**
**0776660482**

**தகவல்**
**குடும்பத்தினர்.**

## தம்பிமுத்து தர்மலிங்கம்



கந்தரோடையைப் பிறப்பிடமாகவும், தையிட்டிபுலம், வித்தகபுரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட தம்பிமுத்து தர்மலிங்கம் (24.04.2017) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பிமுத்து - சிவக்கொழுந்து தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - சின்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற காந்திமதி யின் அன்புக்கணவரும் காலஞ்சென்ற மகாலிங்கத்தின் பாசமிகு சகோதரரும் சமிதாவின் மைத்துனரும் சாந்தி, கலாதேவி (கனடா), றோகிணிதேவி, மஞ்சுளாதேவி (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஸ்ரீஸ்கந்த ராஜா, ஸ்ரீரங்கநாதன், நாரயணமூர்த்தி ஆகியோரின் மாமனாரும் லக்சன், தியா, கபிநாத், சாமி, நித்திலா, தர்சிகா, திவானி, மிதிலா ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.04.2017 ) புதன்கிழமை மு.ப. 10 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கொப்பிளாவளை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

**வித்தகபுரம், தெல்லிப்பழை.**

**தகவல்:**
**குடும்பத்தினர்**

# வீட்டுக்கிருத்திய அழைப்பு

தோற்றம் 18 . 04 . 1938



மறைவு 27 . 03 . 2017

கடந்த 27.03.2017 திங்கட்கிழமை அன்று சிவபதமடைந்த
விளாத்தியடி, சுதுமலை தெற்கு, மானிப்பாயைப் பிறப்பிடமாகவும்
இணுவிலை வசிப்பிடமாகவும் கொண்ட

## அமரர் குமாரசாமி இராசரத்தினம்

அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள்
இன்று (26.04.2017) புதன்கிழமை மு.ப 11.00 மணியளவில்
இணுவிலிலுள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெறவுள்ளது.
அத்தருணம் தாங்கள் குடும்பசகிதம் வருகைதந்து
ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும்
மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளும் வண்ணம்
அன்புடன் அழைக்கின்றோம்.

**செட்டி வளவு லேன்,**
**இணுவில் மேற்கு, இணுவில்.**

**குடும்பத்தினர்.**
**ஆ.ஜெயமோகன்ராஜ்**

(AJA/CS/3516)(10)


## CANADA , USA
study & work visa

**Minimum Qualification O/L**

- VISA Consulting and Online from filling.
- குறைந்த செலவில், விரைவில் பயணம்.
- Bank Balance 100%
- குறைந்த தகைமை O/L

Swiss, France
செல்ல வழிகாட்டல்

**Royal Visa Consultants & Education Service**

No.128, Jampettah Street,
Colombo -13
Email: rvces_consultants@yahoo.com

Haarini : 0777 493 436
Sharmi : 0777 525 797
Office : 0113 020 892


# மரண அறிவித்தல்

## திருமதி சந்திரமலர் (சந்திரா) கருணானந்தன்



காங்கேசன்துறையைப் பிறப்பிடமாகவும், கொழும்பையும் கொக்குவிலையும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சந்திரமலர் (சந்திரா) கருணானந்தன் நேற்று (25.04.2017) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை- இராசம்மா தம்பதியரின் மூத்த புதல்வியும், காலஞ்சென்றவர்களான கருணாநிதி - மீனாட்சி அம்மா தம்பதியரின் மூத்த மருமகளும், காலஞ்சென்ற கருணாநிதி கருணானந்தனின் பாசமிகு மனைவியும், கெங்காதரன், திருமதி புஞ்பாஞ்சலி, பஞ்சாட்சரம் (சட்டத்தரணி) ஆகியோரின் சகோதரியும், திரு. மகாநந்தன் (ஓய்வுபெற்ற இந்து அமைச்சு செயலாளர்), பாலசுந்தரம், கருணாவதி (கோண்டாவில்), மங்கயற்கரசி, சிவஞானம் J.P ஆகியோரின் மைத்துனியும், திருவாளர்கள் சுரேஷ் (கனடா), பிரதீஸ் (அபான்ஸ், யாழ்ப்பாணம்), லவன், கல்யாணி, திருக்குமரன் ஆகியோரின் பெரியதாயும், Dr. இந்திரமோகன் (யாழ் போதனா வைத்தியசாலை), அமுதினி (யாழ் மேல் நீதிமன்ற கணக்கு உதவியாளர்), அனுஷா ஆகியோரின் மாமியாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் எஸ். இன்பம் அந்தியகால சேவை, மானிப்பாய் வீதி, கோம்பையன் மணல் மயானம் அருகில் உள்ள மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு 27.04.2017 வியாழக்கிழமை அன்று முற்பகல் 10.00 மணிக்கு இறுதிக்கிரியைகள் நடைபெற்று, கோம்பையன்மணல் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**கொக்குவில் மேற்கு,**
**கொக்குவில்.**

(AJA/CS/3510)(10)

**தகவல்:**
**பெறாமகன் : சி.பிரதீஸ்**
**T.P:0778969787**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பெருகி...

தங்கள் முழு ஒத்துழைப்பை வழங்க வேண்டும் என்றும் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். காணாமற்போனோரின் உறவுகள் நாளை வியாழக்கிழமை தாயகத்தின் அனைத்து மாவட்டங்களிலும் கடையடைப்புப் போராட்டம் நடத்துவதற்கு அழைப்பு விடுத்திருந்தனர். வடக்கு கிழக்கின் 8 மாவட்டங்களிலும் நாளை கடையடைப்பு நடைபெறவுள்ளது.

அரசியல் கட்சிகள், போக்குவரத்துச் சங்கங்கள், சிவில் சமூக அமைப்புக்கள், தொழிற்சங்கங்கள் எனப் பல்வேறு தரப்புக்களும் தங்கள் ஆதரவை வழங்கவுள்ளதாகத் தெரிவித்துள்ளன. இதனால் நாளை வியாழக்கிழமை, தமிழர் தாயகம் முற்றாக முடங்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. (த-5)

## இந்தியாவுடன்...

அமைச்சரவை நேற்று அனுமதி வழங்கியுள்ளது.

அமைச்சரவைக் கூட்டம் அரச தலைவர், தலைமை அமைச்சர் ஆகியோர் தலைமையில் நேற்றுக் காலை நடைபெற்றது.

இதன்போதே 10 காரணிகளை உள்ளடக்கும் வகையில் அமைந்துள்ள மேற்படி புரிந்துணர்வு உடன்படிக்கைக்கு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. பல்வேறு அமைச்சுகளுடன் தொடர்புடைய விடயதானங்கள் இதில் உள்ளடக்கப்பட்டுள்ளன. ஒப்புதல் கிடைக்கப் பெற்றபின்னர்தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க இந்தியாவை நோக்கிப் பயணமானார். (த-5)

## கண்ணீர் அஞ்சலி



யாழ்ப்பாண பிரதேச செயலகத்தில் தொழில்நுட்ப உத்தியோகத்தராகக் கடமையாற்றும் **செல்வி வசந்தி இலட்சுமணன்** அவர்களின் தந்தையார்

**செம்பர் இலட்சுமணன்**


கடந்த 27.03.2017 திங்கட்கிழமை இறைபதம் அடைந்தமையால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

**ஊழியர் நலன் புரிசங்கம்**
**பிரதேச செயலகம்,யாழ்ப்பாணம்.**

## மரண அறிவித்தல்

### நாகமுத்து சோமலிங்கம்



புங்குடுதீவு 3 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், புங்குடுதீவு 11 ஆம் வட்டாரத்தை வசிப்பிடமாகவும், தற்போது கோப்பாய் வடக்கு, மார்க்கம்பரையில் வசித்து வந்தவருமாகிய நாகமுத்து சோமலிங்கம் (25.04.2017) இறைவனடி சேர்ந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகமுத்து - அன்னலட்சுமி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான சோதிராசா - தில்லையம்மா தம்பதியரின் அன்புமருமகனும் சிவஞானேஸ்வரியின் அன்புக்கணவரும் காலஞ்சென்ற சண்முகலிங்கம், ராசலிங்கம் (பிரான்ஸ்), திலகவதி (பிரான்ஸ்), தட்சணாமூர்த்தி (லண்டன்) ஆகியோரின் அன்புச்சகோதரனும் சுபதினி (சுவிஸ்), சுபேந்திரன் (ஸ்ரீமுத்துமாரி ரேடேர்ஸ் பணியாளர்), சுபதர்சினி (யா/வேம்படி மகளிர் உயர்தரபாடசாலை, ஆசிரியர்), சுபாஸ்கரன் ( NSB காவலாளி நெல்லியடி) சுபறாஜினி (கிளி/புனித திரேஸா பெண்கள் பாடசாலை, ஆசிரியர்) ஆகியோரின் அன்புத்தந்தையும் விக்னேஸ்வரன் (சுவிஸ்), சுகந்தி (நுணாவில் ), சோதிரூபன் ( RVG Company- கணக்காளர்), தருசினி, சிறிதரன் ஆகியோரின் மாமனாரும் விசால், வித்தியார்த், விசாலி, பகீர்த்தனன், ஆகாஸ், கிருசாந்தன், திவ்வியன், சாத்விகா, ஆரபி, சாகித்தியா, கஸ்வின் ஆகியோரின் அன்பு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (27.04.2017)வியாழக்கிழமை மு.ப. 10 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோப்பாய் கந்தன்காடு இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**மார்க்கம்பரை,**
**கோப்பாய் வடக்கு, கோப்பாய்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்**
**021 4923 933, 077 3686 752**

## மரண அறிவித்தல்



### முடியப்பு ஜெயதாசன் (யேசு)

சங்குவேலியைப் பிறப்பிடமாகவும், இராமலிங்கம் வீதி, உடுவிலை வசிப்பிடமாகவும் கொண்ட திரு முடியப்பு ஜெயதாசன் (யேசு) நேற்று (25.04.2017) செவ்வாய்க்கிழமை அகால மரணமடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முடியப்பு-திரேசம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சீனிவாசகம்-பாக்கியம் தம்பதியரின் அன்பு மருமகனும், சந்திரகலாவின் அன்புக் கணவரும், மேரி மாக்கிறட், தயாநிதி ஆகியோரின் அன்புச் சகோதரனும், தர்மகுலசிங்கம், தேவச்சந்திரன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இரங்கல் திருப்பலிக்காக இன்று (26.04.2017) புதன்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் உடுவில் புனித செபமாலை மாதா ஆலயத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு, திருப்பலியின் பின்னர் மல்வம் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**இராமலிங்கம் வீதி,**
**உடுவில்.**

**தகவல்: மனைவி**

(CS/3511)(10)

## மரண அறிவித்தல்



### சின்னத்தம்பி கந்தையா

(ஓய்வுபெற்ற புகையிரத பகுதி ஊழியர்)

மறவன்புலவைப் பிறப்பிடமாகவும் தர்மன்கலட்டி, தெல்லிப்பழையை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி கந்தையா (ஓய்வுபெற்ற புகையிரத பகுதி ஊழியர்) நேற்று (25.04.2017) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்தம்பி-தங்கம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற மனோன்மணியின் அன்புக் கணவரும் மணி, கிளி, பட்டு, சுசி, லலி, பெரியராசு, சின்ராசு, மல்லி, வன்னம், குணம், குஞ்சு ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.04.2017) புதன்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக நண்பகல் 12.00 மணியளவில் இந்துப்பிட்டி மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அன்னவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தர்மன்கலட்டி,**
**தெல்லிப்பழை.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**
**077 437 0150**

## மரண அறிவித்தல்

### நாகன் தில்லைநாதன்



சங்கானை, நிற்சாமத்தைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட நாகன் தில்லைநாதன் (ஓய்வுநிலை ஆசிரியர்) நேற்று (25.04.2017) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகன் குழந்தை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சேவியர் -லூர்த்துமேரி தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற சொர்ணரஞ்சிதத்தின் அன்புக் கணவரும், அரவிந்தன், ஜனவிந்தன் ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்றவர்களான கார்த்தியேசு, இலட்சுமி மற்றும், மிதுலராணி ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.04.2017) புதன் கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக விளாவெளி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**நிற்சாமம், சங்கானை.** (CS/3512)(10)

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்

### திருமதி
### சரஸ்வதி சிவராசா



மீசாலை கிழக்கு, மீசாலையைப் பிறப்பிடமாவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சரஸ்வதி சிவராசா 23.04.2017 ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இரத்தினம்-தங்கம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி-சிவக்கொழுந்து தம்பதியரின் அன்பு மருமகளும் சிவராசாவின் அன்பு மனைவியும் சயந்தினி (லண்டன்), பகீரதன், பிருந்துஷா, தர்சனா, பிரியந்தி (மாணவி, சாவகச்சேரி இந்துக் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தாயாரும் காண்டீபனின் (லண்டன்) அன்பு மாமியும் இராசலட்சுமி, இராஜேஸ்வரி, பரமேஸ்வரி, விமலாதேவி, காலஞ்சென்ற செல்வராசா ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (27.04.2017) வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**மீசாலை கிழக்கு,**
**மீசாலை.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

## காணி விற்பனைக்கு உண்டு

மலர்மகள் வீதி, அரியாலையில் A9 வீதி, மாம்பழச்சந்தியிலிருந்து 200m தூரத்தில் ஒன்றமுக்கால் (1 3/4) பரப்புக்காணி விற்பனைக்கு உண்டு. ACH CS 00117

**077 921 6359, 076 779 8930**

## வேலையாள்கள் தேவை

சாவகச்சேரியில் அமைந்துள்ள உணவகம் ஒன்றுக்கு கொத்துறொட்டி மற்றும் றைஸ் தயாரிப்பாளர் தேவை.
(சம்பளம் பேசித்தீர்மானிக்கப்படும்.)
(AJA CS 00116) (14)

**077 224 7539**

## வேலையாள்கள் தேவை

- சமையல் உதவியாளர்
- உணவு பரிமாறுபவர்
- றொட்டி (றைஸ்) போட தெரிந்தவர்கள்.
- கணக்கெழுத தெரிந்தவர்கள்.

(நிர்வாகம் செய்யக்கூடியவர்கள்)

**Rolex Hotel**
340, Hospital Road, Jaffna.
**077 907 9888** (AJA CS 3514) (14)

## வேலையாள்கள் தேவை

பிரபல உல்லாச விடுதி ஒன்றிற்கு தங்கி நின்று வேலை செய்யக்கூடிய தோட்ட வேலையாள்கள், றூம்போய் தேவை.
சம்பளம் பேசித்தீர்மானிக்கப்படும்.
தொடர்பு - 077 9924 599, 077 253 7125
treatooo Beach Resort,
Beach road, Allaipiddy Jaffna.

## உப ஒப்பந்தகாரர் தேவை

பாடசாலை கட்டடம் ஒன்றிற்கு பின்வரும் வேலைகள் செய்வதற்கு உப ஒப்பந்தகாரர் தேவை.

1. பலகை அடித்தல்
2. கம்பி அடித்தல்
3. கொங்கிறீட் இடுதல்

(சி.வ. 3513)

**தொடர்பு: 077 712 0945**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புலம்பெயர்...

கருணாநாயக்க ஈடுபடுகின்றார். மத்திய வங்கியின் அதிகாரத்தை அவர் கையிலெடுப்பது என்பது, நாடாளுமன்றத்தின் அதிகாரத்தைக் கையில் எடுப்பதற்குச் சமனாகும்.

இவ்வாறு மகிந்த அணி நாடாளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்த்தன குற்றம் சுமத்தியுள்ளார்.

பொரளை வஜிரசர்மா பௌத்த மைய நிலையத்தில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

அரச நிதி தொடர்பான அதிகாரங்கள் நாடாளுமன்றத்துக்கு வழங்கப்பட்டுள்ளன. அந்த அதிகாரம் சட்டரீதியாக இலங்கை மத்திய வங்கிக்கு வழங்கப்பட்டுள்ளது. நாட்டின் பொருளாதார ஸ்திரத்தன்மையைப் பேணவேண்டிய பொறுப்பு மத்திய வங்கியிடம் வழங்கப்பட்டுள்ளது. நாணயத்தின் பெறுமதியை உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் பேணுவதன் ஊடாகப் பொருளாதார ஸ்திரத் தன்மையை மேற்கொள்ள முடியும். அதனால்தான் நாட்டின் பணத்தை அச்சடிக்கும் பொறுப்பு மத்திய வங்கிக்கு வழங்கப்பட்டுள்ளது.

அரசமைப்பின் ஊடாக மத்திய வங்கிக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தைத் தற்போது நிதியமைச்சர் எடுத்துக் கொள்வதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளார். நாடாளுமன்றத்தால் மத்திய வங்கிக்கு வழங்கப்பட்ட அதிகாரத்தை நிதியமைச்சர் பறிக்க முற்படுவது, நாடாளுமன்றத்தின் அதிகாரங்களைப் பறிப்பதற்குச் சமனாகும். இந்த அதிகாரங்களைப் பெற்றுக்கொண்டு நாட்டுக்கு வரும் அந்நியச் செலவாணிகளுக்கு வழிசமைப்பதே நிதியமைச்சரின் நோக்கமாகும்.

வெளிநாடுகளுக்கு மேற்கொள்ளப்படும் ஏற்றுமதிகளான தேயிலை, தேங்காய் போன்றவற்றுக்கான கொடுக்கல் வாங்கல் நடைமுறைக் கணக்கின் ஊடாக எளிதாக இடம்பெறுகிறது. மூலதன வியாபாரங்களில் முன்னெடுக்கப்படும் கொடுக்கல் வாங்கல்களின்போது மத்திய வங்கி கட்டுப்பாட்டுடன் முன்னெடுக்கிறது. இந்தக் கட்டுப்பாட்டு அதிகாரத்தைத் தனக்கு கீழ் கொண்டு வருவதற்கு முயற்சிக் கும் நிதியமைச்சர் தனக்கு ஏற்றாற்போல கொடுக்கல் வாங்கல்களுக்கு அனுமதியளிக்கும் நிலை ஏற்படும்.

மத்திய வங்கியின் அதிகாரங்களை நாணயக் கட்டுப்பாட்டுச் சட்ட வரைவின் ஊடாக நிதியமைச்சர் புலம்பெயர்ந்துள்ள விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்களின் முதலீட்டை நாட்டுக்குள் கொண்டு வருவதற்கு முயற்சி செய்கின்றார்.

விடுதலைப்புலிகள் சட்டவிரோதமாக ஈட்டிய இந்தப் பெருந்தொகையான நிதி மத்திய வங்கியின் கட்டுப்பாட்டின்றி நாட்டுக்குள் வருவதால் நாட்டின் பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்த பங்குகளைத் தன்னகப்படுத்தி, நாட்டின் பொருளாதாரத்தை புலம்பெயர்ந்துள்ள விடுதலைப்புலிகளின் ஆதரவாளர்கள் தங்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவார்கள் என்றார். (த-5)

## குற்றப்...

ணைகளை குற்றத் தடுப்புப் பொலிஸார் ஆரம்பித்துள்ளனர்.

மாணவிகள் இருவரை சந்தேகநபர் பாலியல் துர்நடத்தைக்கு உட்படுத்த முயன்றார் என்ற சந்தேகத்தில் கடந்த 8ஆம் திகதி அவர் கைது செய்யப்பட்டார். அவரைக் கடந்த 17ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கிளிநொச்சி நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது. மீண்டும் அவரது விளக்கமறியல் இன்று புதன்கிழமை வரை நீடிக்கப்பட்டிருந்தது.

இதற்கிடையில் வெளிநாட்டுக் குடியுரிமையை வைத்துள்ள சந்தேகநபர் இங்கு பாலியல் முறைகேடுகளில் திட்டமிட்ட ரீதியில் ஈடுபட்டாரா என்பது தொடர்பான விசாரணைக்காகக் குற்றத் தடுப்புப் பொலிஸார் இந்த வழக்கைப் பொறுப்பேற்றுள்ளனர்.

சந்தேகநபர் இத்தாலிக் குடியுரிமையைக் கொண்டவர். நீண்ட காலமாகக் குடும்பத்துடன் அங்கு வசித்து வந்தவர். எனினும் கடந்த சில வருடங்களுக்கு முன்னர் அங்கிருந்து வெளியேறி லண்டனில் குடியேறினார். அவரது குடும்பத்தினர் இப்போதும் லண்டனிலேயே வசித்து வருகின்றனர். எனினும் சந்தேகநபர் தனது சொந்த இடமான பளைக்குத் திரும்பி அங்கு நவீன வசதிகளைக் கொண்ட சொகுசு மாளிகையை அமைத்துத் தங்கியிருந்தார்.

அவரது இல்லம் அமைந்துள்ள காணியில் இயற்கை முறையிலான விவசாயம் மேற்கொள்ளப்படுகிறது. குளிரூட்டப்பட்ட வசதியுடன் கூடிய சொகுசு வீடும் அமைக்கப்பட்டுள்ளது. சுற்றிவர உயரமான மதில் எழுப்பப்பட்டுள்ளதுடன் தானியங்கிக் கதவுகள் பொருத்தப்பட்டுள்ளன. காணி மற்றும் வீட்டைச் சுற்றி கண்காணிப்புக் கமராக்கள் பொருத்தப்பட்டுள்ளன. நீல நிற டபிள் கப் வாகனம் ஒன்றும் வைத்திருக்கிறார்.

சந்தேகநபர் அவரது சொகுசு இல்லத்தைக் திட்டமிட்ட வகையில் குற்றச் செயல்களுக்குப் பயன்படுத்தினாரா என்பது தொடர்பில் பொலிஸார் தீவிர விசாரணைகளை நடத்தி வருகின்றனர். அதற்காக வீட்டிலுள்ள கண்காணிப்புக் கமரா பதிவுகளும் சோதனையிடப்படுவதாக அவர்கள் தெரிவித்தனர். அவரது வீட்டுக்குப் பொலிஸ் பாதுகாப்புப் போடப்பட்டுள்ளது. (உ-6)

## முதலில்...

தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

தற்போதைய அரசு எதிர்கொள்ளும் முதலாவது தேர்தலாகப் பொது வாக்கெடுப்பு இருக்கும். புதிய அரசமைப்பு அமைப்பது தொடர்பில் பொது வாக்கெடுப்பு நடத்தப்படும்.

புதிய அரசமைப்புக் குறித்த யோசனை நாடாளுமன்றில் நிறைவேற்றப்பட்ட பின்னர், பொதுவாக்கெடுப்பு நடத்தப்பட உள்ளது. பொது வாக்கெடுப்பு நடத்தப்பட்ட பின்னர் உள்ளூராட்சி மன்றத் தேர்தல் மற்றும் மாகாணசபைத் தேர்தல் நடைபெறும்.

அனைத்து உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களையும், அனைத்து மாகாணசபைத் தேர்தல்களையும் ஒரே தினத்தில் நடத்துவது குறித்து கவனம் செலுத்தப்பட்டு வருகின்றது என்றார்.

புதிய அரசமைப்பு உருவாக்கத்தில், பொது வாக்கெடுப்புக்குச் செல்லாத விடயங்களை மாற்றுவதற்கு மாத்திரமே சிறிலங்கா சுதந்திரக் கட்சி இணங்கும் என்று அந்தக் கட்சி தொடர்ச்சியாகத் தெரிவித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (த-5)

## கடையடைப்புக்கு...

மற்றும் மட்டக்களப்பு மாவட்ட காணாமல் ஆக்கப்பட்டவர்களது உறவினர்களின் சங்கத்தின் தலைவி அ.அமலநாயகி, திருகோணமலை மாவட்டக் காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளைத் தேடியறியும் சங்கத்தின் தலைவி நா. ஆசா ஆகியோர் இது தொடர்பில் அறிக்கை வெளியிட்டுள்ளனர்.

அம்பாறை மாவட்ட சங்கத் தலைவி த.செல்வராணி தெரிவித்ததாவது:

வடக்கு மாகாணத்திலே தங்களது உறவுகளை இழந்தவர்கள் உறவுகளை ஒப்படைக்குமாறு கோரி அமைதியான போராட்டங்களை நடத்தி வருகின்றார்கள். அதேபோன்று நாங்களும் அம்பாறை மாவட்டத்திலே முன்பு பல போராட்டங்களை நடத்தியிருந்தோம். எதற்கும் இந்த அரசு பதிலளிக்கவில்லை. மனமுடைந்த நிலையில் வாழ்ந்து வருகிறோம். எமது உறவுகள் வடமாகாணத்தில் தொடர்ந்து போராட்டங்களை நடத்தி வருகின்றார்கள்.

அதனொரு கட்டமாக நாளை முன்னெடுக்கப்பட்டுள்ள கடையடைப்புப் போராட்டத்துக்கு எமது அம்பாறை மாவட்டக் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களின் சங்கம் முழுமையான ஆதரவை வழங்கும் என்றார்.

மட்டக்களப்பு மாவட்ட சங்கத் தலைவி அ. அமலநாயகி தெரிவித்ததாவது, வடக்கு, கிழக்கு மாகாணங்களிலுள்ள அனைத்து தமிழ்பேசும் மக்களும் ஒத்துழைப்பு, ஆதரவை வழங்கவேண்டும்.

பல வருடங்களாக நாம் போராட்டங்களை நடத்தியும், பல முறைப்பாடுகளைத் தெரிவித்தும், பல காரியாலயங்களில் ஏறி இறங்கியும், காணாமற்போன எமது உறவுகள் தொடர்பாக இதுவரை எதுவித பதிலும் இல்லாத நிலையில் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம்.

கடந்த அரசு எமக்கு எதுவித தீர்வும் பெற்றுத் தராத நிலையில் தற்போதைய கூட்டு அரசாவது எமது உறவுகளைத் தேடிக் கண்டுபிடித்துத் தரும் என்று நம்பினோம். இதுவரை எதுவித பதில்களும் அற்ற நிலையில் எமது பிள்ளைகளுடன் அப்பா எப்போது வீடு வந்து சேருவார் என்ற ஏக்கத்துடன் வாழ்வைக் கொண்டு நடத்திக் கொண்டிருக்கின்றோம்.

இலங்கை அரசினதும், பன்னாட்டுச் சமூகத்தினதும் கவனத்தை மீண்டும் ஒருமுறை திரும்பிப் பார்க்க வைக்கும் முகமாக நாளை வியாழக்கிழமை வடக்கு மக்கள் ஏற்பாடு செய்திருக்கின்ற கடையடைப்புப் போராட்டத்துக்கு மட்டக்களப்புப் மாவட்ட மக்களும் ஒத்துழைப்பை வழங்கி அன்றைய தினம் வர்த்தக நிலையங்களை மூடி, தனியார், பொது அமைப்புக்கள் என்று அனைவரும் தங்களது பூரண ஒத்துழைப்பை வழங்கி எமது காணாமலாக்கப்பட்ட உறவுகளை மீட்கும் போராட்டத்துக்கு ஆதரவு வழங்குமாறு அழைப்பு விடுக்கின்றோம் - என்றார்.

திருகோணமலை காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளைத் தேடியறியும் சங்கத்தின் தலைவி நா. ஆசா தெரிவிக்கையில்,

வடக்கு, கிழக்கு தமிழர் தாயகத்தில் கடத்தப்பட்டுக் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களாகிய நாங்கள் தொடர்ச்சியாக போராட்டங்களை நடத்தி வருகின்றோம்.

எனினும், எமது உறவுகளின் போராட்டத்திற்கு தீர்வு எதுவும் கிட்டியதாகத் தெரியவில்லை. இந்தநிலையில் நாளை நடைபெறவுள்ள கடையடைப்புப் போராட்டத்துக்கு திருகோணமலை மாவட்டத்திலுள்ள வர்த்தக நிலையங்கள் மற்றும் ஏனைய அமைப்புகள் முழுமையான ஆதரவை வழங்கி அரசுக்கு அழுத்தத்தைக் கொடுக்கவேண்டும் என்றார். (ய-5)

## மக்கள்...

வித்தார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள பத்திரிகைச் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

இராணுவத்தை எதிர்த்துப் போராடிய இளையோர், குடும்பத் தலைவர்கள் ஆயிரக்கணக்கில் இராணுவத்திடம் சரணடைந்தார்கள். இராணுவம் சரணடையுமாறு பகிரங்கமாக அறிவித்தது. போர்க் காலத்தில் அவ்வாறான போராளிகளும் பொதுமக்களும் கூட இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டுள்ளனர். இராணுவத்தினர் கைதுசெய்த மற்றும் அவர்களிடம் சரணடைந்தவர்களுக்கு என்ன நடந்தது என்பது இதுவரை தெரியாமலேயே உள்ளது.

அவர்கள் இன்னும் இரகசிய இராணுவ முகாம்களில் வைக்கப்பட்டுள்ளார்கள் என்று காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் நம்புகிறார்கள். தாய்மார் தெருவோரங்களில் சுட்டெரிக்கும் வெயிலில் இரண்டு மாதங்களுக்கு மேலாக அறவழிப் போராட்டங்களில் ஈடுபட்டு வருகிறார்கள்.

களத்தில் தங்கள் நிலத்தில் போராடி வரும் தாய்மார்களுக்கும் அவர்களின் கண்ணீருக்கும் அரசுகள் தக்க பொறுப்பைக் கூறாதிருப்பது மிகக் கொடுமையாகும். கண்டிக்கப்படவேண்டும். ஐ.நா. மனித உரிமைகள் சபை இலங்கை அரசுக்குக் காத்திரமான அழுத்தங்களைப் பிரயோகிக்கவேண்டும். பொறுப்புக் கூறும் கடப்பாட்டை நிலைநாட்ட அரசை நிர்ப்பந்திக்கவேண்டும்.

இராணுவ ஆக்கிரமிப்பிலுள்ள மக்களின் நிலங்களை விடுவிப்போம் என்று அரச தலைவரும், அரசும் வாக்குறுதி வழங்கியும் முழுமையாக ஆக்கிரமிக்கப்பட்ட நிலங்கள் விடுவிக்கப்படவில்லை. அந்த நிலங்களையும் விடுவிக்கவேண்டுமென மக்களும் நிலச் சொந்தக்காரர்களும் போராடி வருகின்றனர்.

போராடுகின்ற மக்கள் நாளை வியாழக்கிழமை பொது வேலை நிறுத்தத்துக்கு அழைப்பு விடுத்துள்ளார்கள். இந்தப் போராட்டங்களை நாம் ஆதரிக்கக் கடமைப்பட்டுள்ளோம். அதன் பின்னும் அரசு தீர்வை வழங்காதுவிட்டால் அரசியல் மற்றும் சமூக நிறுவனங்களும் ஒன்று கூடி ஜனநாயக அறவழிப் போராட்டங்களுக்கு அழைப்பு விடுக்க வேண்டி வருமென அரசுக்கும் அறிவிக்கின்றோம் என்றுள்ளது. (த-5)

## முல்லைத்தீவில்...

கப்பட்டவர்களின் உறவுகள், அன்றைய தினம் முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்தின் முன்னால் காலை 10 மணிக்கு மிகப் பெரிய கவனவீர்ப்புப் போராட்டத்தையும் நடத்தத் தீர்மானித்து ள் ளனர். முல்லைத்தீவு மாவட்ட காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள், நாடாளுமன்றஉறுப் பினர் திருமதி சாந்தி சிறிஸ்கந்தராசா, வடக்கு மாகாண சபை உறுப்பினர்களான து.ரவிகரன், ஆ.புவனேஸ்வரன் ஆகியோருக்கு இடையில் நேற்றுக் கலந்துரையாடல் நடைபெற்றது. கலந்துரையாடலின் முடிவில், காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களால் விடுக்கப்பட்ட வேண்டுகோள் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

தற்போதைய சூழ்நிலையில் காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பிலும், நிலவிடுவிப்புத் தொடர்பிலும் போராட்டங்கள் நடைபெற்று வருகின்றன. எமது மாவட்டத்திலும், மாவட்டச் செயலகத்தின் முன்பாக காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் மற்றும் நில விடுவிப்புத் தொடர்பில் கேப்பாபிலவு இராணுவ முகாம் முன்பாகவும் தொடர் போராட்டமாக நடைபெறுகின்றது.

நாளை வியாழக் கிழமை பூரண கடையடைப்பையும், ஆர்ப்பாட்டத்தையும் அயல் மாவட்டங்கள் செய்யவுள்ளதாக அறிவித்திருக்கும் நேரத்தில், நாமும் எமது மாவட்டச் செயலகம் முன்பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டு, போராட்டத்தில் ஈடுபடுபவர்களுக்கு ஆதரவு தெரிவிப்பது எமது கடமையாகும். இது விடயத்தில் பூரண ஒத்துழைப்பு வழங்குமாறு கேட்டுக் கொள்கின்றோம் என்றுள்ளது.

இதேவேளை, முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்துக்கு முன்பாகக் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் முன்னெடுத்துவரும் அமைதிவழிப் போராட்டம் 49ஆவது நாளாகவும் நேற்று நடந்தது. அத்துடன் கேப்பாபிலவு மக்களின் போராட்டமும் 56ஆவது நாளாகத் தொடர்கிறது. (த-5)

## தனியார்...

கும் முகமாக, நாளை வியாழக்கிழமை தனியார் பேருந்துச் சேவைகள் இடம்பெறாது என்று, வடக்கு மாகாண தனியார் பேருந்து உரிமையாளர்களின் சங்கம் தெரிவித்துள்ளது.

வடக்கு கிழக்கில் நாளை வியாழக்கிழமை கடையடைப்புக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. இதற்குப் பல்வேறு தரப்புக்களும் ஆதரவு வழங்கியுள்ளனர். இந்த நிலையில் வடக்கு மாகாண தனியார் பேருந்து உரிமையாளர் சங்கம் தாமும் ஆதரவு வழங்குவதாகத் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் அதன் தலைவர் சிவபரன் தெரிவித்ததாவது:

காணாமற் போனோரின் உறவினர்களின் போராட்டத்துக்கு நாம் ஆதரவு வழங்குகின்றோம். அவர்கள் வடக்கு-கிழக்கு முழுவதிலும் கடையடைப்புக்கு கோரிக்கை விடுத்துள்ளனர். இதற்கு ஆதரவு வழங்கும் வகையில் நாளை வியாழக் கிழமை வடக்கு மாகாணத்தில் தனியார் பேருந்துச் சேவை நடைபெறாது என்றார். (த-5)

## நாடாளுமன்...

தில் நிறைவேற்று அதிகார முறைமையின் கீழ் நிதி முகாமைத்துவம் செய்யப்பட்டமையாலே, நாடு பாரதூரமான கடன் சுமைக்குத் தள்ளப்பட்டுள்ளது. இவ்வாறு கொழும்பு அரசின் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

ஆசிய பசுபிக் பிராந்தியத்தின் இளைஞர் நாடாளுமன்ற உறுப்பினர்களின் மாநாடு கொழும்பில் நேற்று ஆரம்பமானது. இந்த நிகழ்வில் தலைமை விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

எமது நாட்டில் பெரிய மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன. நாடாளுமன்றமும் மறுசீரமைக்கப்பட்டு வருகிறது. புதிய அரசமைப்பின் ஊடாக நாடாளுமன்றத்தை முற்றாக மறுசீரமைப்புச் செய்வது எம்முடைய நோக்கமாகும்.

அரசமைப்பு மற்றும் நாடாளுமன்ற ஆட்சிப் பொறிமுறையில் இடம்பெறவேண்டிய மாற்றங்களின் பிரதிபலனை எதிர்காலத்தில் எம்மால் பெற்றுக்கொள்ள முடியும். முன்னாள் ஆட்சியில் நாடாளுமன்றத்தின் அதிகாரங்கள் நிறைவேற்று முறைமையின் கீழ் பயன்படுத்தப்பட்டமையால் அதிகார துஷ்பிரயோகங்கள் இந்த நாட்டில் இடம்பெற்றன.

அரசுடன் இணங்கிச் செயற்படாத நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு எதிரான நடவடிக்கைகள் கட்டவிழ்த்து விடப்பட்டிருந்தன. அரசுக்குச் சார்பாக நாடாளுமன்றில் பின்வரிசையில் இருந்த நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு உள்ள அதிகாரத்தை விடவும் எதிர்க் கட்சிக்கு அதிகாரம் குறைவாகவே காணப்பட்டது. ஒரு ஜனநாயக நாடாளுமன்றில் எதிர்க் கட்சியை விடவும் பின்வரிசை உறுப்பினர்களுக்கு நிறைவேற்று முறைமையால் அதிகாரம் கிடைத்திருந்தது.

பொது மக்களின் நிதி முகாமைத்துவம் தொடர்பில் செயற்பாடு இருக்கவில்லை. நாடாளுமன்றத்துக்குக் கிடைத்த மக்களின் அதிகாரம் முறையாகப் பயன்படுத்தப்படாமையால் நிதி முகாமைத்துவமொன்று இருந்திருக்கவில்லை. இதன் காரணமாகவே நாட்டின் கடன் சுமை பாரதூரமானதாக மாறியுள்ளது. நாடாளுமன்ற ஆட்சியை நடைமுறைப்படுத்தும் வகையில் புதிய அரசமைப்பில் மறுசீரமைப்புகள் இடம்பெறும் என்றார். (த-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?



**மேடம்:** குடும்பத்தில் பணத்தேவை அதிகரிக்கும். தகுதிக்கு மீறி, எவருக்கும் வாக்குறுதி கொடுக்க வேண்டாம். தொழில், வியாபாரத்தில் நிலுவைப் பணியை நிறைவேற்றுவது நல்லது.



**இடபம்:** நீண்டநாள் எதிர்பார்ப்பு நிறைவேறும். நண்பர்களின் அன்பும் ஆதரவும் கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் வருமானம் அதிகரிக்கும். பெண்கள், உறவினர் மத்தியில் செல்வாக்குடன் திகழ்வர்.



**மிதுனம்:** கௌரவத்துக்காகப் பணம் செலவழிக்க நேரிடும். தொழில், எதிர்பார்த்த ஆதாயம் கிடைக்கும். பணியாளர்கள், நிர்வாகத்தின் ஆதரவுடன் சலுகை கிடைக்கப் பெறுவர்.



**கடகம்:** மனதில் அமைதி நிலைத்திருக்கும். தொழில், வியாபாரத்தில் அபரிமிதமான வளர்ச்சி உண்டாகும். சேமிக்கும் விதத்தில் ஆதாயம் கிடைக்கும். குடும்பத்தில், சுபநிகழ்ச்சி நடத்தத் திட்டமிடுவீர்கள்.



**சிங்கம்:** தன்னம்பிக்கையுடன் பணியில் ஈடுபடுவீர்கள். தொழில், வியாபார வளர்ச்சியால் ஆதாயம் அதிகரிக்கும். புத்திரர் விரும்பிய பொருளை வாங்கித் தருவீர்கள். பெண்களால், குடும்பத்தில் ஒற்றுமை உண்டாகும்.





**கன்னி:** நல்லவர்களின் ஆலோசனை கிடைக்கப் பெறுவீர்கள். தொழில், வியாபாரத்தில் அளவான மூலதனம் போதும். லாபம் சீராக இருக்கும். பணியாளர்களுக்கு, விரும்பிய பணிமாற்றம் கிடைக்கும்.



**துலாம்:** நண்பரின் பேச்சால், சங்கடத்துக்கு ஆளாகலாம். தொழில், வியாபாரத்தில் லாபம் சுமாராக இருக்கும். பணியாளர்கள், பணிச் சுமையைத் திறம்படச் சமாளிப்பர். பெண்கள், குடும்பவளர்ச்சிக்குப்பாடுபடுவர்.



**விருச்சிகம்:** எதிர்கால வளர்ச்சி குறித்துத் திட்டமிடுவீர்கள். தொழில், வியாபாரவளர்ச்சியால் வருமானம் உயரும். பணியாளர்கள், பணியிடத்தில் செல்வாக்குடன் திகழ்வர். பெண்களின் தேவை நிறைவேறும்.



**தனுசு:** பேச்சில் இனிமை நிறைந்திருக்கும். தொல்லை கொடுத்தவர் இடம் மாறுவர். தொழி லில், உற்பத்தி விற்பனை அதிகரிக்கும். சேமிக்கும் விதத்தில் வருமானம் வரும். அரசு வகையில், உதவி கிடைக்கும்.



**மகரம்:** முக்கிய பணி நிறைவேறுவதற்குத் தாமதமாகலாம். தொழில், வியாபாரத்தில் லாபம் சுமாராக இருக்கும். பெண்கள், கணவரின் அன்பைப்பெற்றுமகிழ்வர். பணியாளர்கள்பணிவிடயமாகவெளியூர்செல்வர்.



**கும்பம்:** மனதில் நேர்மை எண்ணம் அதிகரிக்கும். தொழில், வியாபாரத்தில் போட்டி அதிகரிக்கும். லாபம் சுமாராக இருக்கும். பணியாளர்களுக்கு, சக ஊழியர்களின் ஒத்துழைப்புக் கிடைக்கும்.



**மீனம்:** குடும்பப் பிரச்சினைகளுக்குச் சுமுகத் தீர்வு கிடைக்கும். தொழில், வியாபார வளர்ச்சியால் வருமானம் அதிகரிக்கும். பணியாளர்கள், நிர்வாகத்தினரின் நன் மதிப்பைப் பெறுவர்.

## சுடோக்கு
### எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | 2 | | 4 |
| 9 | 3 | | | | | | 5 | |
| | | | 3 | 7 | | 1 | | |
| 4 | | 1 | | | | 3 | | |
| | | | 5 | 1 | 6 | | | |
| | | 2 | | | | 9 | | 6 |
| | | 7 | | 6 | 8 | | | |
| | 5 | | | | | | 8 | 3 |
| 8 | | 9 | | | | | | |

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 6 | 1 | 4 | 5 | 7 | 8 | 2 | 9 | 3 |
| 5 | 2 | 9 | 4 | 3 | 6 | 7 | 1 | 8 |
| 7 | 3 | 8 | 9 | 1 | 2 | 6 | 4 | 5 |
| 1 | 4 | 6 | 3 | 2 | 5 | 9 | 8 | 7 |
| 2 | 9 | 5 | 8 | 6 | 7 | 1 | 3 | 4 |
| 3 | 8 | 7 | 1 | 9 | 4 | 5 | 6 | 2 |
| 4 | 6 | 3 | 7 | 5 | 1 | 8 | 2 | 9 |
| 9 | 5 | 1 | 2 | 8 | 3 | 4 | 7 | 6 |
| 8 | 7 | 2 | 6 | 4 | 9 | 3 | 5 | 1 |

சுடோக்கு

ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல் தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண் களை ஒழுங்கு படுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படு கையில் உள் பெட்டி களுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப் பட்டிருக்கும். தர்க்க ரீதியில் ஏனைய வற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். [illegible] பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவ[illegible]ான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமா[illegible]ரவலாக்கியது. 2005இல் இது உலக அ[illegible]ல் பிரபல்யமானது.

*(முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்)*

### நாளைய...

வடக்கு மாகாண அழகக சங்கங்களின் சம்மேளனம்
வடக்கு முஸ்லிம் சிவில் சமூகம்
தமிழ் மக்கள் பேரவை
இலங்கை ஆசிரியர் சங்கம்
இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம்
வவுனியா நகர சிறு வியாபாரிகள் சங்கம்
கிளிநொச்சி வர்த்தக சமூகம்
வவுனியா மாவட்ட உள்ளூர் விளைபொருள் விற்ப னையாளர் சங்கம்
ஒட்டுசுட்டான் வர்த்தக சங்கம்
புதுக்குடியிருப்பு வர்த்தக சங்கம்
அம்பாறை முஸ்லிம்கள் நலன் பேணும் அமைப்பு
அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பு
அகில இலங்கை பொது ஊழியர் சங்கம்
யாழ்ப்பாண மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையம்
வவுனியா மாவட்ட சமூக விழிப்புணர்வு மக்கள் அமைப்பு
வவுனியா வர்த்தகர் சங்கம்
இ.போ.ச வவுனியாசாலை தொழிற் சங்கம்
அனைத்து மதப் பேரவை
கிளிநொச்சி மாவட்ட அனைத்துப் பல்கலைக் கழக மாணவர் ஒன்றியம்
வீணாகான குருமார் பீடம்
வவுனியா மாவட்ட பிரஜைகள் குழு
கிளிநொச்சி மாவட்ட பிரஜைகள் குழு
முல்லைத்தீவு மாவட்ட காணாமல் ஆக் கப்பட்டோரின் உறவினர்களின் சங்கம்
திருகோணமலை மாவட்ட காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர் களின் சங்கம்
மட்டக்களப்பு மாவட்ட காணாமல் ஆக் கப்பட்டோரின் உறவினர்களின் சங்கம்
அம்பாறை மாவட்ட காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களின் சங்கம்
இளைஞர் திறன் விருத்தி அமையம்
கிளிநொச்சி மாவட்ட அந்தணர் ஒன்றியம்
கரைச்சி கிராம.கிராமமாதர் அபிவிருத்தி சமாசம்
கிளிநொச்சி இரணைமடு கமக்கார அமைப்பு
வடமராட்சி கிறிஸ்தவ ஒன்றியம்
தருமபுரம் மனிதம் சர்வமத அமையம்
பச்சிலைப்பள்ளி மாதர் கிராம அபிவிருத்திச் சங்கம்
கல்முனை மாணவர் மீட்பு பேரவை
வலி. வடக்கு மீள்குடியேற்ற புனர்வாழ்வுச் சங்கம். (த-5)

### கடையடை...

ஆதரவு வழங்குவதா இல்லையா என்பது தொடர்பில் இன்னமும் தீர்மானிக்கவில்லை என்று அறிய முடிகின்றது.

காணாமற்போனோரின் உறவுகள் நாளை வியாழக் கிழமை வடக்கு கிழக்கு முழுவதிலும் கடையடைப்புப் போராட்டம் நடத்த அழைப்பு விடுத்திருந்தனர். தமது தொடர் போராட்டங்களுக்கும், கண்ணீருக்கும் தீர்வு கோரி, அரசுக்கும், பன்னாட்டுச் சமூகத்துக்கும் அழுத்தம் பிரயோகிக்கும் வகையில் கடையடைப்புப்போராட்டம்நடத்த அழைப்பு விடுத்திருந்தனர்.

இந்த அழைப்புக்கு அரசியல் கட்சிகள், பொது அமைப்புக்கள், வர்த்தக சங்கங்கள் எனப் பல தரப்பும் தமது ஆதரவுகளை வழங்கியுள்ளனர். கிழக்கு மாகாணத்தில் உள்ள வர்த்தகர் சங்கங்கள், அமைப்புக்கள் என்பன தமது வியாபார நிலையங்க ளைப் பூட்டி ஆதரவு வழங்கத் தீர்மானித் துள்ளன.

வடக்கு மாகாணத்தில் யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள வணிகர் கழகம் போராட்டத்துக்கு ஆதரவு வழங்குவதா இல்லையா என்பது தொடர்பில் கூடி ஆராய்ந்துள்ளது.

நாளை மறுதினம் வெள்ளி மறுநாள் சனிக்கிழமை, அக் ஷய திருதியை கொண்டாடப்படுகின்றது. இதற்கு முதல் நாள், அதாவது நாளை வியாழக்கிழமை கடையடைப்புப் போராட்டத்துக்கு ஆதரவு வழங்கி கடைகளை மூடினால் தமது வ[illegible]ரத்தில் பாதிப்பு ஏற்படும் என்று வணிகர் கழக நிர்வாகத்[illegible] சுட்டிக்காட்டி யுள்ளனர். இதன் காரணமாக, முடிவு எ[illegible] வணிகர் கழக நிர்வாகம் திணறுவதாக அறிய முடிகி[illegible]
(த[illegible]

### வவுனியாவில்...

ளின் கலந்துரையாடலில் இறுதி முடிவு எட்டப்பட்டது என்[illegible] விக்கப்பட்டது.

அத்துடன் வடக்கு -கிழகக்கில் நாளை இடம்பெறவுள்ள க[illegible]யடைப்புப் போராட்டத்துக்கு தாமும் ஆதரவு வழங்குவதா[illegible] இலங்கை போக்குவரத்து சபையின் வவுனியா சாலை தொழிற்சங்கம் அறிவித்தது.

இதேவேளை, வர்த்தகர் சங்கத்தின் ஆதர வையடுத்து வவுனியா மாவட்ட சிகை அலங்கரிப்பாளர்கள் சங்கம், முச்சக்கரவண்டி உரிமையாளர்கள் சங்கம் என்பன கடையடைப்பை மேற்கொள்வதற்கு முன்வந்துள்ளன என்று தெரிவிக்கப்பட்டது. (வ - 4)

### போராட்டங்களை...

பெரும் அசௌகரியம் ஏற்பட்டது.

உரிய முன்னறிவித்தல் எதுவுமின்றித் தொடர்ச்சியாகப் பல்வேறு தரப்பினரும் தொழிற்சங்க நடவடிக்கைகளை முன்னெடுப்பதால் மக்களுக்கு உரிய சேவை கிடைப்பதில் சிக்கல் நிலை உருவாகின்றது என்றும், போராட்டங்களின் பின்னணியில் ஒருசிலர் மாத்திரமே இருக்கின்றனர் என்றும் அரசு கருதுகின்றது.

இதன் காரணமாகவே, சிறப்பு இராணுவச் செயலணியொன்றை உருவாக்க அது திட்டமிட்டுள்ளது. இராணுவத்தில் பல்வேறு துறைகளிலும் நிபுணத்துவமிக்கவர்கள் இருக்கின்றனர். இதற்குப் புறம்பாக வெளியில் இருந்தும் ஓய்வுபெற்ற அதிகாரிகள் இந்தச் செயலணிக்கு உள்வாங்கப்படவுள்ளனர். திடீரெனத் தொடர் போராட்டங்கள் நடக்குமானால், அதனால் ஸ்தம்பிக்கும் சேவைகளை இந்தச் செயலணி முன்னெடுக்கும் வகையிலேயே அமைக்கப்படவுள்ளது. (த-5)

### அம்பனில்...

தங்கேணி பிரதேச மக்கள் நேற்று நிபந்தனையுடன் இணக்கத்தை வழங்கினர் என்று யாழ்ப்பாண மாவட்டச் செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

யாழ்ப்பாணத்தில் மணலுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இதுவரை காலமும் மணல் அகழப்பட்ட பிரதேசம் வனவளத் திணைக்களத்தினரால் முடக்கப்பட்டுள்ளது. புதிய இடத்தை அடையாளப்படுத்தும் நடவடிக்கைகள் அதிகாரிகளால் முன்னெடுக்கப்பட்டன. அம்பன் குடத்தனைப் பகுதியில் அந்தப் பகுதி மக்களின் சம்மதத்துடன் மணல் அகழ்வு மேற்கொள்வதற்கு ஆராயப்பட்டது.

அம்பனை அண்மித்த பகுதியிலுள்ள உயர்ந்த மணல் திட்டியிலிருந்து இயந்திரங்களைப் பயன்படுத்தாது மனித வளங்களை மட்டுமே பயன்படுத்தி மணல் அகழப்படும், அந்தப் பகுதியில் உள்ளவர்களுக்கு வேலை வாய்ப்பை வழங்கி மணல் விநியோகம் மேற்கொள்ளப்படும். சூழலுக்கும் பாதிப்பு ஏற்படாதவகையில் மணல் அகழ்வு இடம்பெறும் என மாவட்டச் செயலக அதிகாரிகளால் உறுதிப்படுத்தப்பட்டது.

"மணல் விநியோகம் என்ற பெயரில் நிறுவனம் ஒன்றால் பெரியளவிலான குழிகள் உருவாக்கப்பட்டன. அவை சுற்றுச் சூழல் பாதிப்பை ஏற்படுத்தியபோதும், அவற்றை சீர் செய்வதற்கு அதிகாரிகள் முன்வரவில்லை" என்று உள்ளூர் அமைப்புக்கள் குற்றஞ்சாட்டின

"கரையை அண்டிய பகுதியின் வீதியூடாக மணல் ஏற்றும் வாகனம் பயணிக்கக்கூடாது. பிரதேசத்தின் அபிவிருத்திக்காக அமைப்புக்களால் பரிந்துரை செய்யப்பட்ட திட்டத்தை மாவட்டச் செயலகம் நடைமுறைப்படுத்த வேண்டும் உள்ளிட்ட சில நிபந்தனைகளுடன் அம்பன் பகுதியில் மணல் அகழ்வதற்கு மருதங்கேணி பிரதேச மக்கள் நேற்று இணக்கம் தெரிவித்தனர் என்று மாவட்டச் செயலக வட்டாரங்கள் தெரிவித்தன. (வ-101)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருநெல்வேலி கிரிக்கெட் கழகம் வென்றது

யாழ்ப்பாணம், ஏப். 26
கே.ஸி.ஸி.ஸி. விளையாட்டுக் கழகம் நடத்தும் துடுப்பாட்டத் தொடரில் அண்மையில் இடம்பெற்ற ஆட்டமொன்றில் திருநெல்வேலி கிரிக்கெட் கழகம் வெற்றிபெற்றது.

கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் அண்மையில் இடம்பெற்ற ஆட்டத்தில் திருநெல்வேலி கிரிக்கெட் கழக அணியை எதிர்த்து கிறாஸ்கொப்பர்ஸ் விளையாட்டுக் கழக அணி மோதியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய கிறாஸ்கொப்பர்ஸ் விளையாட்டுக் கழக அணி 30 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்து 133 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக அஜித் 31 ஓட்டங்களையும், றஜீகரன் 22 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் சொந்தூரன் 4 இலக்குகளையும், சிவராஜ் 2 இலக்குகளையும், பிரதீஸ், சுரேந்திரன் இருவரும் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

134 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றியென்ற இலக்குடன் பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய திருநெல்வேலி கிரிக்கெட் கழக அணி 28.4 பந்துப் பரிமாற்றங்களில் 8 இலக்குகளை இழந்து வெற்றிபெற்றது. அதிகபட்சமாக கீர்த்திகன் 31 ஓட்டங்களையும், வலன்ராஜ் 28 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் கிறாஸ்கொப்பர்ஸ் அணியின் சார்பில் மதுசன், கபில், ராஜகாந்தன், சரண்ராஜ் ஆகியோர் தலா இரு இலக்குகளைக் கைப்பற்றினர். (ம-23)



# பொம்மர்ஸ் இறுதியில்

யாழ்ப்பாணம், ஏப். 26
பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரில் இறுதியாட்டத்துக்கு முன்னேறியது வதிரி பொம்மர்ஸ் விளையாட்டுக் கழகம்.

ஐக்கியத்தின் மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற அரையிறுதி ஆட்டத்தில் கரணவாய் கொலின்ஸ் விளையாட்டுக் கழகமும் வதிரி பொம்மர்ஸ் விளையாட்டுக் கழகமும் பலப்பரீட்சை நடத்தின. ஆட்டத்தின் 10ஆவது நிமிடத்தில் கொலின்ஸ் அணியின் விஸ்ணு தனது அணியின் முதல் கோலைப் பதிவுசெய்தார். 18 ஆவது நிமிடத்தில் பதில் கோலைப் பதிவுசெய்தது பொம்மர்ஸ். வேறெந்த மாற்றங்களும் ஏற்படவில்லை. முதல் பாதியின் முடிவில் இரு அணிகளும் தலா ஓர் கோலைப் பதிவுசெய்திருந்தன.

இரண்டாம் பாதியிலும் இரு அணிகளும் தலா ஒவ்வொரு காலைப் பதிவுசெய்தன. நிர்ணயிக்கப்பட்ட நிமிடங்களின் நிறைவில் தலா இரு கோல்கள் பதிவு செய்யப்பட்டதால் சமநிலைத் தவிர்ப்பு உதைகளில் வெற்றியைத் தீர்மானிக்க வெண்டிய நிலை ஏற்பட்டது. முடிவில் 3:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று இறுதியாட்டத்துக்குத் தகுதிபெற்றது பொம்மர்ஸ். சாரங்கன் ஆட்டநாயனானார். (ம-108-422)



# இமையாணன் மத்தி. வென்றது கிண்ணம்

யாழ்ப்பாணம், ஏப். 26
கரவெட்டி இளைஞர் கழகங்களுக்கு இடையிலான துடுப்பாட்டத்தில் பெண்கள் பிரிவில் இமையாணன் மத்திய அணி சம்பியனானது. இமையாணன் மத்திய விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற இறுதியாட்டத்தில் அல்வாய் மனோகரா அணியை எதிர்த்து இமையாணன் மத்திய அணி மோதியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய மனோகரா அணி நிர்ணயிக்கப்பட்ட 5 பந்துப் பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 40 ஓட்டங்களைப் பெற்றது.

அதிகபட்சமாக விதுசா 12 ஓட்டங்களையும், சாதனா 10 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் சஞ்சிகா 2 இலக்குகளையும் அபிநயா, பிரசாயினி ஆகியோர் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய இமையாணன் மத்திய அணி 3.2 பந்துப்பரிமாற்றங்களில்ஓர்இலக்கை மாத்திரம் இழந்து 44 ஓட்டங்களைப் பெற்று வெற்றிபெற்றது.

அதிகபட்சமாக கஜந்தினி 23 ஓட்டங்களையும், தர்சிகா 13 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் டிலக்சனா ஓர் இலக்கைக் கைப்பற்றினார். (ம-422-108)

# செந்தமிழ் சம்பியன்

கட்டைக்காடு சென். செபஸ்ரியன் விளையாட்டுக் கழகம் நடத்திய கால்பந்தாட்டத் தொடரில் உடுத்துறை செந்தமிழ் விளையாட்டுக் கழகம் கிண்ணம் வென்றது.

செபஸ்ரியன் விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்றுமுன்தினம் இறுதியாட்டம் நடைபெற்றது. கட்டைக்காடு சென். மேரிஸ் விளையாட்டுக்கழகத்தைஎதிர்த்துஉடுத்துறை செந்தமிழ் விளையாட்டுக் கழகம் மோதியது. ஆட்டம் ஆரம்பித்து அடுத்த நிமி டமே கோலொன்றைப் பதிவுசெய்து எதி ரணிக்கு அதிர்ச்சி கொடுத்தார் செந்தமிழின் மயூரன். அடுத்த சில நிமிடங்களில் யூட் ஓர் கோலைப் பதிவுசெய்ய முதல் பாதியின் முடி வில் 2:0 என்று ஆதிக்கம் செலுத்தியது செந்தமிழ்.

இரண்டாம் பாதியில் மாற்றத்தை ஏற்படுத்த சென். மேரிஸ் கடும் முனைப்புக் காட்டியது. அந்த அணியின் சுதர்சன் கோலொன்றைப் பதிவுசெய்தார். வேறெந்த கோல்களும் பதிவாகவில்லை. முடிவில் 3:1 என்ற கோல் கணக் கில்செந்தமிழ்அணிவெற்றிபெற்றது. (ம-108-23)

# டில்சானுக்கு பிடியாணை

இலங்கை அணியின் முன்னாள் கிரிக்கெட் வீரர் டில்சானுக்கு எதிராக கொழும்பு நீதிமன்ற தலைமை நீதிபதி லால் ரணசிங்க பிடியாணை பிறப்பித்தார்.

டில்சானுக்கு எதிரான வழக்கு ஒன்றில் அவர் மன்றில் முன்னிலையாகவில்லை. இதனையடுத்து அவருக்கு எதிராகப் பிடியாணை பிறப்பிக்கப்பட்டது. இந்த வழக்கின் விசாரணை அடுத்த மாதம் 24 ஆம் திகதி விசாரணைக்காக எடுத்துக்கொள்ளப்படவுள்ளது. இந்த நிலையில் அவர் தனது சட்டத்தரணியுடன் நேற்று மன்றில் சரணடைந்தார். (ம)





# அரியாலை மத்திய அணியை தோற்கடித்தது சென்றலைட்ஸ்

யாழ்ப்பாணம், ஏப். 26
கே.ஸி.ஸி.ஸி. விளையாட்டுக் கழகம் நடத்தும் துடுப்பாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டமொன்றில் அரியாலை மத்திய அணியை தோற்கடித்தது சென்றலைட்ஸ்.

தொடரின் ஆட்டங்கள் கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. நேற்றுமுன்தினம் மாலை இடம்பெற்ற ஆட்டத்தில் சென்றலைட்ஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து அரியாலை மத்திய விளையாட்டுக் கழக அணி மோதியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய அரியாலை மத்திய விளையாட்டுக் கழக அணி 22.3 பந்துப் பரிமாற்றங்களில் 50 ஓட்டங்களுக்கு சகல இலக்குகளையும் இழந்தது. விசாகன் பெற்ற 14 ஓட்ங்கட்களே அதிகபட்சம். பந்துவீச்சில் ஜெரிக் துசாந்தன் 4 இலக்குகளையும், அலன்ராஜ் 2 இலக்குகளையும், அலன்குமார், மயூரன் இருவரும்தலா ஓர் இலக்கையும் வீழ்த்தினர்.

51 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றியென்ற இலக்குடன் பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய சென்றலைட்ஸ் விளை யாட்டுக் கழக அணி 6.1 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 2 இலக்குகளை இழந்து வெற்றி பெற்றது.

அதிகபட்சமாக ஜேம்ஸ் ஜோண்சன் 27 ஓட்டங்களையும், கிருபாகரன் ஆட்டமிழக்காமல் 21 ஓட்டங்களையும் பெற்றனர். (ம-23)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# சாவகச்சேரி இந்துவுக்கு கிடைத்தது வெண்கலம்

யாழ்ப்பாணம், ஏப். 26
இளநிலைப் பிரிவினருக்கான தேசிய மட்டத் தடகளத் தொடரில் நேற்று நடைபெற்ற 18 வயதுப் பிரிவு பெண்களுக்கான தட்டெறிதலில் சாவகச்சேரி இந்துக் கல்லூரியைப் பிரதிநிதித்துவம் செய்த எஸ்.சங்கவி வெண்கலப் பதக்கத்தைக் கைப்பற்றினார்.
தியகம மகிந்த ராஜபக்ச பன்னாட்டு விளையாட்டரங்கில் போட்டிகள் நடை பெற்று வருகின்றன. நேற்று நடைபெற்ற 18 வயதுக்குட்பட்ட பெண்களுக்கான தட்டெறிதலில் சாவகச்சேரி இந்துக் கல்லூரியை பிரதிநிதித்துவம்செய்த எஸ்.சங்கவி 29.29 மீற்றர் தூரத்துக்கு எறிந்து வெண்கலப் பதக்கத்தைக் கைப்பற்றினார்.
(ம-422)




## நியூசி. அணி அறிவிப்பு

மினி உலகக்கிண்ணத் தொடருக்கான நியூசி லாந்து அணி அறிவிக்கப்பட்டது. இங்கிலாந்தில் எதிர்வரும் ஜூன் மாதம் மினி உலகக்கிண்ணத் தொடர் நடைபெறவுள்ளது. தொடரில் கலந்துகொள்ளவுள்ள தமது அணியின் விவரங்களை ஒவ்வொரு கிரிக்கெட் சபைகளும் அறிவித்து வருகின்றன. இலங்கை, தென்னாபிரிக்கா, பங்களாதேஷ் அணிகள் ஏற்கனவே அறிவிக்கப்பட்ட நிலையில் நியூசிலாந்து அணி நேற்று முன்தினம் அறிவிக்கப்பட்டது.
கேன் வில்லியம்சன் (தலைவர்), அண்டர்சன், போல்ட், புரூம், கிராண்ட்ஹோம், குப்தில், லாதம், மெக்கலிநகன், மில்னே, நீஸ்கம், ஜீத்தன் பட்டேல், ரோஞ்சி. சான்ட்னெர், சவுத்தி, ரெய்லர்.
(ம)

# கோலூன்றிப் பாய்தலில் வடக்கு பதக்கவேட்டை



யாழ்ப்பாணம், ஏப். 26
இளநிலைப் பிரிவினருக்கான தேசிய மட்ட தடகளத் தொடரில் 18 வயதுக்குட்பட்ட ஆண்கள் பிரிவு கோலூன்றிப் பாய்தலில் வடக்கு மாகாணத்துக்கு தங்கம், வெள்ளி, வெண்கலம் என மூன்று பதக்கங்களும் கிடைத்தன.
தியகம மகிந்த ராஜபக்ச விளையாட்டரங்கில் கடந்த ஞாயிற்றுக்கிழமை ஆரம்பித்துத் தொடர்ந்து போட்டிகள் நடைபெற்று வருகின்றன. நேற்றுநடைபெற்ற 18 வயதுக்குட்பட்ட ஆண்களுக்கான கோலூன்றிப் பாய்தலில் சாவகச்சேரி இந்துக் கல்லூரியைப் பிரதிநிதித்துவம் செய்த எஸ்.புவிதரன் 4.20 மீற்றர் உயரத்துக்குப் பாய்ந்து தங்கப் பதக்கத்தையும், தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியை பிரதிநிதித்துவம் செய்த எஸ்.கபில்சன் 4.10 மீற்றர் உயரத்துக்குப் பாய்ந்து வெள்ளி பதக்கத்தையும், க.கேதுசன் 4 மீற்றர் உயரத்துக்குப் பாய்ந்து வெண்கலப் பதக்கத்தையும் கைப்பற்றினர்.
(ம-422)

## வடக்கு மோசமான தோல்வி

யாழ்ப்பாணம், ஏப். 26
இலங்கை கிரிக்கெட் சபை தேசிய ரீதியில் நடத்திவரும் துடுப்பாட்டத் தொடரில் தென்மேல் மாகாண அணியிடம் தோல்வியடைந்தது வடக்கு மாகாண அணி.
கொழும்பு என்.சி.சி. மைதானத்தில் தொடரின் ஆட்டங்கள் இடம்பெற்று வருகின்றன. நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் வடமாகாண அணியை எதிர்த்து தென்மேல் மாகாண அணி மோதியது.
முதலில் துடுப்பெடுத்தாடிய வடக்கு மாகாண அணி 39.1 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்து127 ஓட்டங்களை மட்டுமே பெற்றது. பெர்னான்டோ 26 ஓட்டங்களையும், மதுசன் 17 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் தென்மேல் மாகாண அணியின் சார்பில் சிறிவர்த்தன 4 இலக்குகளையும், பெரேரா 2 இலக்குகளையும் கைப்பற்றினர்.
128 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றியென்ற இலக்குடன் பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய தென்மேல் மாகாண அணி 27.2 பந்துப்பரிமாற்றஙங்களில் 3 இலக்குகளை இழந்து இலக்கை அடைந்தது. அதிகபட்சமாக தர்சிக் 30 ஓட்டங்களையும், மதுசங்க 25 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் யதுசன், தசோபன் இருவரும் தலா ஓர் இலக்கைக் கைப்பற்றினர். வடக்கு மாகாண அணி இன்று இடம்பெறும் ஆட்டமொன்றில் ஊவா மாகாண அணியை எதிர்கொள்ளவுள்ளது.
(ம-23)



## பாண்டியன்குளம் ம.வி. வென்றது வெண்கலம்

யாழ்ப்பாணம், ஏப். 26
இளநிலைப் பிரிவினருக்கான தேசிய மட்ட தடகளத் தொடரில் நேற்று நடைபெற்ற 16 வயதுக்குட்பட்ட ஆண்களுக்கான 800 மீற்றர் ஓட்டத்தில் பாண்டியன்குளம் மத்திய மகா வித்தியாலயத்தை பிரதிநிதித்துவம் செய்த ஜே: ஜெனிஸ்குமார் வெண்கலப் பதக்கத்தைக் கைப்பற்றினார்.
தியகம மகிந்த ராஜபக்ச விளையாட்டரங்கில் நடைபெற்ற இந்தப் போட்டியில் 2 நிமிடம் 05 செக்கன்களில் இலக்கை அடைந்தே அவர் வெண்கலம் வென்றார்.
(ம-422)

# உடுவில் சம்பியன்

யாழ்ப்பாணம், ஏப். 26
யாழ்ப்பாணம் மாவட்ட பிரதேச செயலகங்களுக்கு இடையிலான எல்லேயில் ஆண்கள் பிரிவில் உடுவில் பிரதேச செயலக அணி சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்தது.
காரைநகர் சோலையான் பொது விளையாட்டு மைதானத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற இறுதியாட்டத்தில் உடுவில் பிரதேச செயலக அணியை எதிர்த்து மருதங்கேணி பிரதேச செயலக அணி மோதியது. இன்னிங்ஸ் முறையில் இந்த ஆட்டம் நடைபெற்றது.
முதலில் துடுப்பெடுத்தாடிய உடுவில் பிரதேச செயலக அணி 13 ஓட்டங்களைப் பெற்றது. பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய மருதங்கேணி பிரதேச செயலக அணி முதலாவது இன்னிங்ஸில் 3 ஓட்டங்களை பெற்றது. இதனால் அந்த அணி தொடர்ந்தும் இரண்டாவது இனிங்ஸில் துடுப்பெடுத்தாடப் பணிக்கப்பட்டது. இரண்டாவது இன்னிங்ஸில் மருதங்கேணி பிரதேச செயலக அணி 5 ஓட்டங்களை மாத்திரம் பெற்றது. இதனால் இன்னிங்ஸ் மற்றும் 5 ஓட்டங்களால் உடுவில் பிரதேச செயலக அணி வெற்றி பெற்று சம்பியனானது.
(ம-422-108)

## ஹாட்லிக்கு பதக்கங்கள்



இளநிலைப் பிரிவினருக்கான தடகளத் தொடரில் 20 வயதுக்குட்பட்ட ஆண்களுக்கான தட்டெறிதலில் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரிக்கு இரு பதக்கங்கள் கிடைத்தன.
தியகம மகிந்த ராஜபக்ச விளையாட்டரங்கில் போட்டிகள் நடைபெற்று வருகின்றன. நேற்று நடைபெற்ற 20 வயதுக்குட்பட்ட ஆண்களுக்கான தட்டெறிதலில் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியை பிரதிநிதித்துவம் செய்த எஸ்.பிரகாஸ்ராஜ் 37.74 மீற்றர் தூரத்தக்கு எறிந்து வெள்ளிப் பதக்கத்தையும், வி.ஜதார்த்தன் 36.50 மீற்றர் தூரத்துக்கு எறிந்து வெண்கலப் பதக்கத்தையும் கைப்பற்றினர்.
(ம-422-108)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேலைவாய்ப்பு

விருந்தினர் விடுதி ஒன்றிற்கு Roomboy தேவை. தங்கிநின்று பணிபுரியக்கூடியவராக இருக்க வேண்டும். வெளிமாவட்டத்தில் இருந்து வருபவர்களுக்கு தங்குமிடம் மற்றும் உணவிற்கு ஏற்பாடு செய்துதரப்படும்.

**0718 695 695**

இம்முறை தனயோகம் உங்களுடையதா?

| திகதி | வெற்றிவாரம் | வர்ணம் |
|---|---|---|
| 25.04.2017 | 2124 | நீலம் |

தனுசு 08 34 39 44

வெள்ளிக்கிழமை வெற்றிப்பொதி
ரூ 2, 000, 000/=

2017.04.28 ஆம் திகதி வெள்ளிக்கிழமை சிவப்பு நிற டிக்கட்டுக்களாகும்.
வெற்றி பெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>LW என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.

கோடிபதி

சீட்டிழுப்பு வாரம்: 128
வர்ணம் : இளஞ்சிவப்பு
சீட்டிழுப்பு திகதி: 25.04.2017

அடுத்த வெள்ளிக்கிழமைக்கான ஜக்பொட்
ரூ. 84,085,380/-

ஆங்கில எழுத்து மற்றும் இலக்கங்கள்
I 12 17 25 35

தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>JY என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.

செவ்வாய்க்கிழமை

உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம்: 559 வர்ணம்: மஞ்சள்
சீட்டிழுப்பு திகதி: 25.04.2017

வெற்றி இலக்கங்கள்
10 11 21 64 G

அடுத்த வெள்ளிக்கிழமைக்கான ஜக்பொட்
ரூ. 26,175,271/-

தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>JY என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.

## நாகபூசணி திருமண சேவை

மணமகன், மணமகள் **அனைவருக்கும்** பதிவுக் கட்டணங்கள் **இலவசம்** (26.04.2017 முதல் 07.05.2017 வரை) டாக்டர்கள், எஞ்சினியர்கள், எக்கௌண்டன்கள், அரசஉத்தியோகத்தர். தனியார் துறையினர் மற்றும் வெளிநாட்டு மணமகன்கள். மணமகள்கள் எம்மிடம் ஏராளமாக உள்ளனர். மிகத் துல்லியமாக பொருத்தம் பார்த்து நீங்கள் விரும்பும் மணமக்களை ஜாதகங்கள் உடன் தெரிவு செய்து தரப்படும்.

வாரத்தின் ஏழுநாள்களும் திறந்திருக்கும்.

**383/14B, கோயில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.**
**(நல்லூர் கோயில் வடக்குப் பக்கம்)**
**021 222 9306, 077 138 7596**
(3515)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி மரியமதலேனாள் (ராணி) அருளப்பு மரியதாஸ்



ஏழாலை மத்தியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மரியமதலேனாள் அருளப்புமரியதாஸ் (25.04.2017) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னாரின் நல்லடக்கம் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**ஏழாலை மத்தி.**
**ஏழாலை.**

தகவல்:
**அருளப்பு மரியதாஸ்**
**077 711 0085**

## செல்லையா மகாதேவன்

**(ஓய்வுபெற்ற ஆசிரியர்)**



கோப்பாய் தெற்கைப் பிறப்பிடமாகவும் உரும்பிராய் தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா மகாதேவன் (ஓய்வுபெற்ற ஆசிரியர்) நேற்று (25.04.2017) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**முதலாம் ஒழுங்கை.**
**கோப்பாய் வீதி.**
**உரும்பிராய் தெற்கு.**

**தகவல்: குடும்பத்தினர்.**
**021 223 0833,**
**077 602 2962**

*யாழ். மறைமாவட்ட மூத்த குருவான*

## எஸ்.இ.என்.குணசீலன் அடிகளார்



இறைவனடி சேர்ந்தார்.

யாழ். மறைமாவட்ட மூத்த குருவான எஸ்.இ.என்.குணசீலன் அடிகளார் 24.04.2017 திங்கட்கிழமை காலை இறைவனடி சேர்ந்தார்.

அன்னாரின் இறுதிச் சடங்குகள் (27.04.2017) வியாழக்கிழமை பி.ப. 3.30 மணிக்கு யாழ். புனித மரியன்னை பேராலயத்தில் யாழ். ஆயர் மேதகு கலாநிதி யஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை தலைமையில் நடைபெறும்.

தகவல்:
**அருள்திரு ப.யோசவ்தாஸ் ஜெபரட்ணம்**
**யாழ். மறைமாவட்ட குரு முதல்வர் ஆயர் இல்லம், யாழ்ப்பாணம்.**

## மரண அறிவித்தல்கள்

### அருள் தந்தை எஸ்.இ.என்.குணசீலன்



| தாயின் மடியில் | இறைவன் அடியில் |
|---|---|
| 04.06.1931 | 24.04.2017 |

யாழ். மறைமாவட்ட மூத்த குருவாகிய அருள்திரு எஸ்.இ.என்.குணசீலன் அடிகளார் 24.04.2017 திங்கட்கிழமை காலை இறைவனடிசேர்ந்தார்.

அன்னார் உசன் மிருசுவிலைச் சார்ந்த காலஞ்சென்றவர்களான சிங்க ராயர் தம்பித்துரை-மேரி ஏஞ்சல் தம்பதி யரின் மூத்த மகனும்காலஞ்சென்றஅருட்சகோதரர்S.E.B.ஜெயசீலன் (யாழ். மறைமாவட்டம்) Dr.S.E.R.இராஜசீலன் ஆகியோரின் அன்புச் சகோதரரும் திருமதி இரஞ்சிதா இராஜசீலன் அவர்களின் அன்பு மைத்துனரும் அருட்பணி R.C.M. அஞ்சலோ (பங்குத்தந்தை AUSTRIA) Rt.Rev. Dr.R.T.M. அன்ரோனியோ) Auxiliary Bishop. OLD CATHOLIC CHURCH. LONDON). R.P.M.நிக்லோ (பிறின்ஸ், முகாமைத்துவ பணிப்பாளர், YELLOWWIN MEDIA (PVT) LTD மற்றும் MIX SOLUTIONS INTERNATIONAL (PVT) LTD) ஆகியோரின் அன்புப் பெரிய தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிச் சடங்குகள் நாளை (27.04.2017) வியாழக்கிழமை மாலை 3.30 மணிக்கு யாழ். புனித மரியன்னை பேராலயத்தில் இறுதிக்கூட்டு திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை குருக்கள், துறவியர், உற்றார், உறவினர், நண்பர்கள் இறைமக்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்: Dr.S.E.R.இராஜசீலன் (சகோதரன்)**
**077 739 7886**

## திருமதி அன்னலட்சுமி குமாரசாமி



குமரக்கோட்டம் கோண்டாவிலை பிறப்பிடமாகவும் இணுவில் கிழக்கு, மஞ்சத்தடியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அன்னலட்சுமி குமாரசாமி நேற்று (25.04.2017) காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஐயாத்துரை இரத்தினம்மா தம்பதியினரின் அன்பு மகளும் காலஞ்சென்ற குமாரசாமியின் அன்புத் துணைவியும் சரஸ்வதி, காலஞ்சென்ற சிவசுந்தரி ஆகியோரின் சகோதரியும் திருமகள், சிவயோகநாதன், கலைவாணி, சிவகெங்கா(ஆசிரியை, மயிலிட்டி வடக்கு, கலைமகள் வித்தியாலயம்) ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ்சென்ற மகேந்திரன், தங்கவேல் (பொன்னுத்துரை ஸ்ரோர்ஸ் சொக்கன் கடை நல்லூர்) உதயகுமார் ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.04.2017) புதன்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக காரைக்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**மஞ்சத்தடி, இணுவில்**

தகவல்
**குடும்பத்தினர்.**
**077 607 4984**



## கைவிடப்பட்டது

ஐ.பி.எல். தொடரில் நேற்று இரவு நடைபெற விருந்த பெங்களூர் - ஹைதராபாத் அணிகளுக்கு இடையிலான ஆட்டம் மழை காரணமாகக் கைவிடப்பட்டது. இதனால் இரு அணிகளுக்கும் தலா ஓர் புள்ளி வழங்கப்பட்டது. (ம)

## இறைச்சிக் கோழிகள் விற்பனைக்கு

2kg இற்கு மேல் நிறையுடைய புறொயிலர் கோழிகள் விற்பனைக்கு உண்டு.

**077 245 3673**

## மரண அறிவித்தல்



### பொன்னையா டானியல் செல்வரெட்ணம்

காரைநகரை பிறப்பிடமாகவும் புன்னாலைக்கட்டுவனை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னையா டானியல் செல்வரெட்ணம் நேற்று (25.04.2017) காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தங்கத்திரவியத்தின் பாசமிகு கணவரும் காலஞ்சென்றவர்களான பொன்னையா சுந்தரம் தம்பதியரின் பாசமிகு மகனும் காலஞ்சென்றவர்களான பெரியதம்பி செல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற கிருஷன் மற்றும் திருமதி கிருஷா நிரஞ்சன் (ஆசிரியை, சென் ஜோன்ஸ் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தந்தையும் நிரஞ்சன் அருள்ராஜ் (சென். ஜோன்ஸ் கல்லூரி) அவரின் மாமனாரும் காலஞ்சென்றவர்களான திரு. அரியரெட்ணம், திருமதி அரியமலர் ஜெயரெட்ணம் மற்றும் திருமதி கிருபைமலர் குலசேகரம், திருமதி அன்புமலர் அல்பிரட், திருமதி அற்புதமலர் தனராஜசிங்கம், திருமதி ஆனந்தமலர் டேவிட் ஆகியோரின் அன்பு சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதி ஆராதனை பலாலி வீதி கோண்டாவிலிலுள்ள அவரது இல்லத்தில் இன்று (26.04.2017) புதன்கிழமை பி.ப 3.00 மணியளவில் நடைபெற்று யாழ். சென் ஜோன்ஸ் ஆலய சேமக்காலையில் பரிசுத்த நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
**திரு.நிரஞ்சன்**
**திருமதி. கிருஷா நிரஞ்சன் அருள்ராஜ்**
**இல.34, பலாலி வீதி, கோண்டாவில்.**
**077 435 6480**

NALIN Information Technologies Pvt Ltd.

**NALIN INFORMATION TECHNOLOGIES (PVT) LTD.**

வடமாகாண பாடசாலைகளுக்கு விசேட விலைகளில்

**Fingerprint Time attendance Device**




1000 Members Capacity

**Rs. 12,500.00 முதல்**
* இச்சலுகை 2017 வைகாசி 04வரை மட்டுமே.

பொருத்தற் செலவு மற்றும் போக்குவரத்துச் செலவு இலவசம்
மிகவிரைவில் தமிழில் Software தங்களுக்கு பெற்றுத்தரப்படும். * நிபந்தனைக்கு உட்பட்டது.

No. 195/2, Parameswara Junction,
Palaly Road, Jaffna.
021 222 1121
077 766 7975

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 26.04.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org